பிரியா கல்யாணராமன்

சம்போ சிவ சம்போ!

சத்குருவுடன் கைலாஷ் மானசரோவர் உற்சாக யாத்திரை

கைலாஷ் பற்றி சத்குரு

நான் பல சக்தியான இடங்களில் இருந்திருக்கிறேன். சக்தி மிகுந்த பலரை சந்தித்திருக்கிறேன். அவர்களை வணங்கும்போது உண்மையாகவே வணங்குகிறேன். இருந்தாலும் என் குருவை வணங்குவதைக் காட்டிலும் அது சிறிது குறைவாகவே இருக்கும். ஆனால் கைலா யத்தை வணங்கும்போது மட்டும் என் குருவை எப்படி வணங்குவேனோ அப்படியே வணங்குகிறேன்.

ॐ இந்த மலைகள் தெய்வீக அதிர்வுகளுடன் உயிரோட்டமாக உள்ளன. பல ஆன்மிக குருமார்கள் இந்த மலைகளை தங்கள் இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்து தங்கள் சக்தியால் ஒளிரச் செய்துள்ளனர். எனவே இந்த மலைகள், அனைத்து ஆன்மிக சாதகர்களுக்கும் ஒரு சிறந்த தூண்டுகோலாக இருந்து வருகின்றன.

ॐ நீங்கள் கைலாயம் சென்று, சில கணங்களுக்காவது உண்மையாகவே கைலாயத்துடன் ஒன்றியிருந்தால், உங்களுடைய வாழ்க்கை மீண்டும் அதே நிலையில் இருக்காது. கைலாயம் மனிதனின் அத்தனை கற்பனைகளுக்கும் அப்பாற்பட்டது. நீங்கள் மிகவும் தளர்வடைவதற்கு முன்பு அல்லது ஒய்வடைவதற்கு முன்பு இந்த மலைகளுக்குச் சென்று அதன் சக்தியான அதிர்வுகளில் திளைத்திட வேண்டும். இது என் விருப்பம் மற்றும் ஆசி.

ॐ கைலாய யாத்திரை போன்ற புனித யாத்திரைகள் செல்வது சாதனை செய்வதற்காக அல்ல; இது, 'நான்' என்னும் தன்மையை கட்டுப்படுத்தி, உங்களுள் இன்னும் ஆழமாகச் செல்ல ஒரு வாய்ப்பு.

ॐ கைலாயம் அளவற்ற அருளை வழங்கவல்லது. இத னுடைய சக்தியை நீங்கள் உணர்ந்தீர்கள் என்றால், இதன் சக்தியை உணர உங்களை நீங்கள் அனுமதித்தீர்கள் என்றால், உங்கள் பிறப்பு அர்த்த முள்ளதாக மாறும். ஆம்! இவ்விடம் அத்துணை மகத்துவம் வாய்ந்தது.

Love and Grace

Sadhguru



என்னுரை

கைலாஷ் யாத்திரை செல்லவேண்டும் என்ற ஆசை இல்லாதவர்கள் யாராவது இருக்க முடியுமா என்ன?

பூலோகத்தில் சிவபெருமானின் உறைவிடமான கைலாஷ் பற்றி பல வருடங்களாகப் படித்துப் படித்து அங்கே போகவேண்டும் என்ற பேரவா எழுந்தது, எனக்கும்.

அதுவும் உலகமே வியக்கும் சத்குருவுடன் பயணிப்பது என்றால் சும்மாவா?

சத்குருவிடம் கைலாஷ் பற்றிக் கேட்பதற்கு என்னிடம் கேள்விகள் ஏராளமாக இருந்தன.

"என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், அத்தனைக்கும் குமுதம் வாசகர்களுக்காக பதில் அளிக்க சத்குரு தயாராக இருக்கிறார்! அதுவும் கயிலைப் பயணத்தின்போதே நீங்கள் பதில்களைப் பெறலாம்" என்றது ஈஷா.

சந்தோஷம் பிடிபடவில்லை எனக்கு. இரட்டிப்பு சந்தோஷம்!!

புழுதியும் காற்றும் நிறைந்த திபெத் பீடபூமியின் சரிவான மலைப் பாதையில் லேண்ட் க்ரூஸர் காரை சத்குரு 200 கி.மீ. வேகத்தில் ஓட்டியபடியே, அவர் அருகில் அமர்ந்திருந்த என்னிடம், நான் கேட்ட எல்லாக்

கேள்விகளுக்கும் கொஞ்சம்கூட யோசிக்காமல் அருவிபோல பதிலை வாரி வழங்கிய அற்புதத்தை இப்போது நினைத் தாலும் மெய்சிலிர்க்கிறது.

இனிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய சத்குருவுக்கு நமஸ்காரங்கள்!

குமுதம் இதழில் வெளிவந்து வாசகர்களின் ஏகோபித்த வரவேற்பைப்பெற்ற 'சம்போ சிவ சம்போ' கைலாஷ் - மானசரோவர் சத்குருவுடன் ஒரு உற்சாக யாத்திரை தொடர், சுடச் சுட இப்போது நூல் வடிவில் உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நூலினை அழகுற வடிவமைத்த வரைகலை வல்லுநர் வீ. ஐயம்பெருமாள் அவர்களுக்கும், பிழை திருத்துதலில் ஆரம்பித்து, நூல் உருவாக்கம் வரை உதவி புரிந்த ஜெயாப்ரியன், குட்டி மு. வெங்கடேசன் ஆகியோருக்கும், குமுதம் நண்பர்களுக்கும் என் வந்தனங்கள். மற்றும் கயிலைப் பயணத்திற்கு நான் செல்லக் காரணமான நா.ரமேஷ் அவர்களுக்கும், பாலசந்திரன், சுபத்ரா ஆகியோருக்கும் என் நன்றிகள்.

இதனைப் புத்தகமாக வெளியிடத் தீர்மானித்து என்னை ஊக்கப்படுத்தி, இவ் வாய்ப்பினை அளித்த குமுதம் நிறுவன சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. பா. வரதராசன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளை என்றென்றும் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நூலைப் படிக்கும் உங்களுக்கு அந்தக் கயிலாயக் கடவுள் எல்லா நலனையும் தர மனமாரப் பிரார்த்திக்கிறேன்.

ப்ரியமுடன்,

ப்ரியா கல்யாணராமன்

1

சம்போ சிவ சம்போ

இந்தப் புனிதத் தொடரைப் படிக்க ஆரம்பிக்கும் உங்களை, உங்கள் பெயரைச் சொல்லி அந்த சிவபெருமான் மூன்று முறை மனமார நினைக்க வேண்டும் என்று அவரைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

என்ன இது? முதல் வரியே திமிர்த்தனமாக இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா?

நாம்தான் கடவுளை நினைப்போம், இறைவனின் பெயரை உச்சரிப்போம். அந்தக் கடவுளே நம்மை நினைத்துப் பார்க்க வேண்டுமா? நம் பெயரைச் சொல்ல வேண்டுமா? அதுவும் மூன்று முறை! என்னடா இது அக்கிரமமாய் இருக்கிறதே? என்று முணுமுணுக்கிறீர்களா?



அந்தப் பஞ்சாயத்துக்கு அப்புறம் வருகிறேன். முதலில் கீழே உள்ள ஸ்தோத்திரத்தையோ, அல்லது அதற்குக் கீழே உள்ள தமிழ் அர்த்தத்தையோ அல்லது இரண்டையுமோ நீங்கள் மூன்று

முறை சொல்லுங்கள். முடிந்தால். தினம் ஒரு முறையாவது சொல்லுங்கள். அந்த சிவபெருமான் உங்களை நினைப்பதற்கு இதுதான் ஒரே வழி!

ஓம் ஓம் ஓம்
சஹனா வவது சஹனௌ புனக்து
சக வீர்யம் கரவாவஹை
தேஜஸ்வினாவதீத மஸ்து
மாவித் விஷா வஹை ஹி
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

ஓம் ஓம் ஓம்
கூடியிருப்போம், கூடியிருந்து உண்போம்
கூடியிருந்து நம் ஆற்றலைப் பெருக்குவோம்
நம்முடைய ஆற்றல் அளவற்றதாகட்டும்
நம்மிடம் தீய உணர்வுகள் இல்லாது போகட்டும்
அமைதி அமைதி அமைதி!

சரி, விஷயத்திற்கு வந்து விடுகிறேன். ஹிந்துக்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது காசிக்குப் போய் வந்துவிட வேண்டும் என்று நினைப்பார்கள். திட்டமிட்டுப் போயும் வருவார்கள்.

ஆனால் கைலாஷ் அப்படி இல்லை. கைலாயம் போக வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் எல்லாம் போய் வந்துவிட முடியாது. காசு இருக்கிறது. லீவு இருக்கிறது. தெம்பும் இருக்கிறது. கயிலைக்குப் போகப் போகிறேன் என்று பந்தா காட்டிவிட்டெல்லாம் அங்கே போக முடியாது.

ஆமாம். சிவபெருமானின் உறைவிடமாக, சிவனின் வடிவமாகவே கருதப்படும் **கயிலாயத்திற்கு நீங்கள் செல்ல வேண்டுமென்றால் அந்த சிவன் உங்களை மூன்று முறை உற்சாகமாக நினைக்க வேண்டும்!**



யாக்-திபெத்தின் அப்பாவி மிருகம்

முதல் முறை அவர் உங்களை நினைக்கும்போதுதான் கயிலை என்று ஓர் இடம் இருப்பதே உங்களுக்குத் தெரிய வரும். இரண்டாம் முறை உங்கள் பெயரை அவர் உச்சரிக்கும்போது கயிலை செல்ல வேண்டும் என்ற ஆசையும், அதற்கான ஏற்பாடுகளையும் நீங்கள் செய்வீர்கள். மூன்றாம் முறை உங்களை நினைத்து 'நீ வா' என்று அந்த சிவா நினைத்தால்தான் நீங்கள் கைலாஷுக்கு பத்திரமாகச் சென்று வரமுடியும் என்று சொல்கிறது, நேபாள மகாத்மியம்.

அப்படி என்னதான் இருக்கிறது கயிலையில்?
அங்கே சிவனின் உருவம் தெரியுமா?
மயிலில் முருகன் பறந்து செல்வாரா?
மேகத்தில் பிள்ளையார் தெரிவாரா?

அத்தனைக்கும் விடை சொல்வதோடு, அந்த ஈசன் அருளால் நீங்கள் கயிலைக்குச் செல்ல அனுமதி கிடைக்கும்போது பத்திரமாக அங்கே செல்வது எப்படி? என்னென்ன எச்சரிக்கை நடவடிக்கைகள் தேவை? என்ன பொருட்களைக் கொண்டு செல்ல வேண்டும்? என்ன செலவாகும்? உடல் நலமுடன் சென்று வருவது எப்படி? என்று அத்தனை விஷயங்களையும் உங்களுக்குச் சொல்வதுதான் இந்தத்

தொடரின் நோக்கம். **ஸ்பெஷல் அம்சமாக கயிலைப் பயணம் முழுக்கக் கூடவே சத்குரு ஜக்கி வாசுதேவ்!**

சத்குருவை இதுவரை யாரும் சந்திக்காத ஒரு சூழலில் நான் சந்தித்தேன். அவரிடம் கைலாஷ் சம்பந்தமான கேள்வி களை மட்டும் கேட்டேன்.

1. மானசரோவர் தடாகத் தண்ணீரை எந்தக் காரணம் கொண்டும் வீட்டுக்கு எடுத்துச் செல்லாதீர்கள் என்று சொல்கிறீர்களே, ஏன்?

2. பரிக்கிரமா எனப்படும் கைலாஷ் மலையைச் சுற்றி வருவதை நீங்கள் ஆதரிப்பதில்லையே, எதனால்?

3. உலகில் எத்தனையோ மலைகள் இருக்க கைலாஷிற்கு மட்டும் அப்படி என்ன சிறப்பு?

4. இந்திரனின் தேவலோகமும், மகாவிஷ்ணுவின் பாற்கடலும் மேல் உலகத்தில் இருக்க, சிவனின் இருப்பிடமான கைலாஷ் மட்டும் பூமியில் இருப்பது ஏன்?

கைலாஷ் பற்றி எத்தனை கேட்டாலும் படபடவென யோசிக்கக் கூட நேரம் எடுக்காமல் பதில் சொன்ன சத்குருவைப் பார்த்ததும் எனக்கு பிரமிப்பாக இருந்தது.

தமிழ் மூதாட்டி ஔவை, கயிலை சென்று வந்த கதை உங்களுக்குத் தெரியுமா?

சுந்தரரும், சேரமான் பெருமாளும் கயிலை செல்வதைக் கண்டார் ஔவையார்.

உடனே தானும் அவர்களுடன் செல்லவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது அந்த குடுகுடு கிழவிக்கு.

அப்போது அவர் பிள்ளையாருக்கு பூஜை செய்து கொண்டிருந்தார்.

கயிலை செல்லவேண்டும் என்கிற ஆர்வத்தில் அவசர அவசரமாக பூஜை செய்தார். விநாயகருக்குச் சிரிப்பு வந்து விட்டது.



திபெத்திய டிரைவர்களுடன் நிலாக்ஸ் மூடில் சத்குரு

"என் தந்தையைப் பார்க்கச் செல்லும் அவசரத்தில் என்னை சரியாக கவனிக்க வேண்டாமா? ஔவையே, பூஜையை நீ நிதானமாகச் செய். சுந்தரரும் சேரமானும் கயிலை செல்வதற்கு முன், நான் உன்னை அங்கே கொண்டு போய்ச் சேர்க்கிறேன்" என்றார் பிள்ளையார்.

நெகிழ்ந்து போன ஔவை, பூஜையைப் பொறுமையாக முடித்தாள்.

அடுத்த விநாடி... விநாயகர் தன் துதிக்கையால் ஔவையாரைத் தூக்கி, அப்படியே அன்பாக ஒரு வீசு!

தமிழ்ப்பாட்டி மறுவிநாடியே எல்லோருக்கும் முன்னால் கயிலை முன் நின்றாள்.

நாம் ஔவையார் இல்லை. அதனால், நமக்கு உதவ பிள்ளையாரும் உடனே வரப்போவதில்லை!

நாம் சென்னையிலிருந்து நேபாளம் (காட்மாண்டு) அங்கிருந்து திபெத் (சைனா) என்று நாடுகளைக் கடந்து, குளிரில் நடுங்கி, பரவசத்தில் மிதந்து கயிலைநாதனை தரிசித்து பத்திரமாய்த் திரும்பி வர குறைந்தது 18 நாட்களாவது ஆகும்!

காலை 6 மணிக்கு சென்னையிலிருந்து டெல்லிக்கு விமானம். உடனே அங்கிருந்து வேறு ஃப்ளைட்டில் நேபாளத் தலைநகர் காட்மாண்ட் பயணம் என்றது, நான் சென்ற ஈஷா ஃபவுண்டேஷனின் சார்ட்.

நான்கு மணிக்கே விமான நிலையத்தில் அனைவரும் ஆஜர். 150 பேர்!

ஈஷாவிலிருந்து வாலண்டியர் ஒருவர் எங்கள் அனைவருக்கும் அந்த அதிகாலையிலேயே ஒரு பாக்ஸில் இட்லி, வடை கொடுத்தார்.

"என்னது காலங்கார்த்தால இட்லி, வடை" என்று வெறுப்பாகக் கேட்டார் ஒரு நண்பர்.

"ஒரு பிளேட் இட்லி கிடைக்குமான்னு நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு கைலாஷ்ல அலைவே பாரு. அப்ப இதோட அருமை தெரியும்" என்று புன்சிரிப்புடன் சொன்னார், ஏற்கெனவே கைலாஷ் சென்று வந்த இன்னொரு நண்பர்.

நான் அதிர்ச்சியுடன் அவர்களைப் பார்த்தேன். (அந்த சாபம் பலித்ததைப் பின்னர் சொல்கிறேன்). அடுத்த அத்தியாயத்தில், உலகின் முதல் ஹிந்துக்கோயிலின் திவ்ய தரிசனம்.

2

சிவன் முதன்முதலில் வந்த இடம்!

மேகாளத்தின் மீது பறந்து கொண்டிருந்த விமானம் ஓர் இடத்தில் அந்தரத்தில் சில நிமிடங்கள் அப்படியே நின்றது.

"எல்லோரும் ஜன்னல் வழியே உங்கள் இடது புறம் பாருங்கள்" என்று, அசந்து கிடந்த எங்களை பைலட்டின் கரகர குரல் தட்டி எழுப்பிற்று.

எட்டிப் பார்த்தால் புராணப் படத்தில் வருவது போல மேக, மேகக் கூட்டங்கள். தொலைவில் கவிழ்த்துப் போட்ட பம்பரம் மாதிரி ஒரு மலைத் துணுக்கு. உற்றுப் பார்த்தால் இன்னும் கீழே தொடர்ச்சியாய் சின்னச் சின்னதாய்



மலைத் தொடர்கள் கண்ணுக்குத் தெரிய, அந்த பம்பரம் மட்டும் எல்லாவற்றிலும் உயரமாய், ஆனால் சாதுவாய்த் தெரிந்தது!

அது என்ன தெரியுமா? உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரமான எவரெஸ்ட்தான் அது!

எல்லோரும் பரவசமாய்ப் பார்க்க, கைலாஷ் பயணம் பற்றி சத்குரு கூறிய ஒரு கருத்து எனக்கு நினைவுக்கு வந்தது.

"கயிலைக்குப் போய் வருகிறோம் என்று யாரும் பெரிதாய் நினைக்காதீர்கள். அங்கே செல்வது பெரிய சாதனை கிடையாது. அதிலேயே நின்றுவிடக் கூடாது. வேறு ஒரு டைமன்ஷனில் உங்களை நீங்களே மாற்றிக் கொள்ள ஒரு வாய்ப்புதான் அது. உங்களை மேம்படுத்திக் கொள்ள தொடர்கின்ற விஷயம்" என்று அவர் சொன்னது, இந்த எவரெஸ்ட்டைப் பார்க்கும்போது தோன்றிற்று. உலகத்திலேயே மிக உயரம், 8848 மீட்டர் என்ற பெருமையெல்லாம் இருந்தாலும், ஒன்றுமே தெரியாதது போல அடக்கமாய் ஆரவார மில்லாமல் காட்சி தரும் இந்த எவரெஸ்ட் எனக்கு ஏதோ



பசுபதிநாத் ஆலயம்

தத்துவம் சொல்வது போல் பட்டது. அந்த எவரெஸ்ட்டைப் பிடித்துக் கொண்டே நடந்தால் கைலாஷ் போய்விடலாம் என்று குழந்தைத்தனமாகவும் தோன்றிற்று.

எவரெஸ்ட், எவரெஸ்ட் என்று உலகமே கொண்டா டினாலும் நேபாள மக்கள் மட்டும் அதை எவரெஸ்ட் என்று அழைக்க மாட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஆமாம். அவர்கள் 'சாகர் மாதா' என்றுதான் அதனை அழைக்கிறார்கள். கடல் அன்னை. அதாவது கடல் போல் பெரிய மலை! சகர மகாராஜா தவம் செய்த இடம் என்பதாலும் இந்தப் பெயர் வந்திருக்கலாம்.

எவரெஸ்ட் என்று யாராவது சொன்னாலே நேபாளிகள் வெறுப்பாகப் பார்க்கிறார்கள். ஏன்?

இந்த மலைச் சிகரத்தை ஜார்ஜ் எவரெஸ்ட் என்ற பிரிட்டிஷ் அதிகாரிதான் அளந்து, உலகிலேயே உயர்ந்த சிகரம் என்பதைக் கண்டுபிடித்தார். அதனால் இந்தச் சிகரத்திற்கு வெள்ளைக்காரர்கள் அவரது பெயரையே சூட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

காலம் காலமாய் இருக்கும் மலையின் உயரத்தை அளந்த சர்வேயரின் பெயரைப் போய், அந்த மலைக்கே வைப்பது

என்ன நியாயம்? சாகர் மாதாதான் சரியான பெயர் என்று எனக்கும் தோன்றியது.

எங்கள் விமானம் நேபாளத் தலைநகர் காட்மாண்டில் இறங்குவதற்குள் நேபாளம் பற்றிச் சில விஷயங்களைச் சொல்லிவிடுகிறேன்.

'நே' என்ற முனிவருக்குக் காட்சி தந்த **சிவபெருமான், "முனிவரே, இது எனக்குப் பிடித்த பூமி. இதனைப் பாதுகாப்பாயாக" என்று கூறினார்.** நேபாள மொழியில் பாள் என்றால் பாதுகாத்தல் என்று அர்த்தம். நேபாள்!

1. உலகின் முதல் இந்து தேசம்,
2. ருத்திராட்சம் விளையும் பூமி,
3. சீதை பிறந்த மண்,
4. பெண் குழந்தையை தெய்வமாக வணங்கும் ஊர்,
5. சாளக்கிராமம் கிடைக்கும் தேசம்,
6. 108 திருப்பதிகளுள் ஒன்றான முக்திநாத் உள்ள நாடு,

என்று ஏகப்பட்ட சிறப்புகளைக் கொண்டது நேபாளம்.

காட்மாண்ட் திரிபுவன் விமான நிலையத்திலிருந்து நாங்கள் தங்கப்போகும் ராடிஸன் ஓட்டலுக்கு கால் மணி நேரம் கார் பயணம்தான். ஆனால் நாங்கள் செமை டிராஃபிக்கில் மாட்டிக் கொண்டோம். நம் ஊரைவிட அழுக்கான சாலைகள். குறுகலான பாதைகள். ரோட்டில் இடது, வலது பார்க்க எந்த வாகன ஓட்டியும் தயாராயில்லை. ஹார்ன் கூட அடிக்காமல் எருமை மாட்டில் மழை பெய்ததைப்போல வாகன ஓட்டிகள் அமைதி காத்தார்கள். எல்லா வண்டிகளும் ஓட்டை உடைசல்கள், மருந்துக்கு ஒரு போலீஸ் கூட கண்ணில் படவில்லை. வாழ்க மாவோ கம்யூனிஸ்ட் கூட்டணி ஆட்சி!

சில வருடங்களுக்கு முன்பு நான் நேபாள் சென்றபோது பத்து அடிக்கு ஒரு போலீஸ் பூத் இருந்தது. துப்பாக்கி ஏந்திய காவலர்கள் பதுங்கு மேடையில் பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். ராணுவ ஆட்சி!



இப்போது பேஸ்து அடித்துக் கிடக்கிறது நாடு. சொன்னால் நம்ப மாட்டீர்கள். இரண்டு மணி நேரம் பஸ்ஸிலேயே உட்கார்ந்திருந்தோம். சிலர் யோகா பண்ண ஆரம்பித்துவிட்டார்கள்.

வெறுத்துப் போன நண்பர் கே.சுப்ரமணி, "பேசாமல் நாமெல்லாம் நடந்து விடலாம். அரை மணி நேரத்தில் ஓட்டலுக்குப் போய் விடலாம். கைலாஷ் மலை ஏறுவதற்கு நமக்கு நிறைய நடைப்பயிற்சி வேண்டும் என்று சத்குரு சொன்னாரே, அதற்கான நேரம் இதுதான். இறங்குங்கள்." என்றார். மூட்டை முடிச்சுகளுடன் முதலில் இறங்கியது எங்கள் குழுவில் வந்த பெண்கள்தான்!

அப்புறம் என்ன? முக்கால்வாசிப் பேர் நடக்கத் துவங்கினோம். ஹி... ஹி... நானும்தான்! சாலையில் என்னைக் கவர்ந்த விஷயம். **நேபாள் மக்கள் அனைவரும் நெற்றியில் விபூதியோ, குங்குமமோ, சந்தனமோ அணிந்திருந்தார்கள்.** நம் ஊரில் திருமணமான பெண்கள் உச்சி வகிட்டில் குங்குமம் இட்டுக் கொள்வதுபோல் இங்கே எல்லாப் பெண்களும், பள்ளி செல்லும் சின்னக் குழந்தைகள் கூட உச்சிப் பொட்டு இட்டிருப்பது கொள்ளை அழகு.

நாங்கள் ஓட்டலைச் சென்று அடைவதற்கும், பஸ் காலியாக டிராஃபிக்கில் நீந்தி வருவதற்கும் சரியாக இருந்தது. ராடிஸன் ஓட்டலிலும், சங்கர் ஓட்டலிலும் தங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 25 வகை உணவுகளுடன் பஃபே!

ஈஷாவைச் சேர்ந்த சுவாமி உல்லாசாவிடமும், மா கம்பீரியிடமும் "சத்குருவை நான் சந்திக்க எப்போது வாய்ப்புக் கிடைக்கும்?" என்று கேட்டேன்.

மறுநாள் சத்குருவின் சத்சங் இருக்கிறது. அவர் என்னை கைலாஷ் போவதற்குள் சந்திப்பார் என்று சொன்னார்கள்.

மறுநாள் நேபாளத் தலைநகரில் உள்ள முக்கியமான இடங்களுக்கும் கோயில்களுக்கும் சென்று வந்தோம். அவற்றைப் பற்றிச் சொல்வதற்கு முன் அன்றிரவு ஓட்டல் சங்கரில் நடந்த சத்குருவின் சத்சங் பற்றிப் பார்த்து விடலாம்.

"கயிலாயத்திலிருந்து சிவன் முதன் முதலில் வந்த இடம் தான் பசுபதிநாத். கயிலாயம் செல்பவர்கள் அனைவரும் இங்கே சென்றுவரவேண்டும்."
உலகின் முதல் கோயிலான பசுபதிநாத் ஆலயத்தின் சிறப்புகளைச் சொன்ன சத்குரு **"எல்லோரும் எவரெஸ்ட்டைப் பார்த்தீர்களா? நான் அதன் உச்சிக்குச் சென்றிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?"** என்றார்.

ஆச்சர்யமாய் அனைவரும் பார்க்க, கள்ளம் கபடமற்ற தெய்வீகமான பளீர் சிரிப்புடன் சொல்ல ஆரம்பித்தார் சத்குரு ஜக்கிவாசுதேவ்..

3

ஏழு சக்கரங்கள்!

"மகாபாரதக் காலம் அது.
பாண்டவர்கள் ஐவர், நூறு கௌரவர்களையும் வீழ்த்திய நேரம் அது.

போரில் வெற்றி பெற்றாலும் சொந்தக்காரர்களையே கொன்றதால் கோத்ர தோஷம் அவர்களைப் பிடித்தது. துன்புறுத்திற்று.

அதற்கு ஒரே வழி, சிவனின் தரிசனம்தான் என்று உணர்ந்து, பஞ்ச பாண்டவர்கள் கயிலாயம் நோக்கி விரைந்தார்கள்.



உடனே அவர்களுக்குக் காட்சி தர விரும்பாத சிவபெருமான் கொஞ்சம் போக்குக் காட்டினார். காளையாக உருமாறி ஓடி ஒளிந்தார். அவர்களும் விடாமல் தொடர்ந்தார்கள்.

நேபாள் வந்து சேர்ந்தார் ஈசன். அந்த மந்திர பூமி அவருக்கு மிகவும் பிடித்துப் போனது. அங்கேயே இருக்க முடிவு செய்தார்.

இப்போது பசுபதிநாத் ஆலயம் இருக்குமிடத்தில் பூமிக்குள் காளை உருவில் புதைந்து கொண்டார் இறைவன்.

பாண்டவர்கள் விடவில்லை. விடாமல் தொடர்ந்தார்கள். பூமிக்குள் ஒளிந்து போக்குக் காட்டிக் கொண்டிருப்பது தெரிந்து அவரை எப்படியும் தரிசனம் செய்துவிடவேண்டும் என்று விரும்பி, பயபக்தியுடன் அந்த இடத்தில் தோண்டி, வாலைப்பிடித்து வெளியில் இழுத்தார்கள்.

பூமிக்குள்ளிருந்து ஒரு புயலாக, விஸ்வரூபத்துடன் வெளிப்பட்டார் சிவபெருமான்.

அவருடைய முகம், நெற்றி, கொம்பு வெளிப்பட்ட இடம்தான் பசுபதிநாத்.

திமில் வெளிப்பட்ட இடம் கேதார்நாத்.



முன்னங்கால் வெளிப்பட்ட இடம் துங்காநாத்.

காளையின் ரோமங்கள் வெளிப்பட்ட இடம் கல்பநாத்.

தொப்புள் வெளிவந்த இடம் மத்திய மகேஷ்வர். இவ்வாறு ஏழு இடங்களில் அவை வெளிப்பட்டன.

கடவுளிடம் ஒன்றக்கூடிய ஏழு இடங்கள். சக்தி மிக்க, எனர்ஜி தரக்கூடிய ஏழு சக்கரங்கள்.

மனித உடம்புக்கும், ஏழு சக்கரங்களுக்கும் சம்பந்தம் உண்டு. நமது உடல் ஏழு சக்கரங்களைக் கொண்டது.

சத்சங்கத்தில் நேபாளத்தின் பசுபதிநாதரின் கதையைச் சொல்ல ஆரம்பித்த சத்குரு, "கோவையில் உள்ள தியான லிங்கம் இது போல் ஏழு சக்கரங்களை வைத்து உருவாக்கப்பட்டதுதான்" என்றார்.

மேலும் முக்கியமாக அவர் சொன்னது, "சிவனின் தலைப்பகுதி பசுபதிநாத்தில் வெளிப்பட்டதால், கோயிலுக்குச் செல்பவர்கள் தலைக்குக் குளித்துவிட்டு செல்லுங்கள். தலை கொஞ்சம் ஈரமாகவே இருக்கட்டும். அங்கு சென்று தியானம் செய்தால் மிகவும் சிறப்பாக உணர்வீர்கள்" என்றார்.

"இப்போது நான் சொன்ன கதை, காலம் காலமாக நடந்த சம்பவங்கள். வழிவழியாக அவற்றில் இடைச்செருகலோ,

மாற்றங்களோ ஏற்பட்டிருக்கலாம். எமோஷனலாக பக்தியில் ஈடுபாடு வருவதற்காக ஏற்படுத்தப்பட்டவை இது போன்ற கதைகள். அதனால் நான் சொன்ன கதைகளை எல்லாம் மறந்துவிட்டு, ஓப்பன் மைண்டுடன் பசுபதிநாத் சென்று வாருங்கள். நல்ல பலனை அடைவீர்கள்" என்றார்.

"பான் கல்ச்சர், புத்திஸம், ஹிண்டுயிசம் எல்லாம் கலந்த பூமியாக இப்போது நேபாள் இருக்கிறது. வேறு எந்த நாட்டையும் விட முழுக்க முழுக்க ஆன்மிக பூமியாக மட்டுமே இருந்த நாடு இது. இங்குள்ள கோயில்கள் இடிக்கப்பட்டுவிட்ட போதிலும்கூட, காற்றில் கலந்திருக்கும் மந்திர ஜபங்களை யாராலும் அகற்ற முடியாது.

என்ன செய்வது? இப்போது உள்ளவர்களுக்கு இதன் மகத்துவமோ முக்கியத்துவமோ தெரியவில்லை. ஒரு மீன் மார்க்கெட் போல ஆகிவிட்டது. இப்படி இதன் சிறப்பு தெரியாமல் மக்கள் இருப்பது சோகம் என்றால், அப்படி என்னதான் செய்தாலும், இந்த இடத்தின் வைப்ரேஷனோ, எஸன்ஸோ அதாவது சக்தியோ இன்னும் போகாமல், கொஞ்சமும் குறையாமல் அப்படியே இருப்பதுதான் இந்த மந்திர பூமியின் மகத்துவம்" என்றார் சத்குரு.



நேபாள மழலைகள்

பின்னர் பலரும் சத்குருவிடம் கேள்விகள் கேட்டார்கள். சிலவற்றிற்கு சீரியஸாகவும், சிலதிற்கு ஜாலியாகவும் பதில் தந்தார் சத்குரு.

"இத்தனை பேர் கைலாஷ் செல்வதால் க்ளோபல் வார்மிங் எனப்படும் பூமி வெப்பமயமாதல் ஏற்படுமா?" என்றார் ஒருவர்.

"கட்டாயம் ஏற்படும். சேதம் கூட உண்டாகும். அதனால் மலையும் மண்ணும் ஒண்ணும் ஆகாது. நாம்தான் பாதிக்கப்படுவோம்" என்றவர், "இன்னும் கொஞ்ச காலத்தில் உலகத்தின் பார்வை திபெத்தின் மீது விழும். மிகவும் அபூர்வமான கனிமப் பொருள் இந்த திபெத்தில்தான் கிடைக்கும் என்ற நிலை வரும். அப்போது திபெத்தின் முக்கியத்துவம் உணர்ந்து உலகமே இங்கே வரும். அத்தனையையும் அபகரிக்க சீனா முயலும்" என்றார்.

பின்னர் எவரெஸ்ட்டின் உச்சியில் தான் சென்ற விஷயத்தை வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

"சில வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் எவரெஸ்ட் ஏறினார். அவர் என்னுடைய மாணவர். தேகப்பயிற்சியோடு யோகப் பயிற்சியும் தேர்ந்தவர். **அவர் முக்கால் மலை ஏறியிருக்கும்போது, ஆக்ஸிஜன் தட்டுப்பாட்டாலோ அல்லது குளிர் மைனஸ் டிகிரிக்கும் கீழே போனதாலோ தெரியவில்லை, அவருக்கு உடல் நலம் கெட்டுவிட்டது.** மூச்சுத் திணறல். அந்த இடத்தில் என்ன செய்ய முடியும்?

அவர் செய்தது இதுதான். என்ன ஆனாலும் ஆகட்டும் என்று என்னிடம் கற்றுக் கொண்ட க்ரியா எனப்படும் மூச்சுப்பயிற்சியைச் செய்ய ஆரம்பித்துவிட்டார். கொஞ்ச நேரத்திலேயே அவருக்கு உடல் சீராகி, தயார் நிலைக்கு வந்துவிட்டது. அப்புறம் என்ன? அவர் வெற்றிகரமாக எவரெஸ்ட் ஏறிவிட்டார். அது மட்டுமல்ல, நான்தான் அவரைக் காப்பாற்றினேன் என்று அவர் நம்பியதால் என்னுடைய புகைப்படத்தையும் எவரெஸ்ட்டின் உச்சியில் கொடியோடு இணைத்து பதித்துவைத்துவிட்டு

வந்துவிட்டார். என்னிடம் பெருமையாக அவர் இதைச் சொன்னார். என்ன அப்படியானால் நான், எவரெஸ்ட் உச்சியில் இருக்கிறேன்தானே?" தனது பளீர் சிரிப்பினால் அந்த இடத்தையே கலகலப்பாக்கினார் சத்குரு.

சத்சங்கத்தின் முடிவில் சத்குரு அனைவருக்கும் ஆசிர்வாதம் செய்து, மலர்களைத் தர, பிரம்மசாரிகள் அபயசூத்ரா எனப்படும் மஞ்சள் கயிற்றை எல்லோர் கையிலும் கட்டினார்கள். எனர்ஜி, விஷயங்களை உள்வாங்கும் தன்மை, பயணத்தின் போது உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமல் காத்தல் ஆகிய மூன்றையும் இந்த அபய சூத்ரா தருவதாக ஈஷா யோகா செய்பவர்கள் நம்புகிறார்கள்.

அந்தக் கயிறு கட்டப்பட்டவுடன் எனக்கும் ஒரு புத்துணர்ச்சி உருவானதை உணர்ந்தேன். பயணம் முடியும் 18 நாட்களும் இந்தக் கயிறுதான் நமக்குப் பாதுகாப்பு என்று ஏனோ தோன்றிற்று.

4

எங்கே அந்த ஐந்தாவது லிங்கம்?

சத்குரு சொன்னபடி குளித்து முடித்து, ஈரத்தலையுடன் நாங்கள் அனைவரும் பசுபதி நாதர் ஆலயத்திற்குக் கிளம்பினோம்.

சுழன்று ஓடும் பாக்மதி ஆற்றங்கரையில் தங்கத்தகடு வேயப்பட்ட கோபுரத்துடன் காட்சியளிக்கிறது உலகத்தின் முதல் கோயிலான காத்மாண்டு பசுபதிநாதர் ஆலயம்.

கயிலையிலிருந்து சிவபெருமான் தானாக விரும்பி வந்த முதல் இடம் இது என்பதால், கைலாஷ் செல்ல முடியா தவர்கள் இவரை வந்து வணங்கினாலே பாதி புண்ணியம் கிடைத்துவிடும் என்று நம்புகிறார்கள் பக்தர்கள்.



அதை உறுதிப்படுத்துவதுபோலவோ என்னவோ, ஆலயத்தின் உள்ளே நுழைந்ததுமே, வலது பக்கம் **1008 லிங்கங்கள் அமைந்திருக்கின்றன. அதை ஒரு முறை சுற்றி வந்தால் மறுபிறவி கிடையாது** என்று சொல்லி, சுற்றிவரச் சொல் கிறார் பண்டா. உங்களிடமிருந்து கட்டாயமாக காசையும் வாங்கிக்கொண்டு, நெற்றியில் சந்தனத்தைத் தீற்றி உள்ளே அனுப்புகிறார்.

கோயிலின் உள்ளே எங்கே பார்த்தாலும் சிவ மயம். ஆமாம். எந்தப் பக்கம் திரும்பினாலும் சிவலிங்கம்தான். காலம் காலமாக மன்னர்களும், மகான்களும் வழிபட்ட பெருமைமிக்கவை அவை.

மாபெரும் வெண்கல நந்தி, வாசுகி நாகம், கிருதிமுக பைரவர், மகாவிஷ்ணு ஆகியோரை வணங்கி நகர்ந்தால் மையமாய் அமைந்திருக்கிறது பசுபதி நாதர் சன்னதி. **தங்கத் தகடால் கோபுரமும் வெள்ளித் தகடால் மற்ற பகுதிகளும் அமைந்திருக்க கருவறைக்கு நான்கு வாசல்கள் உண்டு.**

பக்தர்கள் எந்த வாசலிலிருந்து வேண்டுமானாலும் நுழைந்து தரிசனம் செய்யலாம். சிவனின் திருமுகத்துடன் திவ்யமான தரிசனம் கிடைக்கும்.

எப்படி?

நான்கு முகங்களுடன், திசைக்கு ஒரு முகமாகக் காட்சி தருகிறார் பசுபதிநாதர். **'நான்கு திசைகளையும் கட்டிக் காப்பது நான்தான்' என்று அவர் சொல்வதுபோல் இருந்தது** எனக்கு.

இந்த நான்கு முகங்களும், ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்று நான்கு வேதங்களையும் குறிக்கிறது. வேதநாயகன் ஆயிற்றே!

நான்கு முகங்களுடன் இங்கே பசுபதிநாதர் இருந்தாலும் இதற்கு ஐந்து முகலிங்கம் (பஞ்சமுகலிங்கம்) என்றுதான் பெயர்.

எங்கே அந்த ஐந்தாவது லிங்கம்?

அது ஈசானம். அதாவது ஆகாயத்தை நோக்கி உருவம் இல்லாமல் இருக்கிறது.

பஞ்சபாண்டவர்களுக்குப் போக்குக் காட்டி தரிசனம் தந்தவர் இவர்தான் என்று நினைத்தபோது மெய் சிலிர்த்தது எனக்கு. சிவனின் தலைப்பகுதி பூமியிலிருந்து விஸ்வரூபமாக வெளிப்பட்ட இடம் என்பதால்தான் சத்குரு, தலையில் ஈரத்துடன் இங்கே வரச் சொன்னது நினைவுக்கு வந்தது. ஏழு சக்கரங்களில் மையம் தலைப்பகுதியல்லவா? **ஈரத் தலையுடன் தரிசனம் செய்து, தியானம் செய்தால் மிகவும் நல்லது என்று கூறினார் சத்குரு.**





கோயில் கருவறையில் சுற்றிலும் நேபாள முகங்களாகக் கூடியிருக்க, பசுபதிநாதரும் அந்த ஊர் அலங்காரத்தால் நேபாள மணம் வீச, அந்த சிவனுக்கு அருகிலிருந்து "வாங்கோ, வாங்கோ" என்று இனிய தமிழ்க் குரல்கள் நம்மை அழைத்தன.

காலம் காலமாய்க் கேட்டு வந்த அந்தக் குரலுக்குச் சொந்தக் காரர்களின் குரல்வளையைச் சில நாட்களுக்குள் சிலர் குதறுவார்கள் என்பது பாவம், அவர்களுக்கு அப்போது தெரியாது. ஆதிசங்கரரையே அவமானப்படுத்திய அந்த பயங்கரம்தான் என்ன?

சத்குரு : கேள்வி – பதில்கள்

நான்: ஒருவன் எதற்காக கைலாஷ் செல்ல வேண்டும்? என்ன பலன்? நீங்கள் எதற்காக கைலாஷுக்கு பயணிகளை அழைத்துச் செல்கிறீர்கள்?

சத்குரு பதில்: உலகத்தில் பலவிதமான உயர்ந்த ஞானிகள் எல்லாம் தங்களுடைய சக்தியை, அறிவை, ஞானத்தை பின்னர் வருபவர்கள் அனுபவ பூர்வமாக உணரவேண்டும் என்பதற்காக ஒரு சக்தி ரூபத்தில் ஓர் இடத்தில் சேமித்து வைப்பார்கள்.

அது எந்த இடமாக இருக்கும் என்றால், மனிதர்கள் சாதாரணமாக போய்வரக்கூடிய இடமாக அது இருக்காது. அது போல போகவே முடியாத இடமாகவும் அது இருக்காது. அதாவது மன உறுதி உள்ள மக்கள் கொஞ்சம் சிரமப்பட்டு வரக்கூடிய இடத்தில் அந்த அறிவுப் பொக்கிஷத்தைச் சேமித்து வைப்பார்கள். அப்படிப்பட்ட இடத்தில் முதன்மையானதுதான் இந்த கைலாஷ்.

யோகத்தின் ஆதிகுரு சிவன். அவன் தன்னுடைய அறிவை எல்லாம் கைலாஷில்தான் பதித்து சக்தி ரூபத்தில் வைத்திருக்கிறான். அதனால்தான் கைலாஷை சிவனின் இருப்பிடம் என்று சொல்கிறார்கள். அதாவது சிவன் அங்கே அமர்ந்திருக்கிறான் என்று அர்த்தமில்லை. அந்த மலையில் தன்னுடைய அருளை, ஞானத்தை, சக்தியை சிவபெருமான் சேமித்து வைத்திருக்கிறார் என்று அர்த்தம்.

சிவன் மட்டுமல்ல, அவரைத் தொடர்ந்து பௌத்த மதத்தில் மஞ்சுஸ்ரீ உட்பட முக்கியமான மூன்று புத்தர்களும் தங்களுடைய அறிவை இந்தக்

கயிலையில் பதித்து வைத்தார்கள். ஜைன மதத்திலும் முதலாவது தீர்த்தங்கரரான ரிஷப முனியும் சிவனின் அறிவு இங்கே இருப்பதால், தன்னுடையதையும் இங்கே சேமித்து வைத்திருக்கிறார். திபெத்தின் பான் மதத்தினைச் சேர்ந்த பல யோகிகளும் தங்கள் ஞானத்தை இங்கே வைத்திருக்கிறார்கள். நம் ஊரிலிருந்தும் சில நாயன்மார்கள், ஔவையார் ஆகியோரெல்லாம் தங்கள் சக்தியை இங்கே நிரப்பி வைத்திருக்கிறார்கள்.

அதாவது கைலாஷ் என்பது உலகத்தின் மிகப் பெரிய மகத்தான நூலகம். உலகத்தில் இதுபோல சின்னச்சின்ன நூலகங்கள் இருக்கின்றன. வெள்ளி யங்கிரி மலைக்கும் மகத்துவம் உண்டு. அதனால்தான் அதனை தென்கயிலாயம் என்று சொல்கிறோம். ஆனால் கயிலாயத்தை ஒப்பிட்டுச் சொல்லுமளவுக்கு சிறந்த நூலகம் உலகில் வேறெங்குமே கிடையாது. அந்த நூலகத்திலிருந்து அறிவை, ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்காகத்தான் மக்கள் அங்கே செல்லவேண்டும் என்று நான் சொல்கிறேன். ஈஷாவிலிருந்து மக்களை அழைத்துக் கொண்டு நான் கைலாஷ் செல்வது ஏன் என்றால் மக்கள் ஞானத்தைப் பெற ஒரு கருவியாக நானும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

கயிலையில் சிவனில் ஆரம்பித்து பல மகான்களின் அத்தனை சக்திகளும் நிரப்பப்பட்டிருக்கிறது. பதித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதனைப் போய் அப் படியே அள்ளிக்கொள்ள வேண்டியதுதான் உங்கள் வேலை.

5

அதிர்ந்துபோன ஆதிசங்கரர்

நேபாளத்தின் பசுபதிநாதர் ஆலயத்தின் கருவறையிலிருந்து "வாங்கோ! வாங்கோ!" என்று கேட்ட இனிய தமிழ்க்குரலுக்குச் சொந்தக்காரர்கள் யார் தெரியுமா? கோயிலின் தலைமை அர்ச்சகர்கள்தான்!

ஆமாம்.

சுற்றிலும் நேபாள முகங்களாய் வழுவழுவென்றிருக்க, கருவறையில் பூஜை செய்யும் அர்ச்சகர்களைப் பார்த்தால் நமக்கு ஒரு பரிச்சயமாகத் தெரியும். ஆமாம். அவர்கள் நம் உவர்க்காரர்கள். தென்னிந்தியர்கள்.

அவர்களுக்கும் நம் ஊர் முகங்களைக் கண்டால் ஒரு சந்தோஷம் வந்துவிடும். "வாங்கோ, வாங்கோ" என்பார்கள். நேபாளத்தில் தமிழ் வாங்கோ!

எத்தனையோ தூரம் தள்ளி, வேற்று மொழி பேசும் தேசமாக இருந்தாலும் நேபாளத் தலைநகர் காத்மாண்டுவின் முக்கியமான பசுபதி நாத் ஆலயத்தின் தலைமை அர்ச்சகர்கள் தென்னிந்தியர்கள் என்பது எவ்வளவு பெருமைப்படத்தக்க விஷயம்!

இன்று நேற்றல்ல, காலம் காலமாய் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள்தான் பசுபதி நாதருக்கு பூஜை செய்கிறார்கள்!

அதற்குக் காரணம் யார் தெரியுமா?

நம் ஜகத்குரு ஆதிசங்கரர்தான்.

ஆமாம். தேசம் முழுக்க நடந்தே சென்ற அந்த காலடித் தெய்வம் 2500 வருடங்களுக்கு முன்னால் இந்தக் கோயிலுக்கு வந்தபோது கொஞ்சம் அதிர்ந்துதான் போனார்.

சிவபெருமானின் முதல் கோயிலின் மகத்துவம் தெரியாமல் மக்கள் அப்போது நடந்துகொண்டிருந்தார்கள். முறையான வழிபாடு இன்றி தந்திரங்களாலும் வேறு வகை மந்திரங்களாலும் இந்த இடம் ஆக்கிரமிக்கப்பட்டிருக்க, ஆதிசங்கரர் அத்தனையையும் வழிமுறைப்படுத்த ஆரம்பித்தார்.

இறைவனின் உயிர்த்தன்மை இந்த இடம் முழுக்கப் பரவியிருப்பதைச் சொல்லி புரிய வைத்து புனிதப்படுத்தினார் ஜகத்குரு.

அது மேலும் தொடரவும், இறைவனின் சக்தி இந்தப் பிரதேசத்தில் என்றென்றும் நிலைக்கவும், முறையாக வேதங்களைப் பயின்ற தென்னிந்திய வேதியர்களால்தான் முடியும் என்று, கர்நாடகத்திலிருந்து, நான்கு வேதங்களிலும் கரை கண்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து இங்கே அழைத்து வந்தார்.

நான்கு முகங்களுடன் நான்கு வேதங்களாகவே இறைவன் இருக்கும் இடத்திற்கு அப்படிப்பட்டவர்கள்தான் தேவை என்று ஆதிசங்கரர் உணர்ந்ததுதான் அதற்குக் காரணம்.



அவ்வாறு அவரால் தருவிக்கப்பட்டவர்களின் சந்ததியினர், உறவினர்கள்தான் இன்றுவரை பசுபதிநாத்தில் அர்ச்சகர்களாக இருந்து வருகிறார்கள்.

நேபாள மன்னர்களும், தென்னிந்திய அர்ச்சகர்களை மிகவும் மதித்தார்கள். குருவாக பாவித்தார்கள்.

ஆதிசங்கரரால் ஆரம்பிக்கப்பட்டு, காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அந்த நிலைமை, நாங்கள் அங்கு செல்வதற்கு சில வாரங்களுக்கு முன் மாறிற்று.

மாவோயிஸ்ட்டுகளின் அராஜகம்.

ஆமாம். வருத்தத்துடன்தான் சொல்லவேண்டியிருக்கிறது. மாவோ ஆதரவாளர்கள் பலர் ஒன்று சேர்ந்து தென்னிந்திய அர்ச்சகர்கள் இனி இங்கே இருக்கக் கூடாது என்று சொல்லி, அந்த இரண்டு தலைமை அர்ச்சகர்களையும், (கிரீஷ் பட்டர், ராகவேந்திர பட்டர்) கடுமையாகத் தாக்கினார்கள்.

கெட்ட வார்த்தைகளால் அவர்களைத் திட்டியபடி, அவர்களின் காவி ஆடைகளைக் களைந்து அலங்கோலப்படுத்தினார்கள். பூணூலையும் அறுத்தெறிந்தனர். 'இந்திய நாய்களே, நேபாளத்தைவிட்டு ஓடுங்கள்' என்று கோஷமிட்டனர். பயத்தில் கூனிக்குறுகி செய்வதறியாது தவித்தனர் அர்ச்சகர்கள்.

ரத்தம். அச்சம். அவமானம். அசிங்கம். அதிகார துஷ்பிரயோகம். ஆணவம்!

இது ஏதோ ஜாதி சம்பந்தமான பிரச்னை என்று யாரும் நினைத்துவிடக்கூடாது.

இது அப்பட்டமான அரசியல் விவகாரம். நம் இந்தியாவையே அச்சுறுத்தும் பயங்கர விஷயம்.

ஆமாம். நேபாளத்தில் ஆட்சிப் பொறுப்பில் முக்கியமாக இருக்கும் மாவோயிஸ்ட்டுகள், நம் இந்தியாவுக்கு எதிரான விரோதமான எண்ணத்தை வளர்த்து வருகிறார்கள். மக்களிடமும் இந்தியா பற்றி எதிர்ப்புப் பிரசாரத்தை முடுக்கிவிட்டிருக்கிறார்கள்.

எல்லாம் சீனாவின் திட்டம். மாவோயிஸ்ட்டுகள் தங்கள் மூளையை சீன அரசியல் தலைவர்களிடம் அடகு வைத்து விட்டதால், நேபாளத்தை சீனாவின் ஒரு பகுதியாகவே இணைக்கத் துடிக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

இந்தியாவைச் சுற்றி ராணுவத்தைக் குவித்து வரும் சீனா, மக்கள் யுத்தக் குழு என்ற நக்ஸல் அமைப்புக்கு, ஆயுதங்களையும், நாசவேலைப் பயிற்சிகளையும் தந்து, இந்தியாவுக்கு எதிராகத் தொடர்ந்து கிளர்ச்சிகளை செய்ய தூபம் போடுகிறது.

பசுபதிநாதர் ஆலயத்தில் உள்ள இந்தியர்கள் இருவர் முக்கியப் பொறுப்பில் இருப்பதைக் கூடத் தாங்கமுடியாத அளவுக்குக் கோபத்தைத் தூண்டிவிட்டிருக்கிறது இன்றைய நிலைமை!



பசுபதிநாத்



தாக்கப்பட்ட அர்ச்சகர்கள்

அர்ச்சகர்கள் தாக்கப் பட்டதன் விளைவால் 4, 5-9-09 இரண்டு நாட்கள், பசுபதிநாதர் கருவறையே திறக்காத ஒரு கொடூர சரித்திர நிகழ்வும் ஏற்பட்டது.

இப்போது நிலைமை சரியாகி விட்டதாகச் சொல்கிறார்கள்.

"நேபாள மக்களுக்கு இந்தக் கோயிலின் மகத்துவமோ, முக்கியத்துவமோ தெரியவில்லை. ஒரு மீன் மார்க்கெட் போல ஆகிவிட்டது" என்று, சத்குரு வருத்தத்துடன் கூறியது என் நினைவுக்கு வந்தது.

அத்தனையையும் அந்தப் பசுபதிநாதர் புன்னகையுடன் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்.

சத்குரு : கேள்வி – பதில்கள்

நான்: கைலாஷுக்குச் செல்வதையே ஒரு தவமாக, லட்சியமாக, கனவாக, ஞானிகள், யோகிகள் எல்லாம் நினைத்தார்கள். நினைக்கிறார்கள். ஆனால் 'கைலாஷ் செல்ல வேண்டும் என்ற எண்ணம்கூட எனக்குத் தோன்றியதில்லை' என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஏன் அப்படி? ஆனால் இப்போது அடிக்கடி அங்கே செல்கிறீர்களே?

சத்குரு பதில்: (பெரிதாகச் சிரிக்கிறார்) ஆன்மிகம் சம்பந்தப்பட்ட எதுவாக இருந்தாலும், அதைத்தேடி எங்கும், எப்போதும் நான் சென்றதேயில்லை. ஆன்மிகம் என்பது நமக்குள் இருக்கின்ற தன்மை. இதை உணரவேண்டும் என்றால், கண்ணை மூடி உட்கார்ந்தால் எனக்குப் போதும். ஆன்மிகத்தைத் தேடி காடு, மலை

ஏறவேண்டிய நிலைமை எனக்கு ஏற்படவில்லை என்பதால்தான் அப்படிச் சொன்னேன்.

ஆனால் இந்தக் கயிலாயம் என்பது வெறும் ஆன்மிகம், உள்தன்மையை உணருதல் என்பது மட்டும் இல்லை. பிரபஞ்சத்தின் தன்மையையே பதித்து வைத்திருக்கும் ஓர் உலகம் இது. ஒரு தடவை, நான் கைலாஷ் சென்று அங்கே உணர்ந்து வந்தபிறகு, இப்போது போகாமல் இருக்க முடியவில்லை! (மீண்டும் சிரிக்கிறார்.)

கைலாஷை சும்மா போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்றுதான் முதல்முறை நினைத்தேன். இப்போது வருடாவருடம் கட்டாயமாகப் போய் வருகிறேன். ஏனென்றால் கைலாஷைப் பார்த்து அதில் ஏதாவது ஒரு அம்சத்தை உணர்ந்து வந்தாலே, வாழ்க்கையின் அடிப்படையே மாறிப் போகிற மாதிரி இருக்கிறது. பலவிதமான தன்மை அதில் இருக்கிறது. நம் உடல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் இருக்கின்றன. பிரபஞ்சம் பற்றிய தகவல்கள் உள்ளன. நம் அடிப்படையான சக்திக்குத் தேவையான விஷயங்களும் காணப்படுகின்றன.

நாம் பிரபஞ்சத்தின் மூலரூபத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் அதற்கான விடை கைலாஷில்தான் இருக்கிறது. அந்த ஆர்வத்தில்தான் கைலாஷுக்கு நான் அடிக்கடி செல்கிறேன்.

6

சென்னை பெற்றோரின் பயங்கரம்

"சிவன் ஒரு மாடாக மாறி இந்த இடத்திற்கு வந்ததால்தான் அவருக்குப் பசுபதி நாதர் என்ற பெயர் வந்ததா?"

சத்குரு பெரிதாகச் சிரித்தார். "இல்லை. பசு என்றால் வாழ்க்கை என்று அர்த்தம். பதி, கடவுள். அதாவது வாழ்க்கையின் கடவுள் இவர். மனித உடலினை வழி நடத்தும் முக்கியமான ஏழு சக்கரங்களைச் சுட்டிக் காட்டவே, சிவன் ஏழு இடங்களில் தன்னை வெளிப்படுத்தினார். இது சைன்ஸ்."



சத்சங்கில் சத்குரு கூறியது நினைவிலாட, காத்மாண்டு பசுபதி நாதர் ஆலயத்திலிருந்து வெளிவந்தோம். கோயிலை யொட்டி பாக்மதி நதி ஓடிக்கொண்டிருக்கிறது. எட்டிப் பார்த்தால் தண்ணீரில் பூ மாலைகளும், சிறு பானைகளும் மிதந்து வந்தன. யாரோ நீத்தார் கடன் செய்கிறார்கள். கங்கை போல இந்த நதிக்கரையிலும் இறுதிக் காரியங்கள் செய்தால் சொர்க்கம் நிச்சயம் என்பது நம்பிக்கை.

காரியம் செய்யும் கணவனைப் பார்த்தபடி ஒரு பெண் விசும்பியபடி நதிக்கரையில் அமர்ந்திருந்த பரிதாபமான காட்சியைப் பார்க்க நேரிட்டது. இறந்தது அவர்களது மகனோ, மகளோ தெரியவில்லை. **ஆறுதல் சொல்லக்கூட அருகில் யாருமில்லாமல் அந்தப் பெண் வெறுமையாக நதியில் மிதந்து செல்லும் மலர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.**

அந்தப் பெண்ணைப் பார்க்கும்போது கைலாஷில் ஒரு சென்னைத் தம்பதிக்கு நடந்த நெஞ்சை உருக்கும் படுபயங்கரமான உண்மைச் சம்பவம் நினைவுக்கு வந்தது.

சென்னையைச் சேர்ந்த இளைஞன் ஒருவனுக்குத் தன் வயதான பெற்றோரை கைலாஷுக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று ரொம்ப நாட்களாக ஆசை. அந்த நல்ல ஆசையை நிறைவேற்றவும் துணிந்தான்.. எல்லா ஏற்பாடுகளை யும் செய்தான்.

குறிப்பிட்ட தினத்தில் ரொம்ப சந்தோஷமாக தாய், தந்தையுடன் கைலாஷ் கிளம்பினான். லட்சக்கணக்கில் செலவு செய்து, **வயது முதிர்ந்த பெற்றோரை கைலாஷ் அழைத்துச் செல்ல வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டதிலிருந்தே அவனது நல்ல குணம் புரியும்.** பெற்றோரை ரொம்ப ஜாக்கிரதையாக அழைத்துச் சென்றான். அவர்களை நன்றாகப் பார்த்துக் கொண்டான்.

ரொம்ப சந்தோஷமாக கைலாஷை நெருங்கிவிட்டார்கள். அவனுக்கு குஷியும் உற்சாகமும் பிடிபடவில்லை. தன்னுடைய விருப்பம் நிறைவேறியதில் அத்தனை ஆனந்தம். பெற்றோர்

மெதுவாக வர, அவன் ஆனந்த பரபரப்பில் துள்ளிக் குதித்து கொஞ்சம் வேகமாக நடந்தான். மைனஸ் டிகிரி குளிர், ஆக்ஸிஜன் பற்றாக்குறை, 6675 மீட்டர் உயரம், பத்து நாள் கடுமையான பயணம், ஐந்து நாள் நடை, தான் நினைத்ததை சாதித்த சந்தோஷம், இளமையின் தெம்பு... அப்படியே மயங்கி விழுந்தான் அந்த இளைஞன்.

பெற்றோர் நெருங்கி வந்து பார்த்தார்கள். ஆசை மகன் இறந்து போயிருந்தான்.

ஆமாம். அவனது ஆர்வம், பரபரப்பு அவனை பலி வாங்கிவிட்டது.

கதறினார்கள் அந்த வயதான அம்மாவும் அப்பாவும். தங்களை ஆசைஆசையாக அழைத்துக் கொண்டு வந்த மகனின் கதி இப்படி ஆகிவிட்டதே என்று துடித்துப் போனார்கள்.

அதைவிட பெரிய கொடுமை என்ன தெரியுமா? அந்த மலைத்தொடரில் ஈமக் கிரியைகள் செய்ய வசதி எதுவும்

கிடையாது. ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் அப்படியே 'கயிலாயப் பதவி அடைந்து விட்டார்' என்று விட்டுவிட்டு வந்துவிட வேண்டியதுதான்.

ஆனால், அன்பான அந்தப் பெற்றோருக்கு அப்படிச் செய்ய மனம் வரவில்லை. நேபாள் வரை மகனின் சடலத்தை எப்படியாவது கொண்டு வந்து பாக்மதி ஆற்றில் அவனுக்குக் காரியம் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள்.

எந்த வாகன வசதியோ, உதவிக்கு ஆட்களோ இல்லாத நிலையில் எப்படி உடலை அத்தனை உயரத்திலிருந்து எடுத்து வருவது? பெற்றோரோ வயதானவர்கள். நிர்க்கதியான சூழல், புத்திர சோகம்..

பயங்கரமான சரிவான மலைப்பாதையில் தூக்கிக் கொண்டுகூட வரமுடியாது. என்ன செய்தார்கள் தெரியுமா?

மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு படியுங்கள். ஒரு துணியில் மகனின் உடலைச் சுற்றினார்கள். தந்தை மகனது ஒரு காலைப் பிடித்துக் கொண்டார். தாய் இன்னொரு காலைப் பிடித்துக் கொண்டார். கயிலையிலிருந்து மலைப்பாதையில்



அப்படியே மெதுவாக மகனின் உடலை இழுத்துக் கொண்டே வந்தார்கள். வேறு வழியே இல்லை. துக்கம் ஒரு புறம், அவர்களின் உடல் பலஹீனம் மறுபுறம், பயங்கரமான மலைப்பாதை வேறு..

எப்படி இருக்கும் அவர்களுக்கு. ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்கள். தங்களுக்குக் கொள்ளி வைப்பான் என்று நினைத்த மகனுக்குக் கொள்ளி வைக்க, ஐந்தாறு நாட்கள் அவனது உடலை பித்துப் பிடித்தவர்கள் போல் இழுத்துக்கொண்டு, அடிவாரம் வரை வந்து, பின்னர் நேபாளம் வந்து வைதீக காரியங்கள் செய்திருக்கிறார்கள்.

சகல வசதிகளுடன் கைலாஷ் சென்று வருவதே கடினமான காரியம் என்ற நிலையில், பெற்ற மகனைத் தூக்கிக் கொண்டு

கூட வர முடியாமல் இழுத்துக் கொண்டு வந்தார்கள் என்றால், அவர்களின் நிலையை நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இல்லையா? இதனை எழுதும்போது மேலும் தொடர முடியாமல் என் கண்கள் கலங்குகின்றன.

இந்த உண்மைச் சம்பவத்தை சத்குரு சொன்னது ஏன் தெரியுமா?

நீங்கள் இளைஞனோ, முதியவரோ, பலசாலியோ, பலவீன மானவரோ, ஏழையோ, பணக்காரரோ யாராக இருந்தாலும் அதையெல்லாம் மறந்துவிட்டு ஒரு சாதாரண மனிதனாக கைலாஷுக்குச் செல்லுங்கள். மற்ற எதுவும் அங்கே பயன் தராது. உடம்பு வேண்டுமானால் பலசாலியாக இருக்கலாம். ஆனால் மூச்சுக் குழாய் அனைவருக்கும் ஒரே அளவில்தான் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இயல்பாக, எந்தப் பரபரப்பும் இல்லாமல், எளிமையாக இருந்தால் போதும் கைலாஷ் பயணம் இனிமையாக இருக்கும் என்பதைத் தெளிவு படுத்துவதற்காகத்தான் இந்தச் சம்பவத்தைச் சொன்னார்.

(சென்னையில் இருக்கும் அந்த இளைஞனின் பெற்றோர் இந்தப் புத்தகத்தைப் படிப்பார்கள் என்றே நினைக்கிறேன். உத்தமமான உங்கள் மகனுக்காக கைலாஷில் நானும் பிரார்த்தனை செய்துகொண்டேன் என்பதை அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.)

அடுத்து நாங்கள் சென்றது நேபாள மன்னரின் பிரமாண்ட அரண்மனை.

எங்களுடன் வந்தவர்கள் பலரும் அதைச் சுற்றிப் பார்க்கக் கிளம்ப, நான் மட்டும் அரண்மனைக்குள் நுழையவே இல்லை.

ஏன்?

நான்: சபரிமலை, திருப்பதி, பழனி போன்ற தலங்களுக்குச் செல்வதற்கும், கைலாஷ் போவதற்கும் வித்தியாசம் உண்டா?

சத்குரு பதில்: கைலாஷ் செல்வது

வெறும் பக்தியினால் செல்கின்ற தன்மை இல்லை. நம் அனுபவத்தில் இல்லாத பரிமாணத்தை நாம் உணர வேண்டும் என்ற ஆர்வத்தில் போகின்ற தன்மை. நமக்கு ஏதோ நன்மை கிடைக்கும் என்று பக்தியுடன் கோயில்களுக்குச் செல்பவர்கள் உண்டு. ஆனால் கைலாஷ் அப்படியில்லை. ஏதோ ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும், உணரவேண்டும் என்று செல்வது. எனவே சபரிமலை, திருப்பதி, பழனி போன்ற தலங்களுக்குச் செல்வதற்கும், கைலாஷ் போவதற்கும் நோக்கமே வித்தியாசமானது.

ஒன்றை உறுதியாகச் சொல்கிறேன். கைலாஷ் செல்வது பக்தி யாத்திரை இல்லை. அது சாதனை யாத்திரை. வாழ்க்கையின் உண்மை என்ன என்று தேடுதல் வேட்கையில் இருப்பவர்களுக்குச் சரியான பதிலைச் சொல்லும் இடம்தான் கைலாஷ்.

7

தெய்வக் குழந்தை!

மிக உயரமான கோபுரங்களைக் கொண்ட சின்னச் சின்ன ஆலயங்கள், மண்டபங்களுக்கு மத்தியில் பழமை மாறாமல் மன்னன் மட்டும் இல்லாமல் தனியாக நிற்கிறது நேபாள மன்னரின் அரண்மனை.

'இதுதான் அரண்மனை' என்று யாராவது சொன்னால் தான் தெரியும். அத்தனை குறுகலான முகப்பு. வாசலில் ஒரு காவல்காரர், பரிதாபமாய் நிற்கிறார்.



சில வருடங்களுக்கு முன்னால் கலகலப்பும், உற்சாகக் குரல்களும் நிரம்பிவழியும் கூட்டமும் ததும்பி நின்ற அரண்மனை, இன்று பொருட்காட்சி சாலை மாதிரி ஆகிவிட்டது.

என்னுடன் வந்தவர்கள் பலர் அரண்மனையைச் சுற்றிப் பார்க்க ஆவலுடன் நுழைந்தாலும் எனக்கு மனம் ஒப்பவில்லை.

காரணம், எங்கள் கைடு சொன்ன ஒரு விஷயம்.

"இப்போது மன்னர் குடும்பத்தினர் எங்கே இருக்கிறார்கள்?" என்று அவரிடம் கேட்டேன்.

"மன்னராட்சி முடிவுக்கு வந்ததும், இங்கிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள ஓர் இடத்தில் அவர்கள் வைக்கப் பட்டிருக்கிறார்கள். அங்கே இரண்டு அறைகள் மட்டுமே உண்டு."

மக்களாட்சி மாண்புடையது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. என்றாலும் இத்தனை நாள் ஆண்ட ராஜ வம்சத்தை, இந்த அரண்மனையிலேயே ஓர் இடத்தில் ஓரமாக தங்க வைத்திருக்கலாமோ என்று எனக்குத் தோன்றிற்று.

நேபாள ராஜ குடும்பத்தினர் இந்தியா மீது மதிப்பு கொண்டவர்கள். குறிப்பாகத் தமிழகம் என்றால் அவர்களுக்குப் பிடிக்கும். காஞ்சி சங்கராசாரியார், நேபாளம் சென்றால் வாசல் வரை வந்து வரவேற்பார் மன்னர் என்பது நினைவிலாட, அரண்மனைக்குள் நுழையாமல், வெளியில் திரிந்து கொண்டிருந்த நூற்றுக்கணக்கான புறாக்களை வேடிக்கை பார்த்தேன். அமைதிப் புறா!

அடுத்ததாய்ச் சென்றது 'குமாரி' கோயில்.

அங்கே கடவுள் சிலையெல்லாம் எதுவும் கிடையாது. ஒரே ஒரு துளசி மாடம் மட்டும்தான்.

ஒரு பெண் குழந்தைதான் அங்கே தெய்வம்.

அந்த இடமும் அரண்மனை போல்தான் இருக்கிறது. மாடியில்தான் அந்தக் குழந்தை வசிக்கிறது. தங்க முலாம் பூசப்பட்ட ஒரு ஜன்னல் வழியாக (தங்கக் கூண்டு!) அபூர்வமாக அந்தக் குழந்தையின் தரிசனம் கிடைக்கும்.

குமாரி என்று சொல்லப்படும் அந்தப் பெண் தெய்வம் பற்றி 'இமயமலை யாத்திரை'யில் நான் விரிவாகச் சொல்லிவிட்டதால் சுருக்கமாக இங்கே கூறுகிறேன்.

நேபாளத்தில் 'நேவார்' என்ற இனம் இருக்கிறது. நம் ஊர் பொற்கொல்லர்கள் மாதிரி, நகைகள் செய்பவர்கள் அவர்கள்.

நேவார் மக்கள் தங்கள் இனத்திலிருந்து நான்கு வயதுள்ள ஒரு குழந்தையை காளி தேவியின் அம்சமாகத் தேர்ந்தெடுப்பார்கள். நடமாடும் தெய்வம்!

பருவ வயது வரும் வரை அந்தக் குழந்தைதான் 'குமாரி' தெய்வம். எந்தக் காரியம் செய்தாலும் **நாம் பிள்ளையாரை முதலில் நினைப்பதுபோல் நேவார் மக்கள் 'குமாரி'யைத்தான் முதலில் பிரார்த்திப்பார்கள்.** அப்படி ஒரு பக்தி. பல நூற்றாண்டுகளாக





குமாரி தெய்வம்

நிலவிவரும் பழக்கம் இது.

ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும் 'இந்திர ஜாத்ரா' விழாவில் இந்த வாழும் தெய்வம் ரதத்தில் ஊர்வலமாக வரும். அப்போது நேபாள மன்னரே, குழந்தையை வணங்குவார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அரை மணி காத்திருந்தும் குமாரியின் தரிசனம் கிடைக்கவில்லை. சென்ற ஆண்டு கிடைத்த தரிசனத்தை நினைத்தபடியே நான் வெளியில் வந்தேன். வாசலில் குமாரியின் படத்தைப் பத்து ரூபாய்க்கு விற்கிறார்கள். (நம் ஊர் பத்து ரூபாய் என்பது நேபாள பணத்தில் 16 ரூபாய்!) ஆளாளுக்குப் போட்டி போட்டுப் படத்தை வாங்கினார்கள்.

கடைசி வரை, குமாரியின் தரிசனம் கிடைக்காதா? என்று சிலர் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள்.

அது மதிய நேரம் மூன்று மணி! தெய்வமே ஆனாலும் பாவம் அது குழந்தைதானே, தூங்கிக் கொண்டிருக்கும் என்று நினைத்துக் கொண்டேன்!

அடுத்ததாக கோரக்கரின் கோயிலுக்குச் சென்றோம். அது எனக்கு மிகவும் பிடித்த கோயில்.

ஏன் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்!

சீனா, நேபாளம், கோரக்பூர் என்று பல இடங்களில் வணங்கப்படும் சித்தரான கோரக்கர் நம் ஊர்க்காரர். ஆமாம் தமிழகத்தைச் சேர்ந்த மகான் அவர். **(அவருடைய ஜீவ சமாதி நாகப்பட்டினம் அருகில் வடக்குப் பொய்கை நல்லூரில்**

அமைந்துள்ளது. மிகவும் சக்தி வாய்ந்த அந்த இடத்திற்கு முடிந்தால் ஒருமுறை சென்று வாருங்கள்)

கோரக்கநாதரை காத்மாண்டில் உள்ள அனைவருக்கும் பிடிக்கும். காரணம், காத்மாண்டு என்று பெயர் வரவே இந்தக் கோயில்தான் காரணம்.

நேபாளத்தை ஆண்ட லட்சுமி நரசிம்மன் என்ற ராஜா, இந்த கோரக்கநாதர் கோயிலை, மரங்களாலேயே கட்டினான். அதற்கு 'கஸ்த மண்டம்' என்று பெயர். அதுவே 'காத்மாண்டு' என்று மாறியது.

நேபாளத்தில் தவக் கோலத்தில் அமைந்திருக்கிறார் கோரக்கர். மதிய நேரம் என்பதால் அருகில் இருந்த பூசாரியும் தவக் கோலத்தில்... மன்னிக்கவும் தூக்கத்தில் அமர்ந்திருந்தார்!

தமிழகத்தில் அவதரித்து சித்த யோகத்தையும், தத்துவ ஞான ரகசியத்தையும் பல நாடுகளில் பரப்பி அருள் புரிந்த சிவனின் அம்சமான கோரக்கரிடம், 'இத்தனை நல்லது செய்த நீங்கள் இந்தியா மீது நேபாளத்தில் உள்ள அனைவருக்கும் நல்ல எண்ணம் வருமாறு அருள்புரியக் கூடாதா?" என்று வேண்டிக் கொண்டேன்.

அடுத்ததாய் எருதுகளை பலி கொடுக்கும் துல்ஜா பவானி ஆலயத்திற்கும், கால பைரவர் கோயிலுக்கும் சென்றோம்.

கடல் மட்டத்திலிருந்து 4500 அடி உயரத்தில் இருப்பதால் காத்மாண்டு

மிதமான குளிருடன் காணப்படுகிறது. கோயில் சுற்றியது போதும் என்று நினைத்தோ என்னவோ அனைவரும் ஷாப்பிங் போக வேண்டும் என்று விரும்பினார்கள்.



எங்கே போகலாம் என்று கேட்டபோது "தமிழ் மார்க் கெட் போங்கள்" என்றார் கைடு.

என்னது, நேபாளத்தில் 'தமிழ்' மார்க்கெட்டா?

சத்குரு : கேள்வி - பதில்

நான்: இந்திரனின் தேவலோகம் மேல் உலகத்தில் இருக்கிறது. மகாவிஷ்ணுவின் பாற்கடலும் அப்படித்தான். அப்படியிருக்க சிவனின் இருப்பிடமான கைலாஷ் மட்டும் பூமியில் இருப்பது ஏன்?

சத்குரு பதில்: மேல் உலகத்திலும் ஒரு கைலாஷ் இருக்கிறது. இந்தக் கைலாஷ், சிவன் அடிக்கடி வந்து போகும் இடம். (பெரிதாகச் சிரிக்கிறார்)

தேவலோகத்திற்கோ, பாற்கடலுக்கோ போக வேண்டுமென்று உங்களுக்கு ஆசையிருந்தால் இன்றைக்கே கிளம்பி விடலாமே? எனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை. சும்மா பேச்சுக்காக நாம் சொல்லிக் கொள்கிறோம். அவ்வளவுதான்.

ஆனால் கைலாஷ் அப்படியில்லை. பூமியிலேயே உயர்ந்த நிலையில் வாழ வேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்கு அதைத் தருகின்ற ஓர்

இடம்தான் கைலாஷ். சிவனை நான் கடவுள் என்று பார்க்கவில்லை. அவர் ஓர் ஆதி யோகி. யோகா என்பது நம் உயிர் சம்பந்தப்பட்ட ஒரு விஞ்ஞானம்.

உதாரணமாக நீங்கள் கார் ஓட்ட வேண்டு மென்றாலோ, செல்ஃபோனை உபயோகப்படுத்த வேண்டுமென்றாலோ அதைப்பற்றி உங்களுக்குத் தெரிந்தால்தான் சரியாக உபயோகப்படுத்த முடியும். எந்த அளவுக்கு நீங்கள் அதைப் பற்றிப் புரிந்து கொள்கிறீர்களோ, அந்த அளவுக்குச் சிறப்பாகச் செயல்படுத்துவீர்கள். நம்முடைய உயிரும் அப்படித் தான். உயிரை நல்லபடியாகப் புரிந்து கொண்டு, அதன் அடிப்படையை உணர்ந்தால்தான் நம் உயிரை பிரமாதமான நிலையில் நாம் உபயோகப்படுத்த முடியும்.

ஏன் உயிருடன் இருக்கிறோம் என்றே சிலருக்கு வெறுப்பாக இருக்கும். அதற்குக் காரணம் உயிரின் அடிப்படையையே புரிந்து கொள்ளாமல் வாழ அவர்கள் முயற்சி செய்வதுதான்.

உங்கள் உயிரை நீங்கள் அற்புதமாக உபயோகப் படுத்த வேண்டுமா? அதைத் தெரிந்து கொள்ள ஒரே வழி கைலாஷ் செல்வதுதான்.

8

ருத்ராட்ச மாலை

உலகிலேயே விலை உயர்ந்த ஆபரணம் எது என்று தெரியுமா?

தங்கம்? வைரம்? பிளாட்டினம்?

எதுவும் இல்லை. ருத்ராட்சம்தான்.

ருத்ராட்ச மாலை வாங்க வேண்டும் என்று விரும்பி னார்கள் நண்பர்கள்.

'எங்கே கிடைக்கும்? என்ன விலை?' என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள்.



காரணம் உலகிலேயே ருத்ராட்சம் மிகுதியாக விளைகின்ற ஒரே நாடு நேபாளம்தான். அதன் உயர்ந்த மலைகளும், கண்டகி, பாக்மதிகளின் குளிர் தண்ணீரும், மிதமான, இதமான சூழ்நிலையும் ருத்ராட்ச மரங்களைச் செழிக்க வைக்கின்றன. **நம் ஊரில் கடைகளில் கிடைக்கும் ருத்ராட்சங்களும் மேட் இன் நேபாள்தான்.**

ருத்ராட்சம் அணிவது உடலுக்கு மிகவும் நல்லது என்பது ஈஷா அங்கத்தினர்கள் அனைவருக்கும் தெரியும். ஈஷா வகுப்புகளில் ருத்ராட்சம் பற்றித் தனி லெக்ஸரே உண்டு.

ருத்ராட்ச மாலையை அணிந்தால் இதய நோய்கள், ஹார்ட் அட்டாக் வராது என்று கூறுகிறார்கள். ரத்தக் கொதிப்பு, உடல் சூடு, மூச்சு சம்பந்தமான நோய்கள், நச்சுக் காற்றினால் ஏற்படும் பாதிப்புகள் போன்றவையும் நீங்குமாம்.

ருத்ராட்சத்தின் விலை பத்து ரூபாயிலிருந்து பத்து லட்சம் வரை இருக்கிறது. ஒருமுக ருத்திராட்சம், இரண்டு முகம், மூன்று முகம், நான்கு முகம் என்று போய்க்கொண்டே இருக்கும். ரகத்திற்கேற்ற விலை.



சாதாரணமாக நாமெல்லாம் கழுத்தில் அணிகின்ற ருத்ராட்ச மாலை 150 ரூபாயிலிருந்து கிடைக்கிறது. நம் ஊர்களில் 500 ரூபாய்க்கு விற்கப்படுவது இவைதான். 1000, 2000 ரூபாயிலும் அலங்கார டப்பாக்களில் (!) வாங்கலாம்.

பசுபதிநாத் கோயிலைச் சுற்றி நிறைய கடைகளில் ருத்ராட்ச மாலை கிடைக்கிறது. சாதாரண பூக்கடையிலும் நான்கு டஜன் ருத்ராட்ச மாலைகள் அசத்தலாகத் தொங்கிக் கொண்டிருக்கும்.

இங்கே கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது.

சீனத்துச் சில்லறைச் சிந்தனை, நேபாளிகளுக்கு இந்தியா மீதான எதிர்ப்புச் சிந்தனைகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறதென்றால், நேபாளக் கடைக்காரர்கள் தென்னிந்தியர்களை குறிப்பாகத் **தமிழர்கள் என்றால் சுலபமாக ஏமாற்றி, பொருட்களைத் தலையில் கட்டிவிட முடியும் என்று நினைக்கிறார்கள்.**

ஆமாம்.

தப்புத் தப்பான தமிழ் எழுத்தில் 'ருத்ராட்சா இங்கே கிடைக்கும்' என்று சில போர்டுகள் உங்கள் கண்ணில் படும்.

ருத்ராட்சம்தான்

சில புரோக்கர்கள் நம் முகத்தைச் சுலபமாக அடையாளம் கண்டு, "சென்னையா? வாங்க சார். எப்படி இருக்கீங்க. ஒரிஜினல் ருத்ராட்சம் இங்கே இருக்கு" உடைந்த தமிழில் பேசிக் கவிழ்க்கப் பார்ப்பார்கள்.

பத்து பைசாகூடப் பெருமானமில்லாததை ஐந்நூறு, ஆயிரம் என்று விலை சொல்லிக் கழுத்தில் மாட்டி விடுவார்கள்.

படிக்க உங்களுக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும்.

மலிவு விலையில் ருத்ராட்ச மாலை என்று யாராவது உங்களை அழைத்தால் உஷாராக இருங்கள்.

ஏன் தெரியுமா?

அவை ருத்ராட்சம் அல்ல. இலந்தங் கொட்டைகள்!

யெஸ். இலந்தைப் பழத்தைச் சாப்பிட்டுவிட்டு துப்புவோமே அந்த கொட்டைகளைக் கோர்த்து மாலையாகக் கட்டி விற்கிறார்கள் சிலர்.

அதை அணிந்தால் நோயா தீரும்? எறும்புதான் கடிக்கும்!

புனிதமான மாலையை எப்படிக் கொச்சைப்படுத்துகிறார்கள் பாருங்கள்.

எனவே, நேம் போர்டு உள்ள தொலைபேசி எண் கொண்ட கடைகளில் மட்டுமே ருத்திராட்ச மாலைகளை வாங்க வேண்டும். நீங்கள் தங்குமிடத்தில் உள்ளவர்களிடம் நல்ல ருத்ராட்சங்கள் எங்கே கிடைக்குமென்று விசாரித்து வாங்குங்கள்.

ஒன்றும் சரிப்படவில்லையென்றால் அங்கே வாங்கவே வேண்டாம். **சுத்தமான ருத்ராட்ச மாலைகள் நம் ஊரிலேயே காஞ்சிபுரம் சங்கரமடம், ஈஷா மையங்கள் போன்ற இடங்களில் கிடைக்கிறது.** விலை சற்று அதிகம் என்றாலும் இதுபோன்ற இடங்களில் வாங்குவதே நல்லது.

'காசிக்குப் போயும் கர்மம் தொலையவில்லை' என்பது போல் கைலாஷ் போய் யாரோ நேபாளி துப்பிப் போட்ட இலந்தங்கொட்டையா நம் வீட்டு பூஜையறைக்குள் நுழைவது?

எனவே உஷார்!

கைலாஷ் யாத்திரையை வெற்றிகரமாக முடித்துவிட்டு வரும்போது காத்மாண்டுவில் இரண்டு தினங்கள் தங்கப் போகிறோம். ஷாப்பிங்கை அப்போது வைத்துக் கொள்ளலாம் என்று டீம் லீடர்கள் கூறினாலும் பலரும் அப்போதே ருத்ராட்ச மாலை மட்டும் வாங்க விரும்பினார்கள்.



காரணம், அந்த மாலையை அணிந்து கொண்டு மானசரோவர் ஏரியில் நீராட வேண்டும், அதே மாலையுடன் கைலாஷ் மலையின் எதிரில் தியானம் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம்தான்.

டீம் லீடர்களும் உணர்வைப் புரிந்து கொண்டு அனுமதித்தார்கள். ஊருக்கு வாங்க வேண்டிய பொருட்களை, திரும்பி வரும்போது டமேல் மார்க்கெட்டில் (ஹி... ஹி... தமிழ் மார்க்கெட் அல்ல!) வாங்கிக் கொள்ளலாம் என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டார்கள்.

கைலாஷ் யாத்திரை என்பது ரொம்ப ஜாலியான பயணம்போல் இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா?

விமானப் பயணம், நட்சத்திர ஓட்டலில் தங்கல், விதவிதமான பஃபே சாப்பாடு, உற்சாகமாய் கோயில்கள் பயணம், ஷாப்பிங் என்று தோன்றுகிறதா?

அப்படியெல்லாம் இல்லை!

வசதியெல்லாம் நேபாளத்துடன் சரி.

அதன் பின்னர் ஐந்து நட்சத்திர ஓட்டலாவது ஒன்றாவது, எலும்பை உடைக்கும் குளிரில் டென்ட்டில் நெருக்கமாகத் தங்க வேண்டும். பாத்ரூம் வசதி கூட இல்லாமல் கழுவத் தண்ணீர்கூட கிடைக்காமல் டிஷ்யூ பேப்பரை எடுத்துக்கொண்டு, நாய்கள் துரத்த ஓடவேண்டும் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியுமா? வாந்தி, மயக்கம், மூச்சுத்திணறல் என்றெல்லாம் பலரும் படுக்க வேண்டியிருக்கும் என்பதையாவது உணர்வீர்களா? ஆமாம். இனிமேல்தான் அந்த அதிரடிப்பயணம் ஆரம்பம்.

அதிசயமான, அபூர்வமான, ஆனந்தமயமான, இனிமையான கைலாஷை அத்தனை சுலபமாய் தரிசித்துவிட முடியுமா என்ன?

அதற்கு முன்னால் ருத்ராட்சம் ருத்ராட்சம் என்கிறார்களே, அதற்கும் சிவபெருமானுக்கும் என்ன சம்பந்தம்? அந்த சிவனே ருத்ராட்சம் பற்றி என்ன சொல்கிறார் என்பதைப் பார்த்துவிடலாமா?

சத்குரு : கேள்வி – பதில்கள்

நான்: யார் கைலாஷ் சென்றாலும் அவர்களுக்கு ஞானமும், சக்தியும் கிடைக்குமா?

சத்குரு பதில்: கைலாஷைக் காணாதவர்கள்தான் இந்தக் கேள்வியைக் கேட்கமுடியும். ஒருமுறை பார்த்துவிட்டவர்கள், இப்படிக் கேட்க மாட்டார்கள். மலைகளின் இமயமான கைலாஷ் சொற்களுக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதம்.

நீங்கள், உங்கள் படைப்பைப் பற்றியும், படைத்தவனைப் பற்றியும் என்னென்ன அறிந்து கொள்ள விரும்புகிறீர்களோ, அத்தனை விஷயங்களும் கைலாஷில் உள்ளன. கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு இருந்தால் அதை அப்படியே உணர்வீர்கள். அந்த ஆற்றல் உங்களுக்கு இல்லா விட்டாலும் பரவாயில்லை. கைலாஷின் பிரமாண்டமே உங்களுக்குள் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும். வாழ்நாளில் ஒரு முறையாவது கைலாஷ் சென்றுவிடுங்கள். உங்கள் கால்களில் நடக்கும் சக்தி இருக்கும்போதே போய் வாருங்கள்.

இந்த மண்ணில் பிறந்து கைலாஷைப் பாராது இருந்தால், மிகப் பெரிய பாக்கியம் ஒன்றைத் தவறவிட்டவர்களாவீர்கள்.

9

பெண்கள் அணியலாமா?

ருத்ராட்சம் என்றால் என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரியுமா?

ருத்ரன் என்றால் சிவன். அட்சம் என்றால் கண்கள். சிவனின் கண்கள்! ஆம், சிவபெருமானின் கண்ணிலிருந்து தோன்றியதுதான் ருத்ராட்சம்!

அது என்ன சமாசாரம் என்பதை நான் சொல்வதைவிட, அந்த சிவபெருமானே சொன்னால் எப்படியிருக்கும்?

நம் மகான்கள் கேட்காமல் இருப்பார்களா?



புசுண்டர் என்ற மகரிஷி, ஒரு நாள் பரமேஸ்வரனிடமே அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டார்.

ஈசனின் பதில் இதுதான்.

"நான் ஆயிரம் வருடங்கள் கண்களை மூடித் தியானம் செய்து கொண்டிருந்தேன். அந்த மோன நிலையின் உச்சத்தில் என் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அந்த கண்ணீர்த் துளிகள்தான் ருத்ராட்ச மரங்களாக முளைத்தன.

என் ஆனந்தக் கண்ணீரிலிருந்து தோன்றியதால் ருத்ராட்சத்தை அணிபவர்கள் செய்த பாவங்கள் எல்லாம் போய்விடும். நல்ல காரியங்கள் செய்யும்போது ருத்ராட்சத்தை அணிந்தால் அதன் புண்ணியம் லட்சம் மடங்காகிவிடும். ருத்ராட்ச மாலையை அணிந்துகொண்டு மந்திரங்களை ஜபித்தால் அதன் பலனும் கோடி மடங்காகும்" என்றார்.

"எந்த வகை ருத்ராட்சத்தை அணிய வேண்டும்?" என்று கேட்டார் மகரிஷி.

அதற்கும் சிவன் பதில் தந்தார். "தானாக துவாரம் உள்ள ருத்ராட்சம் மிகச் சிறந்தது. மனிதனால் துவாரம் ஏற்படுத்தப் பட்டது மத்யமம். ஒரு முகமுள்ள ருத்ராட்சம், பரபிரம்மத் தின் சொரூபம். இதை அணிந்தால் வெற்றி கிட்டும். **ருத்ராட்சங்களைக் கைகளால் தொட்டாலே இரண்டாயிரம் பசுக்களை தானம் செய்த பலன் கிடைக்கும்**" சொல்லிக்கொண்டே போனார் சிவபெருமான்.

சிவன் மட்டுமல்ல, அவரது மகனான முருகன் ருத்ராட்சம் பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா?

"முழு முட்டாளாக இருந்தாலும் எவன் ஒருவன் ருத்ராட் சத்தைத் தரிக்கிறானோ அவன் எல்லாப் பாதகங்களிலிருந்தும் விடுபடுகிறான். ருத்ராட்சங்களை அணிந்து, நேர்மையுடனும், பக்தியுடனும், உதவி மனப்பான்மையுடனும் இருப்பவர்கள் சிவனுக்கே ஒப்பானவர்கள்."

ருத்ராட்சம் எத்தனை மகத்துவமானது என்பது தெரிகிறதா?

அது புரியாமல்தான் நாம் நகைக்கடைகளில் ஏறி இறங்கிக்கொண்டிருக்கிறோம். நகையெல்லாம் சேமிப்புதான். சந்தேகமேயில்லை. ஆனால் ருத்ராட்சம் அணிவது பாதுகாப்பு! நம் உடலை நல்ல ஆரோக்கியமாய் வைத்துக்கொள்ள அந்த இறைவனே தவம் இருந்து தந்த பொருள் என்பதால் அதன் சிறப்பை நான் மேலும் விளக்க வேண்டுமா என்ன?

பெண்கள் ருத்ராட்சம் அணியலாமா? இதை அணிபவர்கள் தினமும் குளிக்க வேண்டுமா? தாம்பத்தியம் வைத்துக்கொள்ளலாமா? அசைவம் சாப்பிடலாமா?

ஆளாளுக்கு ருத்ராட்சத்தைப் பற்றி சந்தேகத்தைக் கிளப்பி, அதை என்னவோ சாமியார்கள் அணிகின்ற ஒரு சமாசாரம் போலவே ஆக்கிவிட்டார்கள்!

ருத்ராட்சம் அணிய, யாருக்கும், எந்தக் கட்டுப்பாடும் கிடையாது! ஜாதி, மதம் என்று அதற்குத் தடைகள் எல்லாம் கிடையாது. வெளிநாடுகளில் பல கிறிஸ்துவர்கள் ருத்ராட்சத்தில் சிலுவையைக் கோர்த்து அணிந்துகொள்கிறார்கள். எந்த விதிகளும் கிடையாது. அதனை அணிந்தால் உடலுக்கும், மனதுக்கும் தெம்பு கிட்டும். எண்ணம், நல்லதை நோக்கியே நகரும்.

உடல் ஆரோக்கியமாக இருக்கும். நோய்கள் அண்டாது. அப்புறம் என்ன? இலந்தங்கொட்டையல்லாத சுத்தமான ருத்ராட்சத்தை வாங்கி அணிந்து பாருங்கள். அதன் தெய்வீகத் தன்மையை நீங்கள் உணர்வீர்கள்.

ருத்ராட்ச மாலை ஒரிஜினல்தானா என்பதை அறிய எளிமையான டெஸ்ட் ஒன்று உள்ளது.

உங்கள் இடது கை விரல்களை மெதுவாக மடக்குங்கள். ஐந்து விரல்களும் மூடிய நிலையில், லேசாக வைத்திருங்கள். அது யோகத்தில் ஒரு முத்திரை. அப்போது ருத்ராட்ச மாலையை விரலின் முட்டிக்கு மேலாகத் தொடாமல் தொங்கவிடுங்கள்.

ஓர் ஆச்சர்யம் நிகழும். ருத்ராட்ச மாலை அப்படியே

மெல்ல வலதுபுறமாகச் சுழல ஆரம்பிக்கும்.



உடனே கையை அதே பொசிஷனில் சற்று இறுக்கமாக வைத்திருங்கள். அது யோகத்தை முறித்தல் நிலை. அப்போது மாலை மெல்ல இடதுபுறமாகச் சுழல்வதை உணர்வீர்கள்.

அப்படிச் செய்தால் அது குறையற்ற சுத்தமான ருத்ராட்ச மாலை.

முனிவர்கள் ருத்ராட்ச மாலை அணிந்த காரணம் புரிகிறதா?

அந்தக் காலத்தில் முனிவர்கள் காட்டுக்குள் இருப்பார்கள். கிடைத்ததைச் சாப்பிடுவார்கள். அப்போது அது நல்ல உணவா, கெட்ட உணவா என்பதைத் தெரிந்துகொள்ள அவர்களுக்கு ருத்ராட்ச மாலை உதவும்.

அதாவது நல்ல உணவாக இருந்தால் மாலை கடிகாரம் போல் வலப்புறமாகச் சுற்றும். விஷமுள்ள உணவாக இருந்தால் இடதுபுறமாகச் சுழலும். அதை வைத்து, அவர்கள் நல்ல உணவைக் கண்டுகொள்வார்கள்.

சிவனால் உருவாகியது என்பதனால், ருத்ராட்சம் இந்துக்களுக்கு மட்டுமே உரியது என்று யாரும் கருத வேண்டாம். எல்லோருக்குமான பொக்கிஷம் இது. மனிதனை, மனிதனாக மாற்றும் மகத்துவம் மிக்கது.

என்ன ருத்ராட்சம் வாங்க முடிவு செய்துவிட்டீர்களா? அதற்கு முன்னால் சத்சங்கை எட்டிப் பார்ப்போம்.

"கடுமையான ஆனால் ஆனந்தமான யாத்திரைக்குத் தயாராகுங்கள். ஒருவாரம் கார் பயணம், ஒரிருநாள் நடைப்பயணம் என்று



கஷ்டப்பட்டுதான் நாம் கைலாஷை அடையவேண்டும். ஆனால் எந்தச் சிரமமும் படாமல் சுலபமாக, நாளையே கைலாஷ் சென்று வந்த அனுபவம் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமா? அதற்கு ஒரு வழியிருக்கிறது" என்றார் சத்குரு.

அனைவரும் ஆவலாகப் பார்த்தோம்.

பெரிதாகச் சிரிக்க ஆரம்பித்தார் சத்குரு.

நான்: யாராவது ஆபத்தான செயல்களில் ஈடுபட்டால், 'பார்த்து கயிலாயம் போயிடப் போறே!' என்று கிண்டலாக நம் ஊரில் சொல்கிறார்களே... ஏன்?

சத்குரு : கைலாஷ் சென்றவர்கள் திரும்பி வர மாட்டார்கள் என்ற அபிப்ராயம் நம்மிடையே ரொம்ப நாட்களாக இருப்பதுதான் காரணம். இந்த ஆண்டு கூட ஜூன் மாதத்தில் சென்றவர்களில் 19 பேர் இறந்துவிட்டார்கள். காரணம் அங்கே செல்வதில் ரிஸ்க் இருக்கிறது. அங்கே சென்றவர்களில் 1% பேர் திரும்பிவர மாட்டார்கள்.

என்ன காரணம் என்றால்; எப்படி கைலாஷ் செல்வது? அங்கே என்ன தேவை? அந்த உயரத்தில் நம் உடல் எப்படிச் செயல்படும்? நம்முடைய மனத்தை எப்படி வைத்திருக்க வேண்டும்? என்பதற்கான பயிற்சியெல்லாம் இல்லாமல் செல்வதுதான்.

நம்முடைய ஈஷா குரூப்தான் இதுவரை கைலாஷ் சென்றவர்களிலேயே மிகப்பெரிய குரூப். இந்த வருடம் ஜூலை மாதம் 530 பேர் சென்று அனைவரும் பத்திரமாகத் திரும்பி வந்துவிட்டோம். (சிரிக்கிறார்) யாரையும் அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட மாட்டோம்.

எந்த ஒரு செயல் செய்தாலும் அதைப் புரிந்து கொண்டு செய்ய வேண்டும். அதைப் புரியாமல் செய்தால் ஆபத்துதான். தென்னை மரத்தில் ஏறத் தெரிந்தவர்கள், அதில் தினமும் ஏறி இறங்குவார்கள். தெரியாதவர்கள் ஏறினால் இறந்துவிடவும் வாய்ப்புண்டு. காரணம் என்ன? அடிப்படை புரியாமல் மரம் ஏறினால் ஆபத்துதான். கைலாஷும் அப்படித்தான்.

10

டைமாக்ஸ்!

"எந்தச் சிரமமும் இல்லாமல் கைலாஷ் அனுபவம் நாளைக்கே உங்களுக்குக் கிடைக்க வேண்டுமா?" என்று பெரிதாகச் சிரித்தார் சத்குரு.

பதினைந்து நாள் நெடிய அனுபவத்தை ஒரே நாளில் பெறுவதா?

அது எப்படி முடியும்?

ஒன்றும் புரியாமல் அவரையே பார்த்தோம். ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது. அவர் பெரிதாய் சிரித்தால் ஏதோ கலாட்டா செய்யப் போகிறார் என்று அர்த்தம்!

"என்ன தயாரா? யாரெல்லாம் ரெடி? கைதூக்குங்கள் பார்க்கலாம்" என்றார்.

சத்குரு வாரப்போகிறார் என்பது தெரியாமலோ அல்லது அந்த வாரல் அனுபவத்தைப் பெறவேண்டும் என்று விரும்பியோ சிலர் கைகளை உயர்த்தினார்கள்.

"இவ்வளவு பேர்தானா?" என்று சிரித்த சத்குரு, மீண்டும் விசாலப் புன்னகை புரிந்தார்.

"நாமெல்லாம் நாளைக் காலை இந்த நேபாள தேசத்தைவிட்டு, கைலாஷ் செல்வதற்காக திபெத்திற்குள் நுழையப்போகிறோம். அதாவது சைனாவின் பிடியில் உள்ள திபெத். நேபாளத்தையும், சைனாவையும் இணைக்கும் இடத்திற்கு ஃப்ரெண்ட்ஷிப் ப்ரிட்ஜ் (நட்புப் பாலம்?!) என்று பெயர். அந்த இடத்தில் நம் பாஸ்போர்ட்களை சோதனை செய்வார்கள். நாம் கொண்டு செல்லும் லக்கேஜ்களையும் ஸ்கேனிங் செய்வார்கள்.

அப்போது கைலாஷ் அனுபவம் உடனே பெறவேண்டும் என்று விரும்புபவர்கள் மட்டும் எளிதாக ஒரு காரியம் செய்தால் போதும். ஆமாம் திபெத்தின் ஆன்மிகத் தலைவர் தலாய்லாமாவின் போஸ்டரை மட்டும் உங்கள் பெட்டியில் வைத்துக்கொண்டால் போதும். அல்லது Free tibet **(சுதந்திர திபெத்) என்று அச்சிடப்பட்ட டி.ஷர்ட்களை அணிந்து கொண்டால்கூடப் போதும்.**

கைலாஷ் அனுபவம் உங்களுக்குக் கிடைத்துவிடும். ஆமாம், சைனா அதிகாரிகள் கடும் கோபத்துடன் உங்களைக் கைது செய்து சிறையில் அடைப்பார்கள். கடுமையான தண்டனை கிடைக்கும். கைலாஷ் சென்றவர்களில் 1% உயிருடன் திரும்பி வரமாட்டார்கள் என்று சொன்னேனே, அதுபோல் 1% பேர் திரும்பிவரமாட்டார்கள். யாரிடமாவது தலாய்லாமா

டஃபுல் பேக்!

போஸ்டர்களோ, Free tibet என்று சுதந்திர நாடு கேட்டு அச்சிடப்பட்ட டி.ஷர்ட்களோ இருந்தால் உடனடியாக அவற்றை நேபாளத்திலேயே வைத்துவிடுங்கள்.

மறந்து போய்க்கூடக் கொண்டு வந்துவிடாதீர்கள். அப்படிக் கொண்டு வந்தால் நீங்கள் மட்டுமல்ல, உங்களுடன் கூட வரும் நூற்றுக்கணக்கான பேரும் பாதிக்கப்படுவார்கள்" சொல்லிக்கொண்டே போனார் சத்குரு.

ஆமாம். 'துப்பாக்கி எடுத்துக்கொண்டு போனால்கூட சீனக் காவலர்கள் மன்னித்துவிடுவார்கள். தலாய்லாமாவின் போஸ்டர் இருந்தால் மட்டும் உங்கள் தலை போய்விடும்!' என்று வேடிக்கையாகச் சொல்வார்கள்.

இந்தியாவின் பாதுகாப்பில் இருக்கும் திபெத்திய மகாராஜா... மன்னிக்கவும் மதகுரு தலாய்லாமா, சமீபத்தில் அருணாசலப்பிரதேஷ் சென்றபோதுகூட சைனா டென்ஷனானது நினைவுக்கு வருகிறதா?

அந்த அளவுக்கு அவர் மேல் கோபத்துடன் இருக்கிறது சைனா. நாம் அடைக்கலம் கொடுத்திருப்பதால் இந்தியா மேலும் செம கடுப்புதான். **(ஆனால் அப்பாவி திபெத்தியர்களின் மனங்களில் மட்டும் ரகசியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறது அந்தப் பழுத்த பழம்!)**

கைலாஷ் யாத்திரையின்போது எப்படி இருக்கவேண்டும்? இயல்பாக இருங்கள். உலகில் எங்குமே காணக்கிடைக்காத இயற்கைக் காட்சிகளை ரசித்துப் பாருங்கள். தேவையில்லாமல் பேசாதீர்கள். அதீத உற்சாகமோ, கட்டுப்பாடுகளோ வேண்டாம். உங்கள் பலத்தையும், திடகாத்திரத்தையும் பரிசோதிப்பதற்கான குத்துச்சண்டை மைதானம் அல்ல இது என்பதை முதலில் உணருங்கள். கூட வரும் மற்றவர்களுக்கு நீங்களாகத் தேடிப்போய் உதவுங்கள். கடைசியாக ஒன்று, வேளாவேளைக்கு டைமாக்ஸ் (diamox) மாத்திரையை மறக்காமல் சாப்பிடுங்கள்.

ஆமாம். நமக்குப் பரிச்சயமே இல்லாத கைலாஷின் மைனஸ் டிகிரி குளிரையும், அதன் அதீதமான உயரத்தையும் நம் தமிழ்நாட்டு உடல் தாங்குவதற்காக, தன்னைத் தயார் செய்து கொள்வதற்காகச் (acclimatization) சாப்பிடவேண்டிய மாத்திரைதான் டைமாக்ஸ்.



டி.சர்ட்

இந்த மாத்திரை சாப்பிடாவிட்டால் என்ன ஆகும்? ரொம்ப உயரத்திற்கு நாம் செல்வதால் மூளையிலும், நுரையீரலிலும் நீர் கோத்துக்கொள்ளும். அதனால் மயக்கம் வரும், மூச்சு வாங்கும். திபெத்தில் நுழைந்தது முதல் காலை உணவுக்குப்பிறகு அரை மாத்திரை, இரவு உணவுக்குப் பிறகு அரைமாத்திரை என்று சாப்பிடவேண்டும். சாப்பிட்டால் எந்தப் பிரச்னையும் கிடையாது.

மொத்தமாக 20 மாத் திரைகள் கொண்ட ஸ்டிரிப்பை எல்லார் கை களிலும் கொடுத்து விட் டார்கள். (அது மட்டுமல்ல, மாத்திரை சாப்டாச்சா? சாப்டாச்சா என்று ஒவ் வொரு வேளையும் நூறு பேராவது நம்மிடம் கேட் பார்கள்! கேட்டார்கள்!)

அதுமட்டுமல்ல, நாம் பந்தாவாகக் கொண்டு வந்த காஸ்ட்லி யான டிராலி சூட்கேஸ்களை எல்லாம் இங்கே நேபா ளத்திலேயே வைத்துவிட வேண்டியதுதான். இனிமேல் மவனே உன் சமத்து(வம்)தான்! ஸ்கூல் யூனிஃபார்ம் போல அனைவருக்கும் ஒரே பைதான். டஃபுல் பேக்! (duffle bag)



சாக்குப் பையைக் குறுக்காக பிரித்து, ஒரு ஜிப் வைத்துத் தைத்தால் எப்படி இருக்கும்? அப் படியிருக்கிறது டஃபுல் பேக். **ஓர் ஆள் உள்ளே படுத்துக் கொள்ளும்படியான bag அது.** நம் பயணத்திற்கு வேண்டிய அத்தனை சாமான்களையும் அதற் குள் திணித்துக் கொள்ள வேண்டியதுதான். ஒரு பெரிய பிளாஸ்டிக் கவரும் கொடுத்தார்கள். நம் மூட்டை முடிச்சுகளை அதற்குள் வைத்து டஃபுல் பேக்கினுள் போட்டால் போதும். மழை, குளிரால் எந்த பாதிப்பும் வராது.



தலாய்லாமா

அந்த மூட்டையை மொத்தமாக ஒரு லாரியில் போட்டு எடுத்து வருவார்கள். நாம் தங்குமிடத்தில் அதை நம்மிடம் தருவார்கள். உபயோகப்படுத்திக்கொண்டு பயண தினத் தன்று பையை ரூம் வாசலில் வைத்துவிட்டால் எடுத்துக் கொண்டுவிடுவார்கள். மறுநாள் தங்குமிடத்திற்குப் பை தானாக வந்து சேரும்.

(நாம் சென்னை வந்ததும் பயணத்தின் ஞாபகார்த்தமாக நாமே வைத்துக்கொள்ளலாம் அன்பளிப்'பை'!)

இதுதவிர நாமும் அத்தியாவசியப் பொருட்களுடன் சின்னதாக ஒரு பை வைத்துக்கொள்ளலாம். அதை நாமே தூக்கிக்கொள்ள வேண்டும்.

மறுநாள் விடிகாலை திபெத்திற்கு நாங்கள் கிளம்பவிருப்ப தால், அன்றிரவே டஃபுல் பேக்கில் சாமான்களை அடைத்து அறைவாசலில் வைத்துவிட்டுத்தான் டின்னர் சாப்பிடவே கிளம்பினோம்.

நட்சத்திர ஓட்டலாக இருந்தாலும் வழக்கம் போல் இல்லாமல் சற்று உப்பு, காரம் இல்லாமல் 'சப்'பென்று இருந்தது பஃபே உணவு.

நாங்கள் திருதிருவென விழித்தபோது, எங்களுடன் வந்த குன்னூரைச் சேர்ந்த சித்ரா, "சாப்பாடு ருசியா இல்லேன்னு பாக்கறீங்களா, இனிமே நமக்குச் சுவையான சாப்பாடு கிடைக்காதுல்ல. அதனால ருசிக்கு நாக்கு அடிமையாயிடக்கூடாதுன்னு, நாம பழகிக்கணும்னு சத்குருவே இன்னிக்குச் சமையலை இப்படிப் பண்ணச் சொல்லியிருப்பாரு!" என்றார்.

அது உண்மையாக இருக்கும் என்றுதான் எனக்குத் தோன்றியது.

மறுநாள் காலை டிபனை முடித்துவிட்டு, மறக்காமல் டைமாக்ஸ் மாத்திரையும் சாப்பிட்டுவிட்டு நட்புப் பாலத்திற்குக் கிளம்பினோம்.

அங்கே சதீஷ் என்ற அயனாவரம் நண்பர் செய்த கலாட்டா இருக்கிறதே... தமிழ் சினிமாவில் கூட அப்படி ஒரு காமெடியை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள்.

11

ஒரு பையைத் தூக்க 700 ரூபாய்

நமக்கெல்லாம் அருவியைப் பார்த்தால் ஆனந்தம் பெருக்கெடுக்கும். போய் ஒரு மட்டமான ஆயில் மசாஜைப் பண்ணிக்கொண்டு ஆனந்தமாய் குளியல் போடலாமா என்று மனம் ஏங்கும். அருவி1, அருவி 2 என்று அதிகபட்சம் ஐந்தருவிவரைதான் தமிழ் நாட்டில் நமக்கு வாய்ப்பு.

நல்ல ஒரு மழை நேரத்தில் நேபாளத்திற்கும் திபெத்திற்கும் இடையில் உள்ள சாலையில் பயணிக்கும்போது அந்த அற்புதத்தைப் பார்க்க முடியும். பக்கத்துப்பக்கத்தில் 27 அருவிகள்!



ஒரே மலைத்தொடரில் ஒரே திசையில் அடுத்தடுத்து இருந்த அத்தனை அருவிகளையும் பார்க்கும்போது எதுவுமே யோசிக்கத் தோன்றவில்லை... 'ஆ' வென்று வாய்பிளந்து பார்க்கத்தான் தோன்றியது.

'அந்த அருவிகளைப் பார்க்கும்போது மலை மாதாவின் தலையில் மெல்லிய வெள்ளை நரைகள் போல் தோன்றியது' என்று இப்பொழுது எழுத முடிந்தாலும், அந்த நேரத்தில் மூச்சு சத்தத்தைத் தவிர வேறெதுவும் எங்களிடம் கேட்க வில்லை. பிரமிப்பும் ஆச்சர்யமும், சந்தோஷமும் திக்பிரமை யும், ஏக்கமும் தவிப்பும் - இயற்கையின் அழகை வெறும் வார்த்தைகளால் எல்லாம் வர்ணிக்க முடியாது என்பார்கள், அது உண்மைதான் என்று தோன்றிற்று.

"இதெல்லாம் சும்மா சாம்பிள்தான். நீங்கள் கைலாஷ் செல்வதற் குள் இதுபோன்ற அனுபவங்கள் உங்களுக்கு தினம் தினம் ஏற்படும்" என்றார் எங்கள் பஸ்ஸின் கைடு.

இந்த இயற்கைக் குவியலை அடிக்கடி பார்த்திருப்ப தால் அவரது கவலையெல்லாம் 'நேபாளத்தின் புகழ்பெற்ற டிராஃபிக் ஜாமில் மாட்டிக்கொள்ளாமல் எங்கள் அனைவரையும் ஃப்ரெண்ட்ஷிப் பாலத்தில் கொண்டு போய்ச் சேர்த்தால் போதும்' என்பதுபோல் கொஞ்சம் டென்ஷனாகக் காணப்பட்டார்.

காரணம், அவரது கடமை அத்துடன் முடிகிறது. அப்புறம் 15 தினங்கள் கழித்து நாங்கள் திரும்பி வந்த பிறகுதான் அவர் வேலை.

ஆமாம். நேபாளத்தையும் திபெத்தையும் (சைனா) இணைக்கும் நட்புப் பாலத்தோடு கார் பயணம் ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறது. அதன் பிறகு முழுக்க முழுக்க 'டயோட்டா லேண்ட்க்ரூஸர்' பயணமும், நடைராஜா சர்வீ ஸும் மட்டும்தான்.

ஃப்ரெண்ட்ஷிப் பாலத்தில் பாஸ்போர்ட் கெடுபிடிகள் முடியும் வரை மௌனமாக இருக்க வேண்டும். சத்தம், அரட்டை எதுவும் கூடாது



ஃப்ரெண்ட்ஷிப் பாலம்

என்று எங்களுக்கு ஏற்கெனவே ஈஷாவில் கூறியிருந்தார்கள்.

காரணம், சீனாவின் ஆதிக்கம் அந்த இடத்திலிருந்து ஆரம்பம். அவர்களுக்கு இந்தியர்கள் என்றால் கிள்ளுக் கீரைதான். சாதாரண காய்ச்சல் அடித்தால்கூட பன்றிக் காய்ச்சல், பல்லிக் காய்ச்சல் என்று சொல்லி டப்பா அடித்து விடுவார்கள்.

அது மட்டுமல்ல, ஏதோ ஒரு மலையைப் பார்க்க, இத்தனை காசு செலவழித்துக் கொண்டு எதற்காக இத்தனை இந்தியர்கள் இங்கே வருகிறார்கள் என்ற கேலி அவர்களுக்கு எப்போதுமே உண்டு. (கிடக்கான் சப்பை மூக்குக்காரன்!)

ஒரு வழியாக எங்கள் பஸ்கள் மலைச் சுற்றுலாவை முடித்துக்கொண்டு நேபாள-திபெத் எல்லைக்கு வந்து சேர்ந்தன.

அங்கிருந்து பத்து நிமிட தூரம் மேடான பகுதிக்கு நடக்க வேண்டும். நாங்கள் வந்து சேர்ந்தவுடனேயே குட்டிக் குட்டியாய் நேபாள, சீனக் குழந்தைகள் ஆண்களும் பெண்களுமாய் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். எட்டிலிருந்து பதினைந்து வயதிற்குள்தான் இருக்கும்.

மேடான பாதை என்பதால் சிரமம் ஏற்படாமலிருக்க அவர்களிடம் சுமைகளைக் கொடுப்பதுதான் நல்லது என்று எங்கள் கைடு சொல்லியிருந்தார்.

கூலி பேசுவதில்தான் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆமாம். மூட்டையைத் தூக்கி வர எவ்வளவு வேண்டுமென்று கேட்டால் '100' என்று அழுக்காகப் புன்னகைத்தபடியே சொல்வார்கள்.

நாம் தலையாட்டினால் தொலைந்தோம்.

காரணம், அது நேபாள பார்டர். பாலத்தைத் தாண்டினால் திபெத் (சைனா). எனவே இந்திய ரூபாய், நேபாள ரூபாய், சைன யுவான் என்று மூன்று தேசப் பணமும் அங்கே செல்லுபடியாகும்.

அயனாவரம் சதீஷ்

'100' என்று கேட்டார்களே என்று நம்ம ஊர் நூறு ரூபாயையோ, நேபாள நூறு ரூபாயையோ நாம் கொடுத்தால் சிலர் சீன 100 யுவான்தான் வேண்டும் என்று அடம்பிடிப்பார்கள்.

எங்களுடன் கூட வந்தவர்களில் சிலரும் விவரம் புரியாமல் 100 யுவான் நோட்டைக் கொடுத்துவிட்டார்கள்!

அப்புறம் சாவகாசமாகக் கணக்குப் பார்த்தால்தான் வயிறு எரியும். 100 யுவானின் நம் ஊர் மதிப்பு எவ்வளவு தெரியுமா? 700 ரூபாய்!

ஒரே ஒரு பையைத் தூக்க 700 ரூபாய் கொடுத்துவிட்டோமே என்று சிலர் நொந்து நூடுல்ஸ் ஆனார்கள்.

எச்சரிக்கை - நட்புப் பாலத்தில் லக்கேஜ் தரும்போதே இந்தியப் பணமா, நேபாளப் பணமா என்று பேசிவிடுங்கள். சீனப் பணம்

குழந்தை போர்ட்டர்கள்

கேட்டால் 15 யுவான் என்று அடித்துப் பேசுங்கள்! தானாக வழிக்கு வருவார்கள்.

ஒரு வழியாக நட்புப் பாலத்தை அடைந்ததும் அனைவரும் கப்-சிப் என்று ஆனோம். ஒரு பந்தலுக்குள் நாங்கள் கிட்டத்தட்ட அடைபட்டிருந்தோம். சீனாக்காரர்கள் லொள்ளு பண்ணிவிடுவார்கள் என்ற பயம் அனைவருக்கும் இருந்ததால், அமைதியாகக் காணப்பட்டோம்.

கைலாஷ் மலையேறும்போது சூரிய ஒளியின் வெப்பம் கண்களைக் கூசும் என்பதால் ஈஷாவில் எங்களை தொப்பி எடுத்து வரச் சொல்லியிருந்தார்கள். (wide rim hat) கிரிக்கெட் அம்பயர் போட்டிருப்பது போன்ற தொப்பி அது. கௌபாய் படங்களில் அணிந்திருப்பார்களே அதுதான்.

நட்புப் பாலத்தில் நாங்கள் நின்றிருந்தபோது மழை பெய்ததால் சிலர் தங்களின் அம்பயர் தொப்பிகளை அணிந்துகொண்டு ஸ்டைலாகக் காட்சி தந்தார்கள்.

எங்களுடன் யாத்திரை வந்த சதீஷ் கொஞ்சம் ஜாலியான ஆசாமி. ஸ்டைல் பார்ட்டியும்கூட. எப்போதும் கூலிங் க்ளாஸ், கேப், கோட் என்றே பந்தா காட்டிக் கொண்டிருப்பார்.



அந்தச் சமயத்தில் அவரது கேப், டஃபுல் பேக்கில் மாட்டிக் கொண்டுவிட்டதால், கேப் இல்லாமல் எரிச்சல் ஆனார். வேடிக்கையான எரிச்சல்தான் அது.

நான் அவரிடம், "என்ன சார் தொப்பி இல்லையா?" என்று கலாய்த்தேன்.

என்னை முறைத்தவர், "இங்க கேப் போட்டிருக்கற ஏழெட்டுப் பேரையும் தொப்பி போடவிடாம பண்றேன் பாருங்க" என்றார் குறும்பாக.

நான் ஆச்சரியமாய் அவரைப் பார்க்க, மனிதர் என்ன செய்தாரோ, ஏது செய்தாரோ தெரியவில்லை. அத்தனை தொப்பிகளும் நிமிடத்தில் மாயமாய் மறைந்துவிட்டன. பயங்கரமான அமைதி வேறு சூழ்ந்தது.

சதீஷ் என்னதான் செய்தார்?

சத்குரு : கேள்வி – பதில்கள்

நான்: கைலாஷ், மானசரோவர் யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு நம் அரசாங்கம் என்ன வசதிகள் செய்து தரவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

சத்குரு பதில்: என்னுடைய உணர்வில், அரசாங்கம் பெரிய வசதி எதுவும் செய்து தரவேண்டாம். இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கு விசா போன்ற விஷயங்களை எளிமைப்படுத்தினாலே போதும். பக்தர்கள் அங்கே செல்வது யாத்திரைக்குத்தான். வேறு எதற்காகவும் இல்லை. அதுமட்டுமல்ல, சீனாவின் வேறு எந்த இடத்துக்கும் யாரும் செல்லப் போவதில்லை. வெறும் கயிலாயம், மானசரோவர் மட்டும்தான் போகிறோம். அதனால் கடுமையான கட்டுப்பாடுகளைக் கொஞ்சம் தளர்த்தி, சுலபமாக வழி செய்து கொடுத்தாலே போதும். வேறு எந்த வசதியும் வேண்டாம். ஏனென்றால் ஏகப்பட்ட வசதிகளைச் செய்து கொடுத்தால் இது யாத்திரை மாதிரி இருக்காது. டூரிஸ்ட் ப்ளேஸ் மாதிரி ஆகிவிடும் (சிரிக்கிறார்). அதனால் இப்போது இருப்பதே போதும், தடை இல்லாமல் அனைவரும் போய்வரத் தகுந்த ஏற்பாடு செய்தாலே போதும்.

12

உங்களிடமிருப்பது மனம்... என்னிடமிருப்பது...

ஜாக்கிசான் படத்தில் வரும் ஒல்லிப் பிச்சான் கதாநாயகி போல் இருந்த சீனப் பெண் அதிகாரி மாஸ்க்கினால் முகத்தை மறைத்துக்கொண்டு, ஒரு ரிவால்வரை எடுத்து என் நெற்றிப் பொட்டில் வைத்து 'டிக்' கென்று ட்ரிகரைச் சுண்டினாள். இதை ஏதோ கனவு என்றெல்லாம் நினைத்து விடாதீர்கள். ஃப்ரெண்ட்ஷிப் பாலத்தில் நடந்த உண்மை நிகழ்ச்சி இது.

அதைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் நண்பர் சதீஷ், கூட வந்த ஏழெட்டுப் பேரையும் 'தொப்பி போடவிடாம



பண்றேன் பாருங்க' என்று சவால் விட்டு, அதில் ஜெயித்தது எப்படி?

ஆச்சரியம் தாங்காமல் அவரிடமே கேட்டேன்.

மனிதர் விழுந்து விழுந்து சிரித்தார். 'ஒண்ணும் இல்லை சார். ஏற்கெனவே **தலாய்லாமாவோட படம் வச்சிருந்தால் ஜெயில், ஃப்ரி திபெத் போஸ்டர் இருந்தா சவுக்கடி** என்று சைனாக்காரர்களைப் பற்றி நம்மிடம் பயம் இருந்ததால் வேடிக்கையாக ஒரு காரியம் செய்தேன். இந்தத் தொப்பி, கௌபாய் படங்களில் வரும் குதிரை வீரர்கள் அணியும் தொப்பி போல பரந்து இருப்பதால், சைனாக்காரர்களுக்கு கௌபாய் தொப்பி போல அணிந்தால் கோபம் வரும். **அவர்களுக்கு கௌபாய் படங்**

கைலாஷ் யாத்திரைக்கு என்னென்ன வாங்க வேண்டும்?

- ரெய்ன் கோட்
- கழுத்து வரை மூடிய உல்லன் ஸ்வெட்டர்
- உல்லன் டி ஷர்ட்ஸ் - 2 செட்
- 6 செட் உடைகள், (பெண்களுக்குப் புடவை அவ்வளவு சௌகரியமானதல்ல)
- தெர்மல் உள்ளாடைகள் - 2 செட்
- தொப்பி (அம்பயர் அணிந்திருப்பது போல!)
- உல்லன் தொப்பி, ஸ்கார்ஃப்
- வாட்டர் ஃப்ரூப் ட்ரெக்கிங் ஷூ. எக்ஸ்ட்ராவாக ஒரு லேஸ்!
- உல்லன் க்ளவ்ஸ் - 2 செட்
- உல்லன் சாக்ஸ் - 4 செட்
- காட்டன் சாக்ஸ் - 2 செட்
- மெல்லிய பெட்ஷீட்

(கடும் குளிரைத் தாங்கக்கூடிய லெதர் ஜாக்கெட்டையும், ஸ்லீப்பிங் பேக் (Sleeping bag) கையும் காத்மண்டுவில் கொடுப்பார்கள். பத்திரமாகத் திருப்பித் தந்துவிட வேண்டும். காணாமல் போனாலோ, கிழிந்து போனாலோ அதற்குண்டான தொகையைத் தந்துவிடவேண்டும்)

களையும் பிடிக்காது. அந்தத் தொப்பி அணிந்தவர்களையும் பிடிக்காது என்று சும்மா ஒருவரிடம் கலாட்டா பண்ணினேன். அது அப்படியே அடுத்தடுத்த நபர்களின் காதுகளுக்கும் பரவி தொப்பியெல்லாம் காணாமப் போச்சு" என்று சிரிக்க ஆரம்பித்தார்.

என்னாலும் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இருந்தாலும் சைனா அதிகாரிகள் இதை கவனித்துவிடக்கூடாது என்று ரகசியமாய்ச் சிரித்தேன். (மறுநாள் விஷயத்தை அனைவரிடமும் சொல்லி சதீஷ் செலவில் அந்த ஏழெட்டுப் பேருக்கும் ஆளுக்கு ஒரு கோக் ட்ரீட் கிடைத்தது தனிக்கதை).

முதலில் என்ன சொன்னேன், ஒரு சீனப் பெண் துப்பாக்கியை என் நெற்றிப் பொட்டில் வைத்தாள் என்றா சொன்னேன்? ஒரு திருத்தம், துப்பாக்கி மாதிரி இருந்த கருவி அது.

என்ன அது? **பன்றிக் காய்ச்சல் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்கும் கருவி அது.** சாதாரணக் காய்ச்சல் இருந்தால் கூட கலர் கலராய் விளக்கெரிந்து காட்டிக் கொடுத்துவிடும். அப்புறம் என்ன? கட்டம் கட்டி உட்கார வைத்து, ஒரு ஊசி போட்டு அப்படியே தாய்த்திருநாட்டிற்குத் திருப்பி அனுப்பி விடுவார்கள். கூட வந்தவர்களுக்கும் காய்ச்சல் தொற்றியிருக்கிறதா என்று படுத்தி எடுத்துவிடுவார்கள்.

ப்ரஸன்னா (மஞ்சுளா ரமேஷின் மகள்) மட்டும் அந்தப் பன்றித் துப்பாக்கியை(!) பார்த்துக் கொஞ்சம் கவலையுடனே காணப்பட்டார். காரணம், சென்னையிலிருந்து புறப்படும் போதே அவருக்கு நல்ல காய்ச்சல். சாதாரண ஜுரம்தான். நட்புப் பாலத்திலும் அந்தக் காய்ச்சல் லேசாகத் தொடர்ந்தது. **அந்தத் துப்பாக்கி, தன்னுடைய கைலாஷ் பயணத்தைச் சுட்டுவிடுமோ என்று நிறையவே அவர் பதறினார்.** அதனால் க்யூவில் கடைசியில் போய் கவலையுடன் நின்று கொண்டார்.

ஆனால் சைனா தயாரிப்புகள் பற்றித்தான் நமக்குத் தெரியுமே! சைனா பொம்மை, சைனா சாக்லேட், சைனா செல்போன் என்று எல்லாமே தரம் கம்மிதானே! சைனாக்காரி மட்டும் எப்படி இருப்பாள்? பெருமாள் கோயிலில் சடாரி வைப்பது போல் அந்தத் துப்பாக்கியை எல்லார் தலையிலும் வைத்து வைத்து எடுத்தாளே தவிர, வேறு எதையும் கவனிக்கவே இல்லை. நல்ல வேளையாய் யாருக்கும் எந்தப் பிரச்னையும் எழவில்லை. ப்ரஸன்னா முகத்தில் ஏக சந்தோஷம்.

அந்தப் பரபரப்பான நேரத்தில்தான் சுவாமி உல்லாசா



என்னை அழைத்தார். **"சத்குரு உங்களை அழைக்கிறார்"** என்றார்.

சுற்றிலும் 150 பேர் இருக்க அந்தக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு, நான் சத்குருவை நெருங்கினேன். அவரை அவ் வளவு நெருக்கத்தில் பார்ப்பது அதுதான் எனக்கு முதல் முறை. என்னவோ **உடம்பு முழுக்கச் சில்லென்று ஆனமாதிரி இருந்தது எனக்கு.** அவர் என்னைத் தன் கூர்மையான கண்களால் உற்றுப் பார்த்தார். அப்பா, எத்தனை பவர் ஃபுல்லான கண்கள். கம்பீரமும், கவர்ச்சியும், கண்டிப்பும், கனிவும்! ஒரே நேரத்தில் ததும்பும் கண்கள். என்னையே உற்றுப் பார்த்தார். வணங்கினேன்.

"நீங்கள் ஆசிரியராக இருக்கும் குமுதம் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். இன்டர்நெட்டிலும் பார்த்திருக்கிறேன்" என்ற சத்குரு அவரது ஞானத்தின் ஆன்ட் டெனா போல் எனக்குத் தோன்றிய நீண்ட வெண்தாடியை நீவியபடி புன்னகைத்தார். அனைவரும் டென்ஷனாகக் காணப்பட, அவர் மட்டும் செம கூலாக இருந்தார். அதுதான் சத்குரு!

துப்பாக்கி!

என்னுடன் கைலாஷ் யாத்திரைக்கு வந்திருந்த சுப்ரமணிக்கு நெடுநாளாய் ஒரு சந்தேகம் இருந்தது. **சத்குருவைப் பார்த்தாலே அவர் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய் வழியும்.** கட்டுப்படுத்த முடியாமல் திணறுவார். மேலும் பலருக்கும் இந்த அனுபவம் நிகழ்வதுண்டு.

அதனால் சத்குருவை நான் முதலில் பார்க்கும்போதே இப்படிக் கண்ணீர் வருவதன் காரணத்தை அவரிடம் கேட்டு பதில் சொல்லுங்கள் என்று பலமுறை என்னிடம் கூறியிருந்தார், சுப்ரமணி.

அந்த இடத்தில் நிறைய பேச வாய்ப்புக் குறைவுதான் என்றாலும், தயங்காமல் சத்குருவிடம் "ஏன் உங்களைப் பார்த்தால் பலருக்கும் கண்ணீர் வருகிறது?" என்று கேட்டேன்.

"எனக்கும் அப்படித்தான். இப்படி இருக்கிறார்களே என்று மனிதர்களைப் பார்த்தால் கண்ணீர் வருகிறது" கடகடவென சிரித்தார் சத்குரு.

"ஞானத்திலும், யோகத்திலும், தியானத்திலும் ஒப்பற்று விளங்கும் உங்களுக்கும் மற்ற சராசரி மனிதர்களுக்கும் என்ன வித்தியாசம்? உங்களைப் போல் அனைவரும் மாற என்ன செய்யவேண்டும்?" சற்றுத் தயங்கியபடி அடுத்த கேள்வியைக் கேட்டேன்.

மீண்டும் புன்னகை "உங்களிடம் இருப்பது மனம். என்னிடம் இருப்பது உயிர்." கணீரென்று பதில் வந்தது.

சத்குரு சொன்னது ஒரே வரி பதில்தான். ஆனால் ஒரு புத்தகம் எழுதும் அளவுக்கு அதில் ஆழ்ந்த கருத்து இருப்பது உங்களுக்குப் புரிகிறதுதானே?

புரியாதவர்கள் யோசியுங்கள். புரிந்தவர்கள் அனுபவி யுங்கள்.

13

150 பேருக்கு உயிர் கொடுத்தவர்கள்!

"உங்களிடம் இருப்பது மனம். என்னிடம் இருப்பது உயிர்." சத்குருவின் வைர வரிகள் எனக்குள் எதிரொலிபோல் சுழன்று சுழன்று அடிக்க, ஃப்ரெண்ட்ஷிப் பாலத்திலிருந்து திபெத்திற்குள் நுழைந்தோம்.

குறுகலான, சரிவான பாதை. குளிர், தாடையைத் தட்டிப் பார்த்தது. சாலையோரத்தில், ஒரு ரயில் வண்டி நிற்பதைப்போல கோடி ரூபாய்க்கு மேல் விலைகொண்ட டயோட்டோ லேண்ட்க்ரூஸர் (Toyoto landcruiser) வண்டிகள் கம்பீரமாக, தெனாவட்டாக **'இந்தப் பாதையில்**



ஷெர்ப்பாக்கள்

செல்ல எங்களை விட்டால் வழி இல்லை' என்று சொல்வதுபோல வரிசை வரிசையாக நின்றுகொண்டிருந்தன.

40 டயோட்டாக்கள். திபெத்தில் உள்ள அத்தனை வண்டிகளையும் ஈஷாகாரர்கள் பிடித்து வந்துவிட்டார்கள் என்று தோன்றிற்று! ஒரு வண்டிக்கு நான்கு பேர்! பயணம் முடியும் 15 நாட்களும் அந்த நால்வர் அணி ஒன்றாகத்தான் செல்லவேண்டும். ஒருவர் வரத்தாமதமானாலும் அழைத்து வரவேண்டியது மற்றவர்கள் பொறுப்பு. தவிர 20 பேருக்கு ஒரு டீம் லீடர் உண்டு. ஏதாவது தேவை, பிரச்னை என்றால் லீடரிடம் சொன்னால் போதும். அவர் பார்த்துக்கொள்வார். பக்கா!

நான், அனிமேட்டராகப் பணி புரியும் காமேஷ், மஞ்சுளா ரமேஷின் மகளான ப்ரஸன்னா, ஈஷாவில் டீச்சராகப் பணிபுரியும் வித்யா கணேஷ் ஆகிய நால்வருக்கும் ஒரு வண்டி.

எங்கள் டிரைவரின் பெயர் சூங் தா. **டிரைவரிடம் மெதுவாகப் போ என ஆக்ஷன் காட்டினால், மனிதர் சிரித்துக்கொண்டே வேகமாகப் போவார்.** வண்டியை நிறுத்தச் சொன்னால், அதற்கும் சிரித்துக் கொண்டே சி.டி. ப்ளேயரைப் போடுவார்!

ஜாடைகூட நமக்கு ஒத்துவராது. 'ஆமாம்' என்பதற்கு 'இல்லை' என்பது போல் தலையாட்டுவார். 'இல்லை'க்கு 'ஆமாம்'!

'ஒரு' மாதிரியான ஆளை நம் தலையில் கட்டி விட்டார்களோ என்று அச்சம்கூட ஆரம்பத்தில் ஏற்பட்டது. அப்புறம் விசாரித்தபோது எல்லா டிரைவருமே இப்படித்தான் என்பது தெரிந்தது. காரணம் அவர்களுக்குத் திபெத் மொழி தவிர வேறு மொழி தெரியாது. வேறு மொழிகள் இருக்கின்றன என்பதுகூடத் தெரியாததுபோல் இருந்தார்கள்.

ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும் போகப் போக நாங்கள் வேடிக்கையாக எடுத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டோம்.

இனிமேல் கைலாஷ்வரை இந்த கார் பயணம்தான்.

ஜாங்மூ (Zhangmu), சாகா (Saga), பரயாங் (Paray-ang) என்று ஒவ்வொரு நாள் ஒவ்வொரு ஊரில் தங்கி மானசரோவரை அடையவேண்டும்.

திபெத் தேசம் கடல்மட்டத்திலிருந்து 16000 அடி வரை உயரம் கொண்ட பூமி. **உலகிலேயே மிக உயரத்தில் அமைந்த**



நாடு இதுதான் என்பதால்தான் 'உலகத்தின் கூரை' என்று திபெத்தை அழைக்கிறார்கள்.

எங்கள் வண்டிகள் ஜாங்மூவை நோக்கி நகர்ந்தன. திபெத் முழுக்க குறுகலான மலைப் பாதைதான். ஓர் ஊரிலிருந்து பக்கத்து ஊருக்குச் செல்ல, ஏழெட்டு மலைகளை ஏறிப் பயணிக்கவேண்டும்.

எங்கும் மலை, எதிலும் மலை, உலகின் மிகப் பெரிய ஓவியர்கள், சிற்பிகள் குழு ஒன்று சேர்த்து வடிவமைத்ததுபோல விதவிதமான மலைகள். குளிர்க்காற்றும், புழுதி மணலும் மூக்கைக் கடிக்கிறது. ஒன்றும் புரியாமல் கும்மா வாயைப் பிளந்து வேடிக்கை பார்க்கவேண்டியதுதான். வாய்க்குள் தூசி புகாமல் இருக்க, இருக்கவே இருக்கிறது மாஸ்க்!

எங்களின் இரண்டு வார உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 'ஷெர்ப்பா' (Sherpa) எனப்படும் ஏழெட்டுப் பேர் வந்தார்கள். திபெத்திய நேபாளிகள்!

இவர்கள் வெறும் சமையல்காரர்கள் அல்ல. மைனஸ் டிகிரி குளிரிலும் ஏகப்பட்ட சமையல் சாமான்கள், வாட்டர் கேன்கள், கேஸ் சிலிண்டர்கள் என்று எத்தனை வெயிட்

டாக இருந்தாலும் அஸால்ட்டாக தூக்கிக்கொண்டு உற்சாகமாக நடக்கும் அவர்களைப் பார்த்தாலே ஆச்சரியம் தாங்கவில்லை!

சுருக்கமாகச் சொன்னால் எங்கள் 150 பேருக்கும் உயிர் கொடுத்தவர்கள் அவர்கள்தான். காலையில் பல் தேய்க்க வெந்நீர், உடனே டீ, டிபன், லஞ்ச், ஸ்நாக்ஸ், டின்னர், என்று அந்த 'ஷெர்ப்பா'க்களின் சுறுசுறுப்பைச் சொல்லி மாளாது.

அவர்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லாவிட்டால் சாப்பிட்ட சாப்பாடு செரிக்காது!

ஷெர் என்றால் திபெத்திய மொழியில் கிழக்கு. பா என்றால் மக்கள். இமய மலையில் கிழக்குப் பகுதியில் வசிக்கும் மக்கள் ஷெர்ப்பா.

திபெத்திலிருந்து 500 ஆண்டுகளுக்கு முன்னால்

கைலாஷ் செல்ல என்ன வேண்டும்?

- தேவையான மருந்துகள் (தலைவலி, ஜலதோஷம், வாமிட், செரிமானமின்மை)
- சிறிய ஃப்ளாஸ்க் (அரை லிட்டர்)
- வாட்டர் பாட்டில் (1 . 5 லிட்டர்)
- டாய்லட் டிஷ்யூ பேப்பர்
- உள்ளாடைகள்
- சன் ஸ்கிரீன் லோஷன் (75 SPF)
- Hand Sanitizer
- காலணி
- பெரிய பிளாஸ்டிக் கவர்கள் 8
- டவல்
- கூலிங் க்ளாஸ்
- டார்ச் லைட் (எக்ஸ்ட்ரா பேட்டரியுடன்)
- ஸ்டில் கேமரா (வீடியோ கேமரா அனுமதி இல்லை!)
- விளக்கெண்ணெய்!

நேபாளத்திற்குக் குடியேறியவர்கள். மலை ஏறுவதில் இவர்களுக்கு இணை யாருமே இல்லை. ஆனால், இவர்களின் தியாகம் வெளியில் தெரிவதேயில்லை.

எட்மண்ட் ஹில்லாரி எவரெஸ்ட் சிகரத்திற்கு ஏறியதைப்

- சாக்லெட், பிஸ்கட்ஸ், பிஸ்தா, முந்திரி, உலர் திராட்சை, காரம்!
- எல்லாவற்றிலும் ரொம்ப முக்கியம். உங்கள் பாஸ்போர்ட்!

  (அதை ஒரு ஜெராக்ஸும் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்)
- கைச் செலவுக்கு குறைந்தது 10,000 ரூபாய். (நூறு ரூபாய்களாக!)

எங்கே வாங்கலாம்?

சென்னையில் ஸ்பென்சர் பிளாஸாவில் எல்லாம் கிடைக்கிறது. பேரம் பேசி வாங்குங்கள். விலை மலிவு என்பதற்காகத் தரமற்றதை வாங்கினால் பயணத்தின் போது சிரமம் உண்டாகும். சாமர்த்தியம் இருந்தால் முன்பே கைலாஷ் சென்று வந்தவர்களிடம் இரவல் வாங்கலாம்.

என்ன செலவாகும்?

ரூ.10,000 முதல் 20,000 வரை இந்தப் பொருட்கள் வாங்கத் தேவைப்படும்.

பாடத்தில் படித்திருப்போம். கை வீசி மலையேறிய அந்த ஹில்லாரியின் மூட்டைகளைச் சுமந்துகொண்டு கூடவே ஒரு ஷெர்ப்பாவும் ஏறினார். டென்சிங் நோர்கே என்பது அவர் பெயர். (அவர்தான் முதலில் எவரெஸ்டில் ஏறி ஹில்லாரிக்குக் கைகொடுத்துத் தூக்கிவிட்டார் என்றும் சொல்வார்கள்.) அவரது பெயர் சரித்திரத்தில் காணாமல் போய்விட்டது.

அதுமட்டுமல்ல எவரெஸ்ட்டை உலகிலேயே அதிக முறை தொட்டவரும் ஒரு ஷெர்ப்பாதான். அபா ஷெர்ப்பா என்பவரின் காலடிகள் 17 முறை அங்கே பதிந்திருக்கின்றன. அதுவும் யாருக்கும் தெரியாது.

எதுபற்றியும் கவலைப்படாமல் ஷெர்ப்பாக்கள் தங்கள் கடமையிலேயே கண்ணாக இருக்கிறார்கள்.

எங்களது வண்டிகள் நியாலம் பகுதியில் அமைந்த அழகிய நகரமான ஜாங்முவை அடைவதற்குள் நான் உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்.

பார்வதி தேவியின் மார்பகம்தான் கயிலாய மலை என்கிற, யாருக்கும் தெரியாத கதை!

14

சிவ(ன்) பூஜை

உலகத்திலேயே மிகவும் அழகான, தூய்மையான, தனிமையான, அபூர்வமான மற்றும் மர்மமான மானசரோவர் ஏரி.

பொன்மாலைப் பொழுது. மிகுந்த குளிர்ச்சி பொருந்திய அந்த மானசரோவர் ஏரியில் பார்வதி தேவி தன்னந்தனியாக நீந்திக் கொண்டிருந்தாள். மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்ட அவள் ஆனந்தமாய் அங்கே நீராடினாள்.

ஆசை தீர குளித்து முடித்த தேவி, சந்தோஷமாய்க் கரையேறினாள். நான்கு பக்கமும் மலையால் சூழ்ந்திருக்க, சாயங்கால சூரியனின் தகதகப்பு, மலைகளிலும் மானசரோவர்



நீரிலும் பட்டு, பளிங்காய்ப் பிரதிபலித்து அந்த ஏரிக்கரையையே தங்கமாக ஜொலிக்க வைத்தது.

அந்தத் தகதகப்பு பார்வதியின் மனசை லேசாக்கிற்று. உற்சாகப்படுத்திற்று. உவகையாக்கிற்று. கொஞ்ச நேரம் சூரியக் குளியல் எடுத்தால் அந்த நடுக்கும் குளிருக்கு இதமாக இருக்கும் என்று தோன்றிற்று.

ஏகாந்தமாக, ஏக ஆனந்தமாக அந்த ஏரிக்கரை மணலில் மல்லாந்து படுத்துக் கொண்டு சூரியக் குளியல் நிகழ்த்த ஆரம்பித்தாள். அதிலேயே லயித்துக் கண்களை மூடிக் கொண்டாள் பார்வதிதேவி.

அப்போதுதான் அந்தப் பக்கம் வந்தார் சிவபெருமான். அவர் கொஞ்சம் லாகிரி வஸ்து சாப்பிட்டிருப்பார் போலிருக்கிறது, தள்ளாடித் தள்ளாடி நடந்தார். சூரிய ஒளி வேறு பளபளத்து அவர் பார்வையைத் தடுமாற வைத்தது.

மானசரோவர் நதிக்கரையில் தட்டுத்தடுமாறி நடந்து வந்த சிவன், பார்வதி சயனித்திருக்கும் காட்சியைக் கண்டார். தொலைவிலிருந்து பார்க்கும்போது அவருக்கு பார்வதியின் இடது பக்க மார்பகம் தெரிந்தது. அதைப் பார்த்ததும் சிவலிங்கம் போல் அவருக்குத் தோன்றியது. 'ஆஹா, நாம் சிவ பூஜை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது போலும்' என்று நினைத்தார் சிவன். (மானுட உருவில் சிவனே ஆனாலும் ஆதி அந்தமில்லா இறைவனுக்கு ஆத்ம பூஜை செய்வது மரபு.)

கண் மூடி அமர்ந்தார் சிவன். மந்திரங்களை ஜபித்து பூஜை பண்ண ஆரம்பித்துவிட்டார். சிவ பூஜை என்பதே மகத்துவம் வாய்ந்தது. அதுவும் சிவனே சிவனுக்குச் செய்யும் பூஜை என்றால் கேட்கவா வேண்டும்?

அந்த பூஜையின் வலிமையில் அப்போதுதான் அந்த அதிசயம் ஏற்பட்டது. பார்வதி தேவியின் இடது மார்பகம் பெரிதாக வளர்ந்தது. ஆமாம். உயர்ந்து, உயர்ந்து... மலை அளவுக்கு மாறிற்று. அந்த மலைதான் கயிலாய மலை!

என்ன இது, கதை ஒரு மாதிரியாக இருக்கிறதே என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றுகிறதா?

இதே கேள்வியை சத்குருவிடம் கேட்டபோது அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா?

இதோ அந்த பதில் :

"சாதாரண மனிதர்களான நமக்கு தேவ காரியங்களுக்கான முழு அர்த்தமும் தெரியவேண்டும் என்று அவசியமில்லை. பார்வதி குளித்தாள், அவளது மார்பகத்தைப் பார்த்ததும் சிவலிங்க நினைவு சிவனுக்கும் வந்தது என்று சொல்லப்படுவதை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. அதன் மூலம் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகமெங்கிலும், குறிப்பாக நம்முடைய கீழை நாடுகளில் பெண்ணின் மார்பகம் என்பது புனிதமான ஒரு விஷயமாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் பிறந்த குழந்தை உயிர் வாழ ஓர் அமுதமாக இருப்பது தாய்ப்பால்தான். வாழ்க்கையைத் தருவது அதுதான். அதனால் பெண்களின் மார்பகங்கள் தெய்வீகமானது. மரியாதைக்குரியது. புனிதமானது. நவீன யுகத்தில் அது கொச்சைப்படுத்தப்பட்டாலும், நம் நாடுகளில் வாழ்க்கையின் அடிப்படையே அதுதான் என்பதால் மதிப்புத் தருகிறோம்.

அதாவது கைலாஷும் புனிதமானது, தெய்வீகமானது என்பதை நாம் புரிந்துகொள்வதற்காக இப்படிச் சொல்லியிருக்கலாம். தாய்ப்பாலைக் குழந்தை பருகுவதைப் போல நீங்களும் கைலாஷை உறிஞ்சுங்கள். உங்கள் வாழ்க்கையின் பரிமாணத்தையே முற்றிலுமாக இது மாற்றும்.

உங்கள் உடல், உயிர் வாழ நீங்கள் உங்கள் அன்னையின் பாலைப் பருகுகிறீர்கள். அந்த மார்பகம் போல் காணப்படும் கைலாஷின் தன்மையினையும் நீங்கள் உள்வாங்கிக் கொண்டால் உங்கள் உள்ளம் உயிர் வாழும். நீங்கள் மிகச் சிறந்தவராக மாறுவீர்கள். அந்தக் கதை உணர்த்துவது இதைத்தான்." சொல்லிமுடித்தார் சத்குரு.

ஃப்ரெண்ட்ஷிப் பாலத்திலிருந்து ஜாங்மூ நான்கு மணி நேர கார் பயணம்தான். ஆனாலும் மலையேற்றம் என்பதால் கொஞ்சம் சோர்வு எல்லோரையும் தாக்கியது. நான்கு பக்கமும் விதவித மலைகள், விதவித பள்ளத்தாக்குகள், விதவித மரங்கள், விதவித வண்ணங்கள், அதனால் எங்களுக்கு விதவித எண்ணங்கள்!

மனித நடமாட்டமெல்லாம் எதுவுமில்லை. ஆங்காங்கே சீன எழுத்துகளில் சாலைத் தகவல்கள் மின்னுகின்றன. மண் பாதையைத் தார்ச் சாலையாக்கும் ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிகாரிகள், சீனர்கள். தொழிலாளிகள், திபெத்தியர்கள்! தாடி வைத்த மாடுகளை மேய்க்கும் தாடியில்லாத மனிதர்கள். மற்றபடி எங்கும் அமைதி.

அரை மணிக்கு ஒரு தடவை சின்னதாய் அழுக்கான ஒரு கிராமம் வருகிறது. வீட்டின் ஒரு பகுதியையே கடையாக, ஓட்டலாக மாற்றியிருக்கிறார்கள். வண்டியை நிறுத்தினால் கும்பலாக அழகழகான அழுக்குக் குழந்தைகளும் சிறுவர்களும் பெண்களும் வந்து நம்மைச் சுற்றிக் கொள்கிறார்கள். பிச்சை!

எதைக் கொடுத்தாலும் புன்னகையுடன் வாங்கிக் கொள்கிறார்கள். சாக்லேட், பிஸ்கட், யுவான் பணம்

என்று கும்பல் கும்பலாக நன்றி பாவத்துடன் பெற்றுக் கொள்கிறார்கள். எங்களுடன் வந்த வெளிநாட்டுக்காரர்கள் 50, 100 என்று யுவான்களாய் எடுத்துக் கொடுக்க அவர்களைச் சுற்றித்தான் கூட்டம் மொய்த்தது.

அப்போதுதான் நான் ஒரு காரியம் செய்தேன். **சென்னையிலிருந்து நான் எடுத்துச் சென்றிருந்த ஒரு பொருளை அவர்களுக்கு எடுத்துக் கொடுக்க ஆரம்பிக்க மொத்தக் கூட்டமும் என்னைச் சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தது.** விஷயம் அவர்களுக்குள் பரவி, மேலும் கூட்டம் குவிந்தது. ஃபாரினர்களே, நான் தரும் பொருள் அவர்கள் கொடுக்கும் 100 யுவான்களை விட விலை உயர்ந்ததா என்று எட்டிப் பார்த்தார்கள். நான் கொடுத்த பொருளின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? இரண்டரை ரூபாய்தான். அதற்குத்தான் திபெத்தில் அத்தனை மதிப்பு!

திபெத்தில் கிடைக்காத, அவர்களுக்கு மிகவும் பிடித்த அந்தப் பொருள் என்ன தெரியுமா? சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். நீங்கள் கைலாஷ் செல்லும்போது அதனை மறக்காமல் கொண்டும் செல்வீர்கள். அந்தப் பொருள்....

15

திபெத்தியர்களுக்கு மிகவும் பிடித்த பொருள்

கிறிஸ்துமஸ் நேரத்தில் வண்ண மயமாக ஒளிரும் கிறிஸ்துமஸ் மரங்களைப் பல இடங்களில் பார்த்திருப்பீர்கள். தொலை விலிருந்து பார்க்கும்போது ஜாங்மூ நகரமும் இரவில் அப்படித்தான் இருக்கிறது.

ஒரு பெரிய மலை. அது முழுக்க வீடுகளின் வெளிச்சக் கீற்றுகள். அடர்த்தியான கலர் கலர் ஒளிகள். நெருங்க, நெருங்க நம் ஊர் பாண்டி பஜார் மாதிரி கடைகள், நெரிசல்கள் என்று திணறு கிறது ஜாங்மூ. உலகத்தின் பல்வேறு முகங்கள் ஸ்கூல் பையன் மாதிரி பேக் பேக் (Back bag)குடன் உற்சாகமாக அங்கே திரிந்து கொண்டிருக்கின்றன.



ஜாங்கிரியை உடைத்துப் போட்ட மாதிரி கொசகொச வென்று சீன எழுத்துகளில் கடைப்பலகைகள். தாய் மண்ணின் (திபெத்)

எழுத்துகள் மருந்துக்கும், ஏன் பிரிஸ்கிரிப்ஷன் அளவுக்குக் கூடக் காணோம்!

செமை டிராஃபிக்காய் இருந்ததால், (எங்களுடையதே 40 கார்கள்!) ஓட்டலுக்கு அரை கி.மீ. ந(ட)டராஜா!

ஐந்து செட் உடைகளை உள்ளுக்குள் அணிந்திருந் தாலும் குளிர், நெஞ்சாங்கூட்டை அசைத்துப் பார்த்தது. பனி வேறு பற்களை ஆட்ட முயற்சித்தது. **7400 அடி உயரத் திலேயே இப்படியென்றால் இன்னும் 10,000, 15,000 எல்லாம் என்ன பண்ணுமோ என்ற அச்சம் எட்டிப் பார்த்தது.**

இந்திய, சீன, அமெரிக்க உணவுகள் கிடைக்கும் என்று உணவு விடுதிகள் கதறிக்கொண்டிருக்கின்றன. தொப்பிகளும், உல்லன் கோட்டுகளும் அதிக விலையில் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. டெலிபோன் பூத்துகள் விடாமல் நம்மை அழைக்கின்றன. **பெண்களுக்கான பியூட்டி பார்லர்கள், நம் ஊர் போல் ரகசியமாக இல்லாமல், நான்கு பக்கமும் கண்ணாடி களுடன் 'பார்த்துக்கொள்ளுங்கள்' என்று அழகு காட்டுகின்றன.** வெளி நாட்டு ஆன்ட்டிகளுக்கு தலைகுனிந்து சீனப் பெண்கள் பெடிக்யூர் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தொப்பை ஆன்ட்டிக்கு மசாஜ்!

நாங்கள் தங்கும் ஓட்டலின் பெயரும், ஊரின் பெயரும் ஒன்றுதான் - ஜாங்மூ! அங்கே ஒரு வேடிக்கை நிகழ்ந்தது.

எங்கள் க்ரூப்பில் வந்த வயதான சிலரும், பெண்களும் தங்களுக்கு கிரௌண்ட் ஃப்ளோர் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று ரிசப்ஷனில் கேட்டுப் பெற்றார்கள்.

ஆனால் நொந்து நூடுல்ஸ் ஆனார்கள். ஏன் தெரியுமா? நான்காவது மாடியில்தான் என்ட்ரன்ஸ், ரிசப்ஷன் இருக்கிறது. மலைச்சரிவு என்பதால் முதல் மூன்று மாடிகள் கீழே இருக்கின்றன.

அதனால் நான்காவது தளம் ஒதுக்கப்பட்டவர்களுக்கு சுலபமாய் இருக்க, கிரௌண்ட் ஃப்ளோர் கேட்டவர்கள், மூன்றுமாடி கீழே இறங்கவேண்டும்! லிஃப்ட் வேறு கிடையாது!

ஆனால் யாரும் அலுத்துக்கொள்ளவில்லை. கைலாஷ் நடைப்பயணத்துக்கான ஒத்திகை என்று செமை ஸ்போர்ட்டிவாய் எடுத்துக்கொண்டார்கள். ஈஷா ஆட்களாயிற்றே.

இரவு எட்டு மணியானாலும் வெயில் தகித்துக் கொண்டிருந்தது. சீனத் தலைநகர் பெய்ஜிங் டைம்தான் இங்கும்.

கடிகாரத்தை 2.30 மணிநேரம் முன்னோக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

உலகின் பல பகுதி மக்கள் வந்து போவதால் ஜாங்மூ நகரம் பரபரப்பாகக் காணப்படுகிறது. திபெத் முழுக்க இப்படித்தான் இருக்குமா என்று நினைத்தால் இல்லை. நிச்சயமாக இல்லை.

சத்குரு : ஆன்மீகக் கேள்வி - பதில்கள்

நான் : திபெத்தை சைனா ஆக்கிரமித்திருப்பது சரியா?

சத்குரு பதில் : ஒரு தேசத்தை இன்னொரு நாடு ஆக்கிரமிப்பது சரியா, தவறா என்ற கேள்விக்கே இடமில்லை. ஆனால் திபெத் விஷயம் வேறு. இங்கே சீனா ஆக்கிரமித்திருப்பதை மதவாதிகளும், அரசியல்வாதிகளும்தான் எதிர்க்கிறார்கள். சராசரி மக்கள் அப்படியில்லை. ஏனென்றால், முன்பு பள்ளிக்கூடங்களும், சாலை வசதிகளும் இங்கே எல்லா இடங்களிலும் கிடையாது. இப்போது சீனா, ஊருக்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டிக்கொண்டிருக்கிறது. நாடெங்கும் சாலைகள் மளமளவென போடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அடிப்படை வசதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

நான் : யாத்திரிகர்களிடம் திபெத்தியக் குழந்தைகள் பிச்சையெடுப்பது இங்கே சகஜமாகி விட்டது. அவர் களுக்குப் பிச்சை போடாதீர்கள் என்று நீங்கள் சொன்னீர்களாமே?

சத்குரு பதில் : அர்த்தம் அது அல்ல. குழந்தைகளை, இளையதலைமுறையைப் பிச்சைக்காரர்களாக ஆக்கிவிடாதீர்கள் என்பதற்காக அப்படிச் சொன்னேன். காசு கொடுத்து நீங்கள் பழக்கினால் உழைக்கின்ற ஆசையே அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். பணம் கொடுக்காதவர்கள் மீது கோபம் வரும். திருடலாமா என்று ஆசை உண்டாகும். தவிர கைலாஷ் செல்லும்போது உங்களிடமுள்ள உணவுப் பண்டங்களைக் கொடுக்கவேண்டாம். மலையில் உங்களுக்கு அவை அவசியத் தேவையாக இருக்கும். அங்கே கஷ்டப்படும் நிலை உருவாகலாம். அதனால் திரும்பி வரும்போது, மிச்சம் இருப்பதைக் கொடுங்கள். தேவைப்படாத உடைகளைக் கொடுங்கள். காசு கொடுத்து அவர்களைக் கெடுக்க வேண்டாமே.

குதிரை தேசம்

இங்கே மட்டும் கூட்டம் இருப்பது ஏன்? **எவரெஸ்ட் மலைச்சிகரம் இங்கிருந்து பக்கம் என்பதுதான் காரணம்.** அதனால்தான் உலகத்தின் பல பகுதிகளிலிருந்து டிரெக்கிங் ஆசையில் மக்கள் குவிகிறார்கள். அதற்கேற்ப இடமும் இயற்கை அன்னையின் ஆசியுடன் பசுமை குலுங்கக் காட்சியளிக்கிறது.

இனிமேல் மக்கள் கூட்டத்தையோ, ஓட்டலையோ, ப்யூட்டி பார்லர்களையோ, இயற்கை எழில் சூழ்ந்த இதுபோன்ற பிரதேசத்தையோ காண முடியாது. ஒரு பாத்ரூம் வசதி கூடக் கிடைக்காது. இன்னும் 10 நாட்களுக்கு மணல் காற்று வீசும் பாலைவனம்தான்.

தலைசுற்றும். மூக்கிலிருந்து ரத்தம் கசியும். வாந்தி பெருக்கிடும். உடம்பு முறுக்கும். புத்தி தடுமாறும். சமயத்தில் உயிர் கூடப் போய்விடும் அபாயகரமான ஆட்டம் ஆரம்பம்.

எங்கள் அடுத்த இலக்கான சாகாவை நோக்கி ஓர் அதிகாலைப் பயணம் துவங்கிற்று. 10 மணிநேரப் பிரயாணம். சவால் பயணம்.

தீபெத்தில் கிடைக்காத, ஆனால் அவர்களுக்கு மிகவும் பிடித்த, ஒரு பொருளை நான் கொடுத்தவுடன் போட்டி போட்டுக்கொண்டு பெண்களும், குழந்தைகளும் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டார்கள் என்று சொன்னேனே, அது என்ன தெரியுமா?

ஐந்து ரூபாய்க்கு 2 பாக்கெட் என்று நம் ஊரில் பிளாட்ஃபாரக் கடைகளில் கூடக் கிடைக்கும் ஸ்டிக்கர் பொட்டுதான் அது!

அவர்களுக்கு அது விலை மதிப்பிட முடியாத பொருள். "பிந்தி, பிந்தி..." என்று வாயெல்லாம் புன்னகையாக உங்களைச் சூழ்ந்து கொள்வார்கள். ஒரே நேரத்தில் 2, 3 பொட்டுகளை ஒட்டிக்கொண்டு மஞ்சள் பல் தெரியச் சிரிக்கிறார்கள். 100 யுவானைவிட ஸ்டிக்கர் பொட்டைத்தான் அவர்கள் உயர்வாக நினைக்கிறார்கள்.

நீங்கள் கைலாஷ் செல்லும்போது மறக்காமல் ஸ்டிக்கர் பொட்டு வாங்கிக்கொண்டு போங்கள். அவர்களது மகிழ்ச்சியைக் கண்கூடாகக் காணுங்கள். காசுதான் கொடுக்க வேண்டாம் என்று சத்குரு சொல்கிறாரே தவிர 'பிந்தி' தராதே என்று சொல்லவில்லை!

16

கடவுள் ஓவியன்!

திபெத்தின் பரபரப்பான ஜாங்மூ நகரத்திலிருந்து 'சாகா' நோக்கி எங்களது பத்து மணி நேரப் பயணம் ஆரம்பமாயிற்று. இனிமேல்தான் நிஜமான பயணம். 'பய'-ணம்!

அதிகாலைப் பயணம் என்பதால் அனைவருமே அசந்து தூங்கிவிட்டோம். வெளிச்சத்தில் கண் விழித்தபோது ஆச்சர்யம் களைகட்டியது. அடர்ந்த கருமையும், ப்ரௌனுமாய் இருந்த மலைகளின் இடையே நெளிந்த கறுப்பு ரிப்பன்





போல மெட்டல் பாதை, தொட்டுவிடலாம் போல் தூரத்தில் தெரிந்த பனி படர்ந்த மலை முகடுகள், வெளிர் நீல வானம்... ஆஹா!

சாலைக்கும், மலைக்குமிடையில் மஞ்சள், பச்சை, சிவப்பு என்று இயற்கை கொஞ்சும் பூந்தோட்டங்கள். ஷங்கர் படத்தின் டூயட் களம் போல கலர் கலர் கனவுகள். கடந்துபோகும் உறைந்த அருவிகள். அதில் பட்டுத் தெறிக்கும் குளிர்ந்த காற்றின் சுவாச ஓசை.

இதுதான் சொர்க்கத்துக்கான ஹைவே என்று யாராவது சொன்னால் அப்படியே நம்பிவிடலாம் என்ற மனநிலையில் நான் இருந்தேன். டயோட்டா லேண்ட் க்ரூஸர்கள் வேகவேகமாய் விரைய, இறைவனின் இயற்கைத் தோட்டங்கள் அதைவிட வேகமாய் மறைந்தன.

சிவபெருமான் மாபெரும் ரசனைக்காரன் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது. ஆமாம். தான் வசிப்பதற்காக உலகத்திலேயே அழகான இடமாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அந்த இடத்தைச் சுற்றி இயற்கையை இழைய விட்டு, அகில உலகத்தின் அத்தனை அழகையும் ஒரே இடத்தில்



பிரம்மாவின் புத்திரன்

கொண்டுவந்து, 'தேவலோகத்துச் சிற்பிகளையும், ஓவியர்களையும் மொத்தமாக அள்ளிக்கொண்டு வந்து, அத்தனை பேரையும் ஆத்மார்த்தத்துடன் வேலை வாங்கி, அந்த எழிலை தான் மட்டும் பருகாமல் வரும் பக்தர்களையும், பயணிகளையும் அதில் திளைய விட்டு... கடவுள் கருணை நிறைந்தவன் மட்டுமல்ல, மகா கலைஞன் என்பதும் என்னுள் புலனாயிற்று.

வாழ்க்கை என்பது இனிமையும், வளமையும் மட்டுமல்ல என்பதை இறைவன் நமக்கு உணர்த்துவது போல் அமைந்தது மதிய பயணம். பசுமையெல்லாம் படாரென மறைந்து மலைப்பகுதியில் பாலை வனம் துவங்கிற்று. ஒவ்வொரு மலையையும் கார் ஏறி இறங்க, புழுதிக்காற்று கண்களை மறைத்தது. அவசர அவசரமாய் 'மாஸ்க்' அணிந்துகொண்டாலும் மூக்கு எரிந்தது.

கடவுள் ஓவியன் மலைகளில் தன் கை வண்ணத்தைக் காட்டியிருந்தான். பச்சை மலை, மஞ்சள் மலை, சாம்பல் மலை, வெள்ளை மலை என்று நிற்க வைத்து பெயின்ட் அடித்த மாதிரி வர்ணங்களின் வர்ண ஜாலங்களில் பலவித மலைகள் ஆச்சர்யத்தில் ஆழ்த்துகின்றன. விற்கப்படாத ஓவியங்கள் போல, மலைகள் மட்டும் மணல் காற்றின் பின்னணியில் தனித்து நின்று கொண்டிருக்கின்றன.

மனித நடமாட்டமேயில்லாத இந்த ஆச்சர்யமான மலைப்பகுதியில் திடீரென எங்காவது ஒரு பாதி கட்டி முடிக்கப்பட்ட சிறு கிராமம் எட்டிப் பார்க்கிறது. மிலிட்டரி

கேம்ப் நிறுவவும், நாட்டின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தவும் சீன அரசின் முயற்சிதான் இந்தக் குடியிருப்புகள். கார் சத்தம் கேட்டால் குழந்தைகள் ஓடிவந்து கையாட்டுகின்றன. அல்லது கைநீட்டுகின்றன.

மதிய உணவுக்காக ஒரு மலையடிவாரத்தில் நாங்கள் எல்லாம் ஓரங்கட்டினோம். ஷெர்ப்பாஸ் புண்ணியத்தில் விதவிதமாய் உணவுகள் இருந்தன. யாருக்கும் சாப்பிடப் பிடிக்கவில்லை. பயங்கரமான சோர்வு தாக்கியது. புழுதிக் காற்றாலும், குளிர்க்காற்றாலும் உடம்பு என்னவோ பண்ணிற்று. சிலருக்கு வாமிட். சிலருக்குப் படபடப்பு. சிலருக்கு கிறுகிறுப்பு.

'டைமாக்ஸ் சாப்பிட்டாச்சா?' என்பதிலிருந்து ஆரம்பித்து, எங்கள் 150 பேரையும் ஈஷாவின் டாக்டர் குழு (டாக்டர்கள் சதீஷ், ராணி, சேகர், பழனிச்சாமி, ஷோபா) பறந்து பறந்து கவனித்ததை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். இது போன்று ஒரு டீம் இருந்தால் யாரும், எந்த பாதிப்பும்

பெயிண்ட் அடித்த (?) மலைகள்!



இல்லாமல் கைலாஷ் போய்விட்டு வரலாம்!

தலை சுற்றல், படபடப்பு வராமல் இருக்க, டாக்டர் டீம் சுலபமான ஒரு வழியைச் சொல்லித் தருகிறார்கள்.

அதாவது இரண்டு கைகளையும் நீட்டியபடி, நேராக நின்றுகொண்டு கடிகாரம் போல் மெதுவாக வலதுபுறமாகச் சுற்றவேண்டும். இரண்டு நிமிடங்கள் சுற்றினால் போதும். நல்ல பலனும் கிடைக்கிறது.

எங்களில் பலர், சின்னச் சின்னக் கிராமங்களில் வண்டி நிற்கும்போது இதுபோல் கையை நீட்டிக்கொண்டு சுற்ற, வேடிக்கை பார்க்கும் திபெத் குழந்தைகளும் தங்கள் கைகளை நீட்டியபடி(!) சுற்ற ஆரம்பித்தார்கள்.

ஒரு வழியாக ஜாங்மூவிலிருந்து 336 கி.மீ. பயணித்து, பிரம்மபுத்ரா நதிக்கரையில் உள்ள மிலிட்டரி கிராமமான சாகாவை அடைந்தோம்.

சாகா, சாதாரணமாக இருக்கிறது. மாடுகளும், நாய்களும், பன்றிகளும் திரிகின்ற அழுக்கான ஊர். சில லாட்ஜ்கள் (ரொம்ப சுமார். பாத்ரூம் ரொம்ப ரொம்ப சுமார்). ஒரு கடைத்தெரு (செமை விலை). ஒரு டப்பா சினிமா தியேட்டர்.

டெலிபோன் பூத். (சென்னைக்குப் பேச ஒரு நிமிடத்திற்கு 40 ரூபாய்!)

"இது மிலிட்டரி கேம்ப் உள்ள ஊர். யாரும் இங்கே மறந்துகூட எதையும் ஃபோட்டோ எடுத்துவிடாதீர்கள். பிரச்னை ஆகிவிடும்" என்று எச்சரித்தார்கள். சுவர்களிலும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

"இந்த சப்பை ஊரை எவன் ஃபோட்டோ எடுப்பான்?" என்று நினைத்துக்கொண்டேன்.

"எல்லாப் பொருட்களும் கிடைக்கும் நகரம்(!) இதுதான். ஆக்ஸிஜன் சிலிண்டரிலிருந்து ஜட்டி வரை எல்லாம் இந்த ஊரில் கிடைக்கும். என்ன வேண்டுமோ வாங்கிக் கொள்ளுங்கள். இனிமேல் கடைகளையே நீங்கள் காணமுடியாது" என்று சொல்லிவிட்டார்கள்.

ஒரு ஷாப்பிங் அடித்தேன். கடைகளில் பொம்மை மாதிரி சீனப் பெண். இங்கிலீஷ் ஒரு வார்த்தைகூட அவர்களுக்குத் தெரியவில்லை. 'பிஸ்கட்' கேட்டால்கூட திருதிருவென விழிக்கிறார்கள். என்னுடன் வந்த காமேஷ், அனிமேட்டர் என்பதால் எது வேண்டுமோ, அதைப் படமாக வரைந்து காண்பித்து வாங்கினார்.

ஒரு சூப்பர் மார்க்கெட்டில் பாலிதீன் பைகளில் அடைத்து, பாம்புக் கறியை விற்பனைக்கு வைத்திருந்தார்கள்.

அதைப் புகைப்படம் எடுக்க முனைந்தபோது சைனாக்காரி, செமை டென்ஷன் ஆகிவிட்டாள். துரத்தாத குறை. கூச்சல் போட ஆரம்பிக்க, மிலிட்டரி கேம்ப் பயத்தில் எஸ்கேப்!

மாலை 'சாகா'வில் உள்ள பிரம்மபுத்ரா நதிவரை ஒரு நடைப்பயணம் சென்றோம்.

பிரம்மபுத்ரா என்றவுடன் நம் ஊர் நதியாயிற்றே என்று தோன்றுகிறதா? சரிதான். திபெத்தில் முக்கால் பங்கும், இந்தியாவில் கால் பங்குமாக இருக்கிறார் பிரம்மாவின் புத்திரன்!



நம் ஊர் போலவே நதி, சோர்ந்துபோய் அழுக்காகக் கிடக்கிறது.

எங்களது திட்டத்தின்படி சாகா(Saga)விலிருந்து பரயாங் (Parayang) - 185 கி.மீ. பின்னர் அங்கிருந்து மானசரோவர் 277 கி.மீ. என்று பயண ஏற்பாடுகள் இருந்தன.

அன்றிரவு சாகாவில், ஒரே அறையில் நான்கு பேர் இருந்த நிலையில் சத்குருவின் சீடரான சுவாமி உல்லாசா அவசரமாக என்னைத் தேடி வந்தார். "ரெடியாக இருங்கள். சத்குருவுடன் நீங்கள் மட்டும் நாளைக் காலையில் மானசரோவர் செல்கிறீர்கள். கைலாஷ் பற்றி என்ன வேண்டுமானாலும் அவரிடம் நீங்கள் அப்போதே கேட்டுக்கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டு 'விருட்'டென்று போய்விட்டார்.

17

வேற்றுகிரக ஜீவன்

"ரெடியாக இருங்கள். நாளைக் காலை சத்குருவுடன் நீங்கள் மட்டும் நேராக மானசரோவர் செல்கிறீர்கள். கைலாஷ் பற்றி அவரிடம் நீங்கள் என்ன வேண்டுமானாலும் கேட்கலாம்" என்று இரவு 11 மணிக்கு சுவாமி உல்லாசா, சாகாவில் சொல்லிவிட்டுப் போனாலும் என்னால் நம்ப முடியவில்லை.

காரணம், இரண்டு மூன்று தினங்களாக சத்குருவுக்கு உடல் நலம் சரியில்லை என்பது எனக்குத் தெரியும். கைலாஷ் யாத்திரை செய்யும் நான்கு குழுக்களிலும் தொடர்ந்து, சத்சங் செய்ததால் அவருக்குக் கடுமையான தொண்டை வலி ஏற்பட்டிருந்தது.

செலைன் ஏற்றும் அளவுக்கு அவரது உடல் பலவீனமடைந் திருந்தது. அவரை கவனித்துக் கொண்ட சீன மருத்துவர்கள், இன்னும் சில நாட்கள் அவர் இங்கேயே இருக்க வேண்டும் என்றும், எந்தக் காரணத்தைக் கொண்டும் மானசரோவர், கைலாஷ் என்று மிக உயரமான பகுதிகளுக்குச் செல்லக் கூடாது என்றும் வற்புறுத்தியிருந்தார்கள்.

இந்த நிலையில் அவரால் எப்படி மானசரோவர் வர முடியும்?

வாய்ப்பே இல்லை என்று தெரிந்தாலும் சுவாமி உல்லாசா சொல்லிவிட்டதால், அதிகாலையில் எழுந்து இரண்டுமுறை சோப் போட்டுக் குளித்தேன். காரணம் இனிமேல் ஒரு வாரத்திற்கு யாருக்கும் குளியல் கிடையாது! குளிக்க முடியாது!

இருள் விலகாத அதிகாலை ஐந்து மணிக்கு ஓட்டல் வாசலுக்கு நான் வந்தபோது, அங்கே இரண்டு டயோட்டா லாண்ட்க்ரூஸர்கள் காத்திருந்தன. முதலாவதில் சத்குருவின் உதவியாளர்களும், புகைப்படக்காரர்களும் தயாராக இருந்தார்கள்.

இரண்டாவது வண்டியில், என்னை முன் இருக்கையில் அமரச் சொன்னார்கள்.

அதுசரி, சத்குரு, பின் சீட்டில் அமர்ந்தால், சற்றுத் திரும்பியபடி அவரிடம் பேச வேண்டியதுதானா? என்று நினைத்தபடியே உட்கார்ந்திருந்தேன்.

ஒரு பக்கம் பாலைவனம், மறுபக்கம் சோலைவனம்

பத்து நிமிடத்தில் புன்னகையுடன் வந்தார் சத்குரு. காரின் ஃப்ரண்ட் டோரைத் திறந்து, டிரைவர் சீட்டில் அமர்ந்து, "போகலாமா?" என்றபடியே வண்டியை ஸ்டார்ட் செய்தார்.

"சத்குரு!" என்றேன் பதறியபடி.

"என்ன நான் வரமாட்டேன்னு நினைச்சீங்களா?" கொஞ்சும் கொச்சைத் தமிழில் பேசினார் சத்குரு.

அவரது கையில் செலைன் ஏற்றியதற்கான அடையாளமாய் பிளாஸ்டர் ஒட்டப்பட்டிருப்பது தெரிந்தது.

"டாக்டர்கள் அப்படித்தான் போக வேண்டாம்னுதான் சொன்னாங்க. ஆனா **குமுதத்துக்காக உங்ககிட்ட பேசணும்னு நான் முடிவு பண்ணிட்டேனே. போகலாமா வேண்டாமான்னு என்னோட உயிர் சக்திகிட்ட கேட்டேன். நல்லாப் போன்னு சொல்லிச்சு. (சிரிக்கிறார்) இதோ வந்துட்டேன். உயிர் சக்தி சொல்றதை நாம் கேட்கணுமில்ல!**" என்றவர், வண்டியை வேகமெடுத்தார்.

அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்ததால் அவர் வேகமாகச் செல்லாதவாறு முன்னால் அவரின் உதவியாளர் களின் வண்டி சற்று மிதமான வேகத்தில் செல்ல அதற்கும் சிரித்த சத்குரு "கொஞ்ச நேரத்துல அவங்களை ஓவர்டேக் பண்ணப் போறேன். பதறி அடிச்சுக்கிட்டு தொடர்வாங்க" என்றவர், "கேளுங்க. கைலாஷ் பத்தி என்ன வேணும்னாலும் கேளுங்க" என்றார் உற்சாகமாக.

ஒருவன் எதற்காக கைலாஷ் செல்ல வேண்டும்? அதனால் என்ன பயன்? சபரிமலை செல்வதற்கும் கைலாஷ் செல்வதற்கும் என்ன வித்தியாசம்? என்றெல்லாம் கடந்த அத்தியாயங்களில் பெட்டிச் செய்திகளில் நான் தந்திருந்த கேள்வி-பதில்கள் எல்லாம் சத்குரு மானசரோவருக்கு கார் ஓட்டிக் கொண்டே பேசியவைதான். நான் கேள்வி கேட்டவுட னேயே ஒரு விநாடி கூட யோசிக்க நேரம் எடுக்காமல் அருவி மாதிரி அவர் பதிலைப் பொழிந்த விதத்தை நினைத்தால் இப்போதும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!

மலைப்பாதை இப்போது வேறுவிதமாக மாறியிருக்கிறது. வலது புறம் மணலும் புழுதியும் நிறைந்த பாலைவனம். மலை கூட மணல் மலைதான். காற்றடித்தால் புழுதி பறந்து மலையே ஆடுவது மாதிரி தோன்றுகிறது. நாசிக்குள் நற நற. ஒவ்வொரு மலையும் ஒவ்வொரு நிறம். ஒவ்வொரு வடிவம். உலகத்தின் தலைசிறந்த ஓவியர்கள் எல்லாம் ஆளுக்கு ஒரு மலையைத் தத்து எடுத்துக் கொண்டு, தங்களுக்குள் போட்டி போட்டுத் தீட்டியது போல அவை காட்சியளிக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் இது பூமி இல்லை, வேறு உலகம் என்ற எண்ணத்தையே எனக்குக் கொடுத்தது.

வலது புறம் இப்படியென்றால் இடது புறம் அதற்கு நேரெதிர். இதுதாண்டா பூமி என்று சொல்வது போல் மாடுகளும் ஆடுகளும் துள்ளித் திரியும் பசுமைப் புல்வெளி. வண்ண மலர்களின் கண்காட்சி. ஒரு திபெத்திய மான் கூட எந்தப் பக்கம் போவது என்று தெரியாமல் லேசாய்க் குழம்பியபடி நின்று கொண்டிருந்தது.

"மானசரோவர் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன் சத்குரு" என்றேன்.

தொண்டை சரியில்லாத அவரை நிறையப் பேசவைத்து துன்புறுத்துகிறோமோ என்ற சங்கடம் என்னுள் எழுந்தது. ஆனால் அவர் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை.

மளமளவென பேச ஆரம்பித்தார். "நான் சக்தி உள்ள நிறைய இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் ரொம்ப பவர் உள்ள, கண்ணுக்குத் தெரியாத சக்திகள் உள்ள ஒரே இடம் இந்த மானசரோவர். உண்மையைச் சொன்னால் இந்த உலகத்தைச் சேராத பலவித ஜீவன்கள் மானசரோவருக்கு வந்து செல்கின்றன. கற்பனைக்கோ, யூகத்திற்கோ அப்பாற்பட்ட இடம் அது. எதற்காக அந்த இடத்தை அவை தேர்ந்தெடுத்தன என்பது எனக்கே தெரியவில்லை. **இந்த பூமியில் உயிரினங்கள் தோன்றிய முதல் இடம் இதுவாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.**

மானசரோவர் தண்ணீரை ஒரு தடவை நான் கையில் எடுத்தபோது அது தடதடவென கொதிக்க ஆரம்பித்தது. அதனுள் வேற்றுக்கிரக ஜீவன் ஏதோ இருந்ததை நான் உணர்ந்தேன். புரியாத புதிர். நான் எதையுமே முழுதாகத் தெரிந்து கொண்டுதான் காரியத்தில் இறங்குவேன். ஆனால் எனக்கே அப்பாற்பட்ட விஷயம் இங்கே நடக்கிறது. இந்த இடத்திற்கு ஏன் அவ்வளவு முக்கியம் என்பது எனக்குப் புரியவில்லை. தொடர்ச்சியாய் நான்கைந்து நாட்கள் நான் இங்கே தங்கியிருந்தால் இங்கிருக்கும் வேற்றுக்கிரக ஜீவராசியை எப்படியாவது கடத்திக் கொண்டு போய்விடுவேன்.



அந்த உயிர்கள் நான் கூப்பிட்டால் என் அருகே வருகிறது. வேடிக்கை பார்க்கிறது. அதை அழைத்துச் செல்ல அதற்கு ஒரு விலை தரவேண்டும். அது நம் உயிராகக் கூட இருக்கலாம்." என்றார் சத்குரு.

"நம்புகிற மாதிரி இல்லையே சத்குரு?" என்றேன் நான்.

பெரிதாகச் சிரித்தார். "நானும் அப்படித்தான். இதெல் லாம் சுத்த முட்டாள்தனம் என்று நினைத்தவன்தான். ஆனால் இப்போது நம்புகிறேன்.அந்த சூழலுக்குத் தள்ளப் பட்டிருக்கிறேன். ஒரு வேற்றுலக ட்ராஃபிக் இந்த வழியாக நடந்துகொண்டேயிருக்கிறது. இடைவிடாமல்."

"மானசரோவர் தண்ணீர் புனிதமானது என்று பக்தர்கள் தங்கள் ஊருக்கும் அந்த நீரைக் கொஞ்சம் கொண்டு செல்கிறார்கள். அப்படிச் செய்யக்கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்களாமே... ஏன்?" என்றேன்.

சத்குரு சொன்ன பதில் என்ன?

18

மானசரோவர் தண்ணீரை வீட்டுக்குக் கொண்டு போகாதீர்கள்!

அந்தப் பாலைவன பீடபூமியில், சற்று உடல்நிலை சரியில்லாத போதும் டயோட்டா லாண்ட்க்ரூஸரை மணிக்கணக்காக ஓட்டிக்கொண்டு வந்த சத்குரு, முன்னால் சென்ற உதவியாளர்களின் கார் சற்று அசந்த நேரத்தில், ஓவர் டேக் செய்து, மணலைக் கிளப்பிப் பறந்தார்.

"நான் மெதுவா ஓட்டணும்னே, அவங்க ஸ்லோவா ஓட்டறாங்க. கோடி ரூபா வண்டிக்கு அதற்கான மரியாதையைக் காட்ட வேண்டாமா? பின்னால பாருங்க, பதறிப் போய் வராங்க." சிரித்தபடியே அந்த அபாயகரமான சரிவுப் பாதையில் வேகம் கூட்டினார்.

கைலாஷ் யாத்திரை முடித்துவிட்டு எதிரில் வந்த இந்தியப் பயணிகள் சத்குரு கார் ஓட்டுவதைப் பார்த்து, ஆச்சரியத்துடன் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் காட்சி களைக் காண முடிந்தது.

அது சத்குரு அடிக்கடி சொல்லும் ஒரு கதையை எனக்கு நினைவூட்டியது.

அந்தக் கதையை இப்போது பார்க்கலாமா?

போப், ஒரு முறை அமெரிக்காவுக்குச் சென்றார். அவர் வி.வி.ஐ.பி. என்பதால், அவர் பயணம் செய்ய, விலையுயர்ந்த, நீண்ட லிமோ காரை வழங்கினார்கள்.

போப்பிற்கு நீண்ட நாளாய் ஓர் ஆசை. ஆமாம். லிமோ காரை ஓட்டவேண்டும் என்றுதான்.

அதனால் டிரைவரைப் பக்கத்து சீட்டில் அமரச் சொல்லிவிட்டு, வண்டியைத் தான் ஓட்டினார் போப். அவருக்கு உற்சாகம் மிகுந்துவிட்டதால், செமை ஸ்பீடில் லிமோ காரை ஓட்டினார்.

அவர் ஓவர் ஸ்பீடில் போவதை டிராஃபிக் இன்ஸ்பெக்டர் பார்த்துவிட்டு, துரத்திப் பிடித்தார்.

கார் கண்ணாடியைக் கீழிறக்கிப் பார்த்தால், டிரைவர் சீட்டில் போப்!

பரயாங் - பக்கா கிராமம்

ஆடிப்போன இன்ஸ்பெக்டர், தன் மேலதிகாரிக்கு ஃபோன் செய்தார்.

"சார், ஓவர் ஸ்பீடில் போன ஒரு வண்டியைப் பிடித்துவிட்டேன். அது ஒரு வி.வி.ஐ.பி.யின் கார். என்ன செய்யட்டும்?"

"யார் அந்த வி.ஐ.பி.? பிரஸிடென்ட்டா?"

"இல்லை சார். அவரை விட பெரிய மனிதராக இருக்க வேண்டும். ஏனென்றால் வண்டியை ஓட்ட டிரைவராக அவர் போப்பையே வைத்திருக்கிறார்" என்று பதறினார் இன்ஸ்பெக்டர்.

இந்தக் கதை நினைவுக்கு வந்ததும் எனக்குச் சிரிப்பு வந்தது.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்றார் சத்குரு.

விஷயத்தைச் சொன்னதும், பெரிதாய் சத்தமெழச் சிரித்தார்.

ஐந்து மணிநேரம் வண்டியை ஓட்டிக்கொண்டே அத்திப் பழம், முறுக்கு போன்றவற்றை எனக்குத் தருகிறார்! (பிரசாதம்!) அவரும் ரசித்து சாப்பிடுகிறார். மெல்ல ஒரு பாடலை முணுமுணுக்கிறார். கொழுத்த எலி ஒன்று சாலையைக் கடக்க முயற்சித்தபோது, வண்டியை நிறுத்தி, அது போகக் காத்திருக்கிறார். "அதுங்களோட இடம் இது. நாமதான் இங்கே வரோம்."

சாகாவிலிருந்து 185 கி.மீ. தூரமுள்ள பரயாங் (Parayang) என்ற பக்கா கிராமத்தில் (பின்னால் வரப்

போகும் குழுவினர் ஓர் இரவு தங்கப்போவது இங்கே தான்) மதிய உணவு சாப்பிட்டுவிட்டு, பத்து நிமிடம் ஓய்வு எடுத்தபின் சத்குரு அதே உற்சாகத்துடன் காரில் டிரைவர் இருக்கையில் அமர்ந்தார். எனக்குத்தான் சோர்வு தாக்கியது. சும்மா உட்கார்ந்து கேள்வி கேட்ட எனக்குக் களைப்பு. வண்டியை ஓட்டி, தொண்டை சரியில்லாத நிலையிலும் மணிக்கணக்காக என்னிடம் பேசிய அவரோ கொஞ்சம் கூட களைப்பு இல்லாமல், செமை ஃப்ரெஷ்ஷாக இருந்தது எப் படி என்று எனக்கு இன்றுவரை புரியவே இல்லை. ஒன்று மட்டும் புரிந்தது. அதுதான் சத்குரு!

இன்னும் ஆறு மணி நேரத்தில் நாங்கள் உலகிலேயே புனிதமான மானசரோவரை அடைந்து விடுவோம். வழக்கம் போல் வண்டி வேகமெடுத்தது.

"சத்குரு, எதற்காக மானசரோவர் தண்ணீரை வீட் டுக்குக் கொண்டு செல்ல வேண்டாம் என்று நீங்கள் எச்சரிக்கிறீர்கள்?" என்றேன்.

அவரது உடல் சிலிர்த்ததை உணர்ந்தேன். "ஆமாம் ஆமாம். யாருக்கும் புரியாத ஒரு செயல் எப்போதும் மானசரோவரில் நடந்து கொண்டேயிருக்கிறது.. ஆன்மிகத் தன்மை என்று அதை நான் சொல்ல மாட்டேன். அதை நாம் பார்க்க வேண்டும். உணர வேண்டும். அதை விட்டுவிட்டு



மானசரோவர்

அங்கிருந்து தண்ணீரை எடுத்துக் கொண்டு போகவேண்டும் என்று நினைத்தால் என்ன பயன்? இப்படியே எல்லோரும் செய்தால், கொஞ்ச நாட்களுக்கு அப்புறம் மானசரோவரைத் தமிழ்நாட்டில் வந்துதான் பார்க்க வேண்டும். (சிரிக்கிறார்)

புரிந்து கொள்ள முடியாத சக்தி நிரம்பிய அந்தத் தண்ணீரை உங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்றால், உங்கள் வீட்டில் குழப்பம் வரலாம். அதைத் தேடிவரும் வேற்றுலக ஜீவராசிகள் உங்களுக்குத் தொந்தரவு தரலாம். உங்கள் குடும்பத்திற்கு நன்மை இல்லாத செயல்கள் நடப்பதற்கு வாய்ப்பு கூட இருக்கிறது. அதனால் மானசரோவர் தண்ணீரை யாரும் எடுத்துச் செல்லாதீர்கள்.

நல்ல சக்தி உள்ள தண்ணீர் உங்களுக்கு வேண்டுமென் றால் கைலாஷில் உள்ள புனிதமான நீரை எடுத்துச் செல் லுங்கள்" என்று சொன்ன சத்குரு, "அதோ பாருங்கள்" என்று தொலைவில் கை காட்டினார்.

வானம் நீல நிறமாகக் காட்சியளித்தது.

"அது ஆகாயம் இல்லை. அதுதான் மானசரோவர்" என்றார். எனக்கு மெய்சிலிர்த்தது!

19

ஜாக்கிரதை, சிவன் குறுக்கே படுத்திருக்கலாம்!

"அதோ பாருங்கள். அது ஆகாயம் இல்லை. அதுதான் மானசரோவர்." என்றார் சத்குரு. எனக்கு மெய்சிலிர்த்தது.

நீலவானம் அந்த இடத்துடன் முடிவடைந்து விடுவது போலவும், அதை ஆவலுடன் கண்ட ஆனந்தத்தில் மானசரோவர் தண்ணீர் அமைதியாகிவிட்டது போலவும் அந்தக் காட்சி எனக்குத் தெரிந்தது. இரண்டுக்கும் பாலமாகக் குட்டிக் குட்டி மலைகள் காணப்பட்டன.





அவற்றில் ஒரு மலையில்தான் பிள்ளையார் அவதரித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஆஹா, விநாயகர் குட்டிக் குழந்தையாய் ஓடியாடி விளையாடிய, நீராடி மகிழ்ந்த இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்ற நினைப்பே உற்சாகத்தைக் கூட்டியது.

சத்குருவுக்கும் மானசரோவர் என்றால் எத்தனை விருப்பம் என்பது அவர் இப்போது டயோட்டா ஓட்டிய வேகத்திலிருந்து புரிந்தது. குளிருடன் கலந்து மணல் காற்று வீசுகிறதே, அந்தக் காற்றைவிட வேகமாகப் பறந்தது வண்டி!

எனக்குத்தான் கவலையாக இருந்தது. நம் ஊர்போல் இல்லாமல் இடது பக்கம் ஸ்டியரிங் உள்ள வண்டி. உடல்நலம் வேறு அவருக்கு அவ்வளவாக சரியில்லை. பாதை வேறு படுபயங்கரமாக இருக்கிறது. எங்கே மேடு, எங்கே பள்ளம் என்று தெரியவே இல்லை. குளிர் வேறு குடைகிறது என்றால் புழுதி வேறு புயலாய்ப் பறந்து கொண்டிருக்கிறது.

"யூனிஃபார்ம் உடலுக்குத் தேவையா? உயிருக்குத் தேவையா? மனதுக்குத் தேவையா?" என்றார்.

நான் புரியாமல் அவரையே பார்த்தேன். மீண்டும் சிரித்தபடி பதில் சொன்னார் சத்குரு.

"ஆன்மிகத்தின் ஒரு தேடுதல் இருக்கும்போது அதற்கு சப்போர்ட்டா இருக்கற மாதிரி எல்லா சூழ்நிலையிலும் அதற்கு ஒத்துப் போகிற மாதிரி ஆடைகளை அணியும் சம்பிரதாயம் நம்மிடம் இருக்கிறது.

ஆனால் ஆன்மிகத்தைப் பரப்புவதற்கு, உலகத்தில் நாம் எப்படி இருந்தால் ரொம்ப எஃபெக்டிவ்வா பரப்ப முடியுமோ அப்படி இருக்கவேண்டும். நான் உலகத்துக்கு எப்படித் தேவையோ அப்படி இருக்கேன்.

நான் இப்போது ஆன்மிகத் தேடுதலில் இல்லை. ஆன்மிகத்தை பரப்புகின்ற செயலில் ஈடுபட்டிருக்கிறேன்." என்று சொல்லிப் புன்னகைத்தார் சத்குரு.

கைலாஷ் பயணத்தில் வந்த நண்பர்கள் திருச்சி நீல்குமார், கடலூர் துரை, டில்லி லதா ஆகியோர் சத்குருவிடம் கேட்கவேண்டும் என்று எண்ணி யிருந்த கேள்விகளை என்னிடம் பகிர்ந்துகொண்டார்கள். அவற்றையெல்லாம் நான், அவரிடம் கேட்க ஆரம்பித்தேன்.

ஓர் அழகி...!

"மானசரோவர் தண்ணீரில் நீந்தலாமா?" என்றேன்.

"வாட்?" என்றார் அதிர்ச்சியாக.

"மானசரோவர் தண்ணீரில் நீந்தலாமா?"

'டக்'கென்று திரும்பிப் பார்த்தார் சத்குரு. "மானசரோவர் ஏரி உங்களை அன்புடன்

அழைக்கிறது. ஆனால் அது நீச்சல்குளம் இல்லை. ஆச்சரியங்கள் நிறைந்த, அற்புதமான, கற்பனைக்கெட்டாத, புதிரான இடம் அது. அதில் போய் நீச்சலடிக்கலாமா? யார் கண்டார்கள்? ஒருவேளை அங்கே தண்ணீருக்குள் சிவன் குறுக்கே படுத்துக்கொண்டிருக்கலாம். அவரை மிதித்துக்கொண்டா செல்வது? ஒரு புனிதமான நினைவுடன் அங்கே செல்லவேண்டும். அப்படி நடந்து கொண்டால்தான் அங்கேயுள்ள அற்புதத்தை உணர முடியும்."

"இரவில் மானசரோவரை வேடிக்கை பார்க்க, அருகில் செல்லலாமா?"

"வேண்டாம். போய்ப் பார்க்காதீர்கள். எதையும் அங்கே பார்க்காவிட்டால் பிரச்னை இல்லை. பார்த்துவிட்டால் பிரச்னை. குறிப்பாக, அளவுக்கு மீறி கற்பனை செய்பவர்கள் அங்கே போனால் ஆபத்துதான். புதுவிஷயம் தெரிந்துகொள்ள ஆர்வத்துடன் வந்தால் போதும், எல்லாம் கிடைக்கும்."

"இரவு நேரத்தில் மானசரோவர் நீரில் மின்னலும் வெளிச்சமுமாக வந்து விழுமாமே. அவை எரிநட்சத்திரங்களா?" என்றேன்.

சத்குரு என்னை மீண்டும் திரும்பிப் பார்த்தார்.

20

மானசரோவர் வந்தாச்சு!

"இரவு நேரத்தில் மானசரோவர் நீரில் தினமும் மின்னலும் வெளிச்சமுமாக வந்து விழுமாமே, அவை எரிநட்சத்திரங்களா?"

டயோட்டாவை வேகமாய் ஓட்டியபடியே சத்குரு என்னைத் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தார். "இல்லை. போக்குவரவு. வேறு உலகத்திலிருந்து நடைபெறும் போக்குவரத்து. அமானுஷ்யமான அவை வந்துபோவதுதான் நமக்கு எரி நட்சத்திரம் போல் தெரிகிறது. மனிதர்களால் நினைத்துப் பார்க்க முடியாத விஷயத்தையும் செய்யும்



நிழல் அல்ல நிஜம்...

ஆற்றல் அவர்களுக்கு அல்லது அவைகளுக்கு உண்டு. இங்கே அவர்கள் வருவதிலிருந்தே அது தெரிகிறது. ஆனால், அவர்கள் கும்பல் கும்பலாகத்தான் வருகிறார்கள். தனியாக வருவதில்லை. அது ஏன் என்பது மட்டும் புரியவில்லை.

கொத்துக் கொத்தாகத்தான் அவர்கள் வரமுடியும் போலிருக்கிறது. அதனால்தான் இத்தனை காலமாக மந்திர வாதிகளோ, யோகிகளோ அவர்களைப் பிடிக்கவில்லை. பிடிக்க முடியவில்லை; உபயோகப்படுத்த முடியவில்லை.

அத்தனை பவர்ஃபுல்லாக இருக்கிறார்கள். பயங்கரமான மர்மம் அவர்களிடம் இருக்கிறது. யார் அவர்கள்? எங்கிருந்து வருகிறார்கள்? பூமியில் எவ்வளவோ இடங்கள் இருக்க இந்த மானசரோவரைத் தேடி மட்டும் அவர்கள் வருவதற்கு காரணம் என்ன? எல்லாம் புரியாத புதிர். நான் ஒரு வாரம் இங்கே தங்கினால் போதும். அவர்களில் ஒருவனைத் தூக்கிக் கொண்டு கோயமுத்தூர் போய்விடுவேன்."

அந்த அதிசயத்தை நினைத்துபடியோ என்னவோ சத்குரு சிலநிமிடங்கள் பேசாமலே இருந்தார். ஓர் அமைதி அங்கே நிலவிற்று.

அவரைத் தொந்தரவு பண்ண விரும்பாமல் வெளியில் வேடிக்கை பார்த்தேன். மணல் காற்று பலமாக வீசிக்கொண்டிருந்தது. அந்தக் காற்றினால் எல்லா மலைகளுமே மணல் போர்வை போர்த்தியிருந்தன. அத்தனை

சாய்ந்துவிடக்கூடாது!

மலைகளும் எழுந்து நின்று தலையை சிலுப்பி மணலை உதறினால்தான் அவற்றின் உண்மை நிறம் தெரியும் போலும் என்று எனக்குத் தோன்றிற்று.

ஒரே ஆறுதல், ஆங்காங்கே காணப்படும் திபெத்தியர்களின் வழி பாட்டுத் தலங்கள்தான். வண்ணமயத்துடன் பார்ப்பவர்களுக்குப் புத்துணர்ச்சி தருகின்றன அந்தக் கொடிக் கோயில்கள். எத்தனை சோர்வாக இருந்தாலும் கலர் கலரான அதை ஒரு நிமிடம் பார்த்தாலே போதும், உற்சாகம் வந்து நம்மை ஒட்டிக் கொள்ளும்.

ஒரு நீண்ட காட்டு மூங்கில் குச்சி, நடுநாயகமாக நிமிர்ந்து நிற்க, அதைச் சுற்றிக் கயிறுகளில் வண்ண வண்ணத் துணி கள் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கின்றன. அவை பிரார்த்தனைத் துண்டுகள். காற்று வீசும்போது அந்தத் துணிகள் மையமாக இருக்கும் மூங்கில் கம்பை நோக்கி ஆடுகின்றன.

அந்த உயரமான மூங்கில் குச்சிதான், பிரார்த்தனைகளை சொர்க்கத்திற்கு எடுத்துச் செல்லும் கருவி என்று நம்பு கிறார்கள் திபெத்தியர்கள்.

அதனால் அந்தக் கம்பம் செங்குத்தாக நிற்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார்கள். அது சாய்ந்து விட்டால் கெட்ட சகுனம் என்று கவலைப்படுகிறார்கள்.

இது போன்ற கொடிக் கோயில்கள் ஆங்காங்கே கண்ணில் படுகின்றன. அதன் அருகில் சிறுசிறு கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிவைத்தும் திபெத் மக்கள்

பிரார்த்தனை செய்கிறார்கள். உலகத்திலேயே எளிமையான வழிபாடு என்றால் அது திபெத்தியர்களுடையதுதான் என்று சத்தியம் அடித்துச் சொல்வேன்.

"தங்க நிற அன்னப் பறவைகள் மானசரோவரில் வரும் என் கிறார்களே?" என்றேன் சத்குருவிடம்.

மெலிதாய்ப் புன்னகைத்தார். "மக்களுக்குத் தங்கம் என்றால் ஒரு கவர்ச்சி. மதிப்பு. உயர்த்திச் சொல்வதில் ஒரு சந்தோஷம். நீல மலை, மரகதப் புல் என்பது போல்தான். அங்கே தூய்மையான தண்ணீர் இருப்பதால் பல பறவைகள் வருகின்றன. நாம் இதுவரை பார்க்காத பல பறவைகளும் இதில் அடக்கம்."

அபாயகரமான சரிவுகளில் ஓர் எச்சரிக்கைக்காக நான் கேள்விகள் கேட்காமல் மௌனமாக இருந்தபோது "நீங்கள் ஏன் நிறுத்துகிறீர்கள்? கேளுங்கள்" என்கிறார்.

உடனே பதில் சொல்கிறார். எதற்கும் விடை வைத்திருக்கிறார். ஏற்றுக்கொள்ளக் கூடிய, மறுக்க முடியாத அற்புதமான பதில்கள்.

இதோ கிட்டத்தட்ட மானசரோவரை நெருங்கிவிட் டோம். நேரம் மாலை 6.30. ஏனென்று தெரியவில்லை. **என்னைச் சோர்வு தாக்கியது. வயிறு என்னவோ செய்தது. சுவாசம்**

கொடிக் கோபுரம்

கொஞ்சம் மக்கர் செய்தது. உடல் பலவீனமானதை உணர்ந்தேன். தலை கிறுகிறுத்தது.

சத்குருவுடன், ரொம்ப நெருங்கிப் பழகும்போது மரணம் என்னும், கடைசித் தருணத்தை உணர்ந்த அனுபவம் கிட்டும் என்று ஈஷா அன்பர் ஒருவர் கூறியது என் நினைவிலாடிற்று. இருந்தாலும் சமாளித்துக் கொண்டிருந்தேன். தூங்க வேண்டும்போல் உடல் படுத்திற்று.

இதோ உலகின் புனிதமான மானசரோவர் ஏரிக்கரை. சின்னச் சின்னதாய் கூடாரங்கள் வரிசைகட்டி எங்களுக்காகக் காத்திருந்தன. மையமாக பெரிய கூடாரம். சத்ஸங் நடக்கவும், சாப்பிடவும் அது.

தொலைவில் மானசரோவர் நீரின் ஓசை, கடலோசைபோல் செவியை நிறைத்தது.

என்னுடன் வந்த குழுவினர் பரயாங்கில் தங்கி, மறுநாள்தான் இங்கே வருவார்கள். ஒருநாள் நான் மட்டும் தன்னந்தனியாக மானசரோவரில் இருக்கப்போகிறேன்.

"சத்குரு, நான் மானசரோவர் சென்று நாளை குளிக்கலாமா?" என்றேன்.

"நோ" என்றார் அவர். "போங்கள். ரசியுங்கள். உங்கள் பத்திரிகைக்காக புகைப்படம் எடுத்துக் கொள்ளுங்கள். தண்ணீரை மட்டும் எந்தக் காரணம் கொண்டும் நான் சொல்லும் வரை தொடாதீர்கள்" என்றார், எச்சரிக்கை விடுப்பதுபோல்.

நான் பலவீனமாக இருந்தேன். வண்டியை விட்டு கீழிறங்கி என் பேக்பேக் (Backbag)கை எப்போது எடுத்துக் கொண்டேன்; குட்டிக் கூடாரத்துக்குள் எப்போது நுழைந்தேன் என்பதுகூட எனக்குத் தெரியவில்லை. 'தொப்'பென்று அதனுள் விழுந்ததுதான் தெரியும். அப்படியே படுத்தேன்.

ஆனால், சத்குரு கொஞ்சமும் சோர்வடையாமல் பெரிய கூடாரத்திற்குள் நுழைந்தார். அவருக்காக, கைலாஷ் யாத்திரை முடிந்து வந்த முந்தையக் குழுவினர் அங்கே காத்திருந்தார்கள்.

"பிரம்மானந்த ஸ்வரூபா
ஈஷா ஜெகதீஷா,
அகிலானந்த ஸ்வரூபா
ஈஷா மகேஷா"

கணீரென்ற காந்தக் குரலில் சத்சங்கை ஆரம்பித்தார் சத்குரு. என்ன ஒரு எனர்ஜி! படுத்திருந்த எனக்குத்தான் கூச்சமாக இருந்தது. ஆனாலும் என் களைப்புதான் என்னை வென்றது.

ராவணன் தவம்புரிந்த, யாரும் செல்ல விரும்பாத ஒரு தடாகத்திற்கு நான் ரகசியமாக சென்று வந்ததையும், பிள்ளையார் மானசரோவரில் அவதரித்த கதையையும் சொல்கிறேன்.

21

பிள்ளையார் பிறந்த ஊர்!

அழகு, அற்புதம், அருமை, அட்டகாசம், ஆரவாரம், ஆனந்தம், உற்சாகம், உன்மத்தம், பிரமிப்பு, பரவசம், சிலிர்ப்பு என்று அத்தனை உணர்வுகளும் ஒன்று சேர்ந்து என்னை உலுக்கி யதுபோல் இருந்தது மானசரோவரைப் பார்க்கும்போது.

300 கி.மீ. பரப்பளவும், 300 அடி ஆழமும், கடல் மட்டத்திலிருந்து 15000 அடி உயரத்திலும் அமைந்த இந்த



மானசரோவரையும் அதில் தவழும் அலைகளையும் பார்த்தால் கடல் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. **உலகத்திலேயே உயரமான இடத்தில் அமைந்த தூய தண்ணீர் ஏரி இதுதான்.** பாலைவனத்தின் நடுவே பரப்பி வைக்கப்பட்டுள்ள நவரத்ன டாலர்! சூரிய ஒளியில் நூறு கோடி பச்சை, நீலவர்ண ஜாலம். வானத்தைவிட தான் பெரியது என்று சொல்வதுபோல், போட்டி போடுவதுபோல் ஒரு காட்சி. அதற்குச் சாட்சி சொல்வதுபோல் சுற்றிலும் மலைகளின் அரண்கள். அதை எந்நேரமும் பார்த்து ரசிப்பதுபோல தூரத்தே கைலாஷ் சிகரம். எந்த உயர் ரக காமிராவினாலும் படம் பிடிக்க முடியாத அற்புதம் இந்தக் காட்சி. நேரில் பார்த்தால்தான் உணரமுடியும்.

சரி, இந்த மானசரோவரின் கதை என்ன? தெரிந்துகொள்வோமா?

வசிஷ்ட மகரிஷியும் மற்றும் சில முனிவர்களும் கயிலையில் கடும்தவம் செய்யச் சென்றார்கள். தாங்கள் நீராடி, இறைவனை வழிபட, தூய்மையான ஒரு நீர்நிலை வேண்டும் என்று படைக்கும் கடவுளான பிரம்மாவிடம் கேட்டார்கள்.

வசிஷ்டரே கேட்டு விட்டதால், பிரம்மா சாதாரணமாய்ப் படைத்துவிடுவாரா? தன்னுடைய படைப்புகளிலேயே சிறந்ததாக அது அமையவேண்டும் என்று நினைத்து பல நாட்கள் யோசித்து, கற்பனை செய்து, தன் மனதில் தோன்றியபடியே தெய்வீக ஏரியை உருவாக்கிக் கொடுத்தார். பிரம்மனின் மனதிலிருந்து தோன்றியதால், அதற்கு 'மானசரோவர்' என்ற பெயர் எழுந்தது.

இந்த மானசரோவரினால் தானும் கவரப்பட்டு, இதன் மையப் பகுதியில் இருந்தே, சிவன் தகதகக்கும் தங்க லிங்கமாக முனிவர்களுக்குக் காட்சி தந்தார்.

கைலாஷை சிவனின் வடிவமாகவும், இந்த மானசரோவரை பார்வதியின் வடிவமாகவும் புராணங்கள் சொல்கின்றன. 'கௌரிசங்கர்' என்று இதனைச் சொல்கிறார்கள். அது



மட்டுமல்ல இந்த மானசரோவரில் ஒருமுறை நீராடினால், நூறு பிறவிகளில் செய்த பாவங்கள் கரைந்து போய்விடும் என்றும் கூறுகின்றன.

இந்த அற்புத ஏரியின் நடுவில் நாகராஜாவின் அரண்மனை இருப்பதாகவும், அதிலுள்ள நாவல் (ஜம்பு) மரத்தின் பழங்கள் மானசரோவர் நீரில் விழுவதாகவும் நம்பப்படுகிறது. அதனால்தான் இந்த ஏரிக்குத் தெற்கேயுள்ள நமது புண்ணிய பூமிக்கு 'ஜம்புத்வீபம்' என்று பெயர் வந்தது.

மானசரோவரின் நான்கு பக்கங்களிலிருந்தும் உருவாகும் நதிகள்தான் நம்மைக் காப்பாற்றுகின்றன. ஆம். இதன் தெற்கிலிருந்து கங்கையின் உபநதியும், மேற்கிலிருந்து சட்லெஜ்ஜும், வடக்கிலிருந்து சிந்துவும், கிழக்கிலிருந்து பிரம்மபுத்ராவும் தோன்றி, நம் தேசத்தை நனைக்கின்றன.

யார் கண்ணிலும் படாமல் இருந்த மானசரோவரைத் தேடிக் கண்டுபிடித்து, உலகத்திற்குச் சொல்லியவர் மாந்தாதா சக்ரவர்த்தி.

யார் இந்த மாந்தாதா?

ராமபிரானின் கொள்ளுத்தாத்தாதான் மாந்தா(த்)தா!

மன்னனாக இருந்தாலும், கைலாஷ் தரிசனமே

வாழ்க்கையின் லட்சியம் என்று முடிவெடுத்து, மானசரோவரின் இடதுபுறம் அமைந்துள்ள மலையிலேயே தங்கிவிட்டவர். அங்கே தங்கக் காரணம், அதன் நேரெதிரில்தான் கைலாஷ் இருக்கிறது!

மானசரோவரில் நீராடி, கைலாஷைப் பார்த்தபடியே கால மெல்லாம் இருந்த மகா பாக்கியசாலி அந்த மாந்தாதா.

மானசரோவர் ஏரிக்கரையில் நின்று பார்த்தால் இடது பக்கம் மாந்தாதா மலை. வலதுபக்கம் கைலாஷ்.

கைலாஷை வணங்கியது போலவே அந்த மாந்தாதா மலையையும் நான் வணங்கினேன்!

காரணம் என்ன தெரியுமா?

நம் செல்லக்கடவுளான பிள்ளையாரும், தமிழ்க் கடவுளான சிங்கார வேலனும் அவதரித்தது இந்த மாந்தாதா மலையில்தான். முருகன் அவதரித்த சரவணப் பொய்கை இதுதான்.

இப்போது விநாயகர் இங்கே அவதரித்த கதையைத் தெரிந்துகொள்வோமா?

மானசரோவரில் நீராடுவது பார்வதிக்கு மிகவும் பிடித்தமானது.



அதுவும் உடம்பு முழுவதும் சந்தனத்தைப் பூசிக்கொண்டு, அது உலர்ந்த பிறகு ஆனந்தமாகக் குளிப்பது என்றால் அத்தனை குஷி.

சிவபெருமான் வழக்கம் போல் தன் பூதகணங்களுடன் வேறு உலகம் சென்றுவிட்ட நேரம் அது. பார்வதி நீராடக் கிளம்பினாள். சந்தனத்தைத் தேய்த்துக் குளிக்கும்போது, அது சற்று கெட்டியாகக் கரைந்து வர, ஏதோ நினைவில் அதைப் பந்து போல் உருட்டினாள்.

அவளுக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லை என்ற ஏக்கம் இருந்ததால், அந்த சந்தனத்தை ஒரு குழந்தை போல் செய்தாள். அழகான குழந்தை. உடனே அதற்கு உயிரும் கொடுத்தாள். "அம்மா" என்றது குழந்தை! சந்தனக் குழந்தை!

பார்வதிக்கு சந்தோஷம் தாங்கவில்லை. குழந்தையை ஆசைஆசையாய் வளர்த்து வந்தாள். அதுவும் வளர்ந்து பெரிதாயிற்று.

ஒரு நாள் நீராடிவிட்டு வந்த பார்வதி உடை மாற்றுவதற்காக உள்ளே சென்றபோது, யாரும் வராமல்





பார்த்துக்கொள்ளுமாறு காவலுக்கு மகனை நிறுத்திவிட்டுச் சென்றாள்.

மகனும் பெருமையாகத் தாயின் சொற்படி வெளியில் காவல் காத்தான். அப்போதுதான் சிவபெருமான் செமை வேகமாக அங்கே வந்தார். உள்ளே போக முனைந்தார். அவர் யார் என்பது தெரியாததால் உள்ளே விட மறுத்தார் பிள்ளையார். சினம் ஏற்பட்டது சிவனுக்கு.

சண்டை. பூத கணங்கள் ஆவேசமானார்கள். முடிவு? பிள்ளையாரின் தலை துண்டாகப் போய் விழுந்தது.

அப்போதுதான் பார்வதி ஓடோடி வந்தாள். தன் மகனின் தலை துண்டிக்கப்பட்டிருப்பது கண்டு பதறினாள். அவன் யார் என்பதைச் சொல்லி அலறினாள்.

"அஞ்சாதே" என்றார் ஈசன். அப்போது அந்தப் பக்கமாக யானை ஒன்று வந்தது. அதன் தலையைக் கொய்து கணபதி தலையில் பொருத்தினார். பிள்ளை உயிர் பெற்று பிள்ளையார் ஆனார்.

22

தமிழ் மன்னன் தவமிருந்த தடாகம்!

ஒரு நாள் முழுக்க நான் மட்டும் மானசரோவரில் தனித் திருந்தேன்.

உலகின் மிக அழகிய அந்த ஏரியைச் சுற்றிச் சுற்றி வந்தேன். புகைப்படங்கள் எடுத்தேன். பிள்ளையாரும், முருகனும் அவதரித்த மாந்தாதா மலையை ப்ரியத்துடன் பார்த்தேன். எட்டிப் பார்க்கும் கைலாஷை பரவசத்துடன் வணங்கினேன். கொஞ்ச நேரம் என் குட்டி டென்ட்டில் பதுங்கினேன். குளிரில் நடுங்கினேன்.





மானசரோவர் பெட்டிக்கடை

மானசரோவரில் தனியாக இருப்பது என்பது ரொம்ப கஷ்டம். பேச்சுத் துணைக்கு மொழி புரியாத ஒரு திபெத்தியன் இருந்தால் கூடத் தேவலை என்றுதான் எனக்குப்பட்டது. அங்கே சின்னதாய் மூன்று அழுக்கான பெட்டிக் கடைகள் மட்டுமே இருக்கின்றன. அதுவும் கொஞ்சம் பெரிய சைஸ் டென்ட் அவ்வளவுதான். சீஸன் முடிந்தவுடன் கடையைச் சுற்றிக் கொண்டு கிளம்பிவிடுவார்கள்.

குளிர் பானங்கள்(!), தேநீர், பிஸ்கட்ஸ், சாக்லெட்ஸ், டீ ஆகியவற்றை அங்கே விற்கிறார்கள். டென்ட் வசதியுடன் வராதவர்கள் அந்தக் கடைக்குள்ளேயே தங்கிக் கொள்ளவும் அனுமதிக்கிறார்கள். கட்டணம் உண்டு. நடுங்கும் குளிரில் ஒரு கோக் அருந்துவது நன்றாகத்தான் இருக்கிறது!

இறுதியில் ஒரு நேபாள டிரைவரை ஓரங்கட்டினேன்.

"மானசரோவரை காரிலேயே சுற்றி வரலாமா? பிரதட்சணம்? 100 யுவான் கொடுத்தால் போதும்" என்றான் அவன்.

எனக்கு வேறு ஒரு திட்டம் இருந்தது. "அது வேண்டாம். ராட்சஸ்தல் போய்வரவேண்டும். வருகிறாயா? நீ கேட்ட காசைத் தருகிறேன்" என்றேன் நான்.



அவன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான். " என்னது ராட்சஸ்தலா? உங்களுக்கு ஏதாவது ஆகிவிட்டதா?" என்றான் அவன். தலையாட்டி மறுத்தான்.

நான் பிடிவாதமாய் இருக்கவே கடைசியில் ஒப்புக் கொண்டான்.

அது என்ன ராட்சஸ்தல்? அங்கே வர அவன் மறுத்தது ஏன்? அங்கே செல்ல நான் ஆசைப்பட்டது ஏன்?

மானசரோவர் போலவே அதுவும் ஓர் ஏரி. ஆனால் மானசரோவர் தேவர்கள், கடவுள்களின் ஏரி என்றால், அது ராட்சசர்கள், அரக்கர்களின் தடாகம். அந்த ஏரிப் பக்கம் அதனாலேயே யாரும் செல்வதில்லை. அந்தத் தண்ணீரைத் தொடுவது கூட இல்லை.

நான் மட்டும் அங்கே செல்லவேண்டும் என்று பிடிவாதம் பிடித்ததற்குக் காரணம் இருக்கிறது. ஒரு தமிழ் மன்னன் தவம் இருந்த இடம் அது.

நான் யாரைச் சொல்கிறேன் தெரிகிறதா? ஆம். மாமன்னன் ராவணன்தான் அவன்!

ராமபிரானின் மனைவியைக் கவர்ந்தான் என்ற ஒரே ஒரு மாபெரும் தவறைச் செய்தானே தவிர, ராவணன் மாபெரும் தமிழ்ப் பண்டிதன். சிறந்த சிவ பக்தன். நீதி நெறியுடன் ஆட்சி புரிந்தவன். சகல கலைகளையும் கற்றவன். மிகச் சிறந்த பாடகன். ஆணழகன்!

அந்தத் தமிழ் மன்னன் ராவணன் தவம் செய்த இடம் என்பதால்தான் நான் ராட்சஸ்தல் ஏரியைப் பார்க்க ஆசைப் பட்டேன்.

நாங்கள் கிளம்பினோம். பத்து கிலோ மீட்டர் தூரம். அதிகம் பேர் போகாத இடம் என்பதால் பாதை கரடுமுரடு. டிரைவர் கொஞ்சம் எரிச்சலுடன்தான் வந்தான் என்பது, அவன் வண்டி ஓட்டும் விதத்திலிருந்தே புரிந்தது.

வானத்திலிருந்து பார்த்தால் இந்த ஏரி ராட்சஷமிருகம் ஒன்று நிமிர்ந்து நிற்பதைப் போல காட்சியளிக்கும் என்று எப்போதோ படித்தது நினைவுக்கு வந்தது.

இதோ ராட்சஸ்தல்லை நெருங்கி விட்டோம். டிரைவர் வண்டியை ரொம்ப முன்னாலேயே நிறுத்திவிட்டு, "நடந்து போங்க" என்றான். "அருகில் போகலாமே?" என்று



ராவணன் ஏரி



கேட்டபோது, "அது அசுரர்களின் ஏரி. அதன் அருகில் சென்றால் கார் ரிப்பேர் ஆகிவிடும். நான் வர மாட்டேன். நீங்கள் மட்டும் போய்ப் பார்த்துவிட்டு சீக்கிரம் வந்து விடுங்கள்" என்றான் எரிச்சலாக.

நான் உற்சாகமாக ராவணன் ஏரியை நோக்கி நடந்தேன். பிரமாண்டமான தடாகம் அது. மானசரோவர் அளவுக்குப் பெரிதில்லை என்றாலும் 125 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டது. நடுவில் சின்னதாய் இரண்டு மூன்று திட்டுகள் உள்ளன. அந்தத் தீவுத் திட்டில்தான் ராவணன் தவம் செய்தான் என்கின்றன புராணங்கள். அதனால் அதற்கு ராவணன் திட்டு என்றே பெயர் வழங்குகிறது. ராட்சஸ்தல்லை ராவணன் ஏரி என்றும் அழைக்கிறார்கள். அந்தத் திட்டுகளில் ஏராளமான பறவைகள் மனிதத் தொந்தரவுகள் இன்றி பறந்து திரிகின்றன.

மானசரோவருக்கும் இந்த ராவணன் ஏரிக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதைக் கண்டுகொண்டேன். அது என்ன

தெரியுமா? மானசரோவரில் அலைகள் எப்போதும் இருந்து கொண்டே இருக்கின்றன. இங்கே அலைகள் எல்லாம் இல்லை. அமைதி! அமானுஷ்யம்! பறவைகளின் ஒலி வேறு பயமுறுத்துகிறது. ஒரே நம்பிக்கை, வடக்கு திசையில் தொலைவில் தெரியும் கைலாஷ்!

இந்த ராவணன் தடாகத்தில் யாரும் நீராடுவதில்லை. ஏன் தண்ணீரைத் தொடுவது கூட இல்லை. காரணம், இது அசுரர்கள் தவம் செய்த இடம். இந்தத் தடாகத்தில் அரக்கர்கள் தங்கள் தலைகளை வெட்டிக் கொண்டு, கை, கால்களை அறுத்துக் கொண்டு என்று தங்கள் உடலை வருத்திக் கடுமையாகத் தவம் இருந்தார்கள் என்பதால் இந்த இடத்தைக் கண்டாலே அனைவருக்கும் அச்சம்! அது மட்டுமல்ல, மிச்சம் இருக்கும் அசுர வம்சத்தினரும் இந்த ஏரியின் அடியில் வசிப்பதாக ஒரு நம்பிக்கையும் திபெத்தியர்களிடம் உண்டு. அதனால் இந்த நீரை யாரும் தொடுவது கூட இல்லை.

இந்தத் தண்ணீரை ஆராய்ச்சி செய்தபோது உப்புடன் அதிக அளவு மெக்னீஸியம் கலந்திருப்பதால் மனிதர்கள் உபயோகப்படுவதற்குத் தகுதியான நிலையில் இந்த நீர் இல்லை என்றே ரிப்போர்ட் அளிக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும் கொஞ்சம் தண்ணீரை எடுத்து நான் தலையில் தெளித்துக் கொண்டேன். காரணம், இது தமிழ் மன்னன் ராவணன் தவம் செய்து சிவனை

ராவணன் தவம் செய்த இடம்

தரிசனம் செய்த இடம். அது மட்டுமல்ல, அலைகள் பரவாத இந்த தடாகத் தன்னீரில் கைலாஷ் மலை முழுவதுமாகப் பிரதிபலிப்பதைக் கண்டு அசந்து போனதும்தான் காரணம். கைலாஷே பிம்பமாக எட்டிப் பார்க்கும் தண்ணீரில் அசுரர்களாவது, விஷமாவது என்ற எண்ணம் என்னுள் மேலோங்கியது. கைலாஷே உள்ளிறங்கியிருப்பதால் அத்தனை தீய அம்சங்களும் காணாமல் போயிருக்காதா? எனவே இதுவும் இப்போது புனிதம்தான் என்று எனக்குள் தோன்றிற்று.

சரி, ராவணன் இங்கே தவம் செய்த கதையைக் கொஞ்சம் பார்க்கலாமா?

23

கிறிஸ்துவப் பெண் குளித்தாரா?

அதிகாலை ஐந்து மணி.

இருள் விலகாத இனிய பொழுது.

நாங்கள் 150 பேர் மானசரோவர் ஏரிக்கரையில், வரிசை வரிசையாக சம்மணமிட்டுப் பரவசத்துடன் அமர்ந்திருந்தோம்.

குளிர் குதறிக் கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் ஐந்து செட் உடை அணிந்திருந்தாலும் நடுக்கம் எட்டிப் பார்த்தது. பற்கள் நடனமாடின. உதடுகள் உருமாறின. போதாததற்கு மானசரோவரும் ஐஸ் காற்றை தாராளமாய் எங்கள் மேல் தெறித்துக் கொண்டிருந்தது.



என் முன் வரிசையில் டெல்லியிலிருந்து வந்திருந்த கிறிஸ்துவப் பெண்மணி அமர்ந்திருந்தார். நம் மத நம்பிக்கை இல்லாவிட்டாலும், என்னதான் இருக்கிறது? என்று வேடிக்கை பார்க்க வந்தவர், "நான் இந்தக் குளிரில் நிச்சயமாக குளிக்கமாட்டேம்பா. எனக்கு எந்த நம்பிக்கையும் கிடையாது" என்று அருகிலிருந்த தோழியிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

இதோ சத்குரு வந்துவிட்டார்.

அவரது சீடர்கள், தாமிரத் தாம்பாளத்தில் மானசரோவர் நீரைச் சேமித்து, அதில் மலர்களை மிதக்கவிட்டிருந்தார்கள். பச்சைக் கற்பூர வாசனையும் தூக்கலாக அடித்தது.

சத்குரு தன் காந்தக்குரலில் ப்ராஸஸை ஆரம்பித்தார். ஒவ்வொருவரையும் தங்கள் இடது கையால் அந்தத் தாம்பாளத் தண்ணீரைத் தொட்டு, தலையில் தெளித்துக் கொள்ளச் சொன்னார். ஸ்லோகங்கள் சொல்ல, திருப்பிச் சொன்னோம். அடுத்ததாய் பிராணாயாமம், தியானம்.

இறுதியில் 'சம்போ சிவ சம்போ' என்று இந்தத் தொடரின் டைட்டிலைப் பலமுறை சொன்னோம்! 'ஓம் நம சிவாய' மந்திரமும் தொடர்ந்தது.





தமிழ் மன்னனின் தவம்!

"அனைவரும் புனித மானசரோவரில் நீராடுங்கள். பெண்கள் இடது புறமாகவும் ஆண்கள் வலது புறமாகவும் செல்லுங்கள். பத்து நிமிடம் போதும். சிவனின் பெயரை மட்டும் உச்சரியுங்கள்." சத்குரு சொல்ல, அனைவரும் கட்டுப்பட்டு, செயல்பட்டோம்.

மைனஸ் டிகிரி தண்ணீரில் லேசாகக் கால் வைத்தபோது ஷாக் அடித்த மாதிரி இருந்தது. அடுத்த அடி எடுத்து வைத்தபோது, நீங்கள் நம்பியே ஆக வேண்டும். தண்ணீருக்கு அடியிலிருந்து யாரோ பாதத்தில் கத்தியால் குத்துவது போல் இருந்தது. அத்தனை வலி. அத்தனை எரிச்சல்.

இந்தத் தண்ணீரில் குளிப்பதாவது தலை முழுகுவதாவது? முடியுமா? என்று யோசிப்பதற்குள், "சம்போ சிவ சம்போ" என்று கூறியபடி உற்சாகமாக, ஆசையாக, பரவசமாக, சந்தோஷமாக, நெகிழ்ச்சியாக, இதற்காகத்தான் பிறந்தது போல அனைவரும் மானசரோவரில் மூழ்கியெழ ஓடிய காட்சி இருக்கிறதே, அதை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

ஐம்பது அடி தூரம் சென்றிருப்போம், ஆழமே இல்லை. **மனமெல்லாம் சிவன் நிறைந்திருக்க குளிராவது, ஐஸ்கட்டியாவது, மைனஸ் டிகிரியாவது? மரத்துப் போவதாவது?**

ஈசனும் உமையும் அருள்பாலிக்கும் கைலாஷ் மலையைப் பார்த்தபடி ஒரு முழுக்குப் போட்டேன். விநாயகனும் முருகனும் அவதரித்த மாந்தாதா மலை நோக்கி அடுத்த

முழுக்கு; மீண்டும் கைலாஷைப் பார்த்தபடி ஒரு முழுக்கு.

'சிவன் குறுக்கே படுத்திருந்தாலும் இருக்கலாம். நீச்சலடிக்காதீர்கள்' என்று சத்குரு கூறியது நினைவில் இருந்ததால், அந்த சிவனின் நாமத்தை மட்டுமே உச்சரித்து, ஆனந்தமாய் நீராடி, ஆரவாரத்தைக் குறைத்துக் கொண்டு கரையேறினேன்.

எங்களுடன் வந்த கிறிஸ்துவப் பெண் தவிர, மற்ற 149 பேரும் மானசரோவரில் நீராடினோம் என்று நினைத்தபடியே நான் கூடாரம் நோக்கி நடந்தபோது, எனக்கு முன்னால், தலையைத் துவட்டிக்கொள்ளாமல், ஈரம் சொட்டச் சொட்ட, ஷூ கூட அணியாமல் ஒரு பரவசத்துடன் நடந்து போய்க்கொண்டிருந்தார் அந்த டெல்லி கிறிஸ்துவப் பெண்!

எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"மத அடிப்படையில் எந்த நிர்ப்பந்தமும் இல்லை. குளிக்கமாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே, ஏன் நீராடினீர்கள்?" என்றேன்.

அவர் புன்னகைத்தபடியே "காரணம் நீங்கள்தான்!" என்றார்.

"என்னது?" என்றேன்.

மீண்டும் புன்னகைத்தார்.

"நீங்கள் என்றால் தென்னிந்தியர்களைச் சொல்கிறேன். வானம் மப்பு போட்டாலே மஃப்ளர் கட்டும் பழக்கமுள்ளவர்கள் சௌத் இண்டியன்ஸ். அவர்களே, அதுவும் 60, 70 வயதுக்காரர்கள், பெண்கள் எல்லாம் உற்சாகமாகத் தண்ணீரில் இறங்கியபோது என் தன்மானம்

ராவணன் ஏரி

மாமன்னன் இலங்கேஸ்வரன் ராட்சஸ்தல் ஏரியின் நடுவில் இருந்த திட்டில் அமர்ந்து வடக்கே தெரியும் கயிலாயத்தைப் பார்த்தபடியே சிவனை நோக்கிக் கடும் தவம் செய்தான்.

அழகு கொஞ்சும் கயிலையையே சதா பார்த்தபடி இருந்ததால் அந்த அற்புத மலையையே கொஞ்சம் பெயர்த்து இலங்கைக்குக் கொண்டு போய்விட வேண்டும் என்று முடிவெடுத்தான்.

வடக்குப் பக்க மலையை மெல்ல அசைத்தான். பெயர்க்க முயன்றான். பார்வதி நடுங்கினாள்.

பார்த்தார் சிவன். தன் வலது கால் கட்டை விரலால் அழுத்தினார். அதனால் ராவணன் மண்ணில் புதைந் தான். இருந்தாலும் அந்த சுத்த வீரன் கலங்கவில்லை. தன் இனிய குரலால் சாம கானத்தில் சிவனைத் துதித்துப் பாடினான். மெய்மறந்தார் இறைவன்.

அவனுக்குக் காட்சி தந்து, ஆத்ம லிங்கம் ஒன்றை அவனுக்குப் பரிசாக அளித்தார். ஆத்ம லிங்கம் என்பது கைலாஷின் மினியேச்சர் போன்றது! கைலாஷின் அத்தனை சிறப்புகளையும் உள்ளடக்கியது.

ராவணன் சந்தோஷமாக இலங்கைக்குக் கிளம் பினான். வழியில் கோகர்ணம் என்ற இடத்தில் காலைக் கடன் கழிக்க நினைத்தபோது, அங்கே நின்றிருந்த சிறுவன் ஒருவனிடம், "தம்பி, இந்த லிங்கத்தைக் கையிலேயே வைத்துக் கொள். கீழே வைத்தால் மீண்டும் திரும்ப எடுக்க முடியாது. ஜாக்கிரதை" என்று சொல்லிவிட்டு நகர, சிறுவன் உடனே ஆத்ம லிங்கத்தைக் கீழே வைத்து விடுகிறான். சிறுவனாக வந்தது யார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். பிள்ளையார்!

ராவணன் கோபத்துடன் பிள்ளையாரின் தலையில் குட்டினான். (கோகர்ணத்தில் உள்ள லிங்கம் இன்றும் மண்ணில் புதைந்தபடியே இருக்கிறது. பிள்ளையார் தலையிலும் பள்ளம் இருப்பதைக் காண முடியும்.)

கடைசியில் ராவணன் வெறும் கையுடன் இலங்கைக்குத் திரும்பிச் சென்றான். இல்லா விட்டால் கைலாஷின் பவர் அவனுக்குக் கிடைத்திருக்கும். ரொம்ப சக்தியுள்ளவனாக மாறியிருப்பான்.

பிள்ளையார் ஏன் அப்படிச் செய்தார்? கைலா ஷின் சக்தி பாரதத்துக்குள்ளேயே பொதிந்திருக்க வேண்டும் என்பதால்தான்.

சிலுப்பிக் கொண்டது. அதனால் நான் மாற்று உடை எடுத்துவராவிட்டால் கூட, டிராக்ஸ், டி ஷர்ட் தவிர எல்லாவற்றையும் கழற்றிப் போட்டுவிட்டு மானசரோவரில் குதித்துவிட்டேன்." குளிரில் நடுங்கியபடியே பெருமையாகச் சிரித்தார்.

இது... இதுதான் மானசரோவர். நீங்கள் எந்த ஊர், எந்த நாடு, எந்த மதம், என்ன ஜாதி எந்த பாரபட்சமும் அதற்குக் கிடையாது. பார்த்தால், அதில் குதித்துவிடுவீர்கள். அமிழ்ந்து விடுவீர்கள், ஆழ்ந்து விடுவீர்கள், தோய்ந்துவிடுவீர்கள்.

அடுத்து, மானசரோவரில் நள்ளிரவில் நடக்கும் அமானுஷ்யம்!

24

கோடி நட்சத்திரம்!

மனசுக்குள் மகிழ்ந்து மகிழ்ந்து பிரம்மா உருவாக்கிய மான சரோவரில் நீராடிவிட்டு, என் குட்டிக் கூடாரத்தில் புகுந்து கொண்டதுதான் தெரியும், ஏழெட்டு மணி நேரங்களுக்கு எழுந்து கொள்ளவே இல்லை.

கோடைகாலத்தில் கூட வெந்நீரில் குளிக்கும் நம்மைப் போன்ற ஆசாமிகளுக்கு அப்படித்தான் இருக்கும். தலைக்குள் மூன்று லிட்டர் தண்ணீர் புகுந்து கொண்ட மாதிரி ஒரு பாரம். கைலாஷ், மானசரோவர் போய்வந்தால் தலைக்கனம்(!) போய்விடும் என்று சொன்னார்கள். இப்படி ஒரு தலைக் கனம் ஏற்படும் என்று யாரும் சொல்லவில்லையே என்று நினைத்துக் கொண்டேன்.

பிரம்ம முகூர்த்தத்தின் ஆதி நேரமான அதிகாலை இரண்டிலிருந்து மூன்றுக்குள் மானசரோவரில் நடக்கும் அதிசய ஆச்சர்யத்தைக் காணவேண்டும் என்று விரும்பியதால் முடிந்தவரை ரெஸ்ட் எடுத்தேன்.

மாலைதான் நானும் நண்பர் சதீஷும் மெல்ல வெளியில் கிளம்பினோம். வெளியில் என்றால் மானசரோவர் ஏரிக்கரைதான். அதை விட்டால் அங்கே வேறு என்ன இருக்கிறது? அதைவிட வேறு என்ன வேண்டும்?

அங்கே சதீஷ் நெகிழ்ச்சியான காரியம் ஒன்றைச் செய்தார். அதைச் சொல்வதற்கு முன் கைலாஷ் செல்பவர்கள் செய்ய வேண்டிய முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். கையில் அல்லது பையில் எப்போதும் டார்ச் லைட் வைத்துக் கொள்ளுங்கள். எக்ஸ்ட்ரா பேட்டரியும் வைத்துக்கொள்ளுதல் உத்தமம்.

திபெத்தில் இரவு ஒன்பது மணி வரை சூரிய வெளிச்சம் இருக்கும்தான் என்றாலும் எப்போது இருள் சூழும், பனி பொழியும் என்று சொல்ல முடியாது. மானசரோவர், கைலாஷில் மின் வசதி வேறு கிடையாது என்பதால் இரவுகளில் வெளியில் நகர டார்ச் அவசியம். காரணம் வெறி கொண்ட திபெத்திய நாய்கள். சிங்கத்துக்கு தப்பிப் பிறந்தது

போல் காட்சி தரும் அவை கண்களில் ஒரு குரூரத்துடன் கும்பல் கும்பலாக அலைந்து கொண்டிருக்கின்றன. பசி கொண்ட மிருகம். நள்ளிரவில் அதன் ஓலம் குளிரையும் மீறி நம் நரம்புகளை நடுங்க வைக்கின்றன.

அதனால் பாத்ரூம் செல்பவர்கள் டார்ச் லைட்டோடு துணைக்கும் ஒருவரை அழைத்துச் செல்ல வேண்டியது கட்டாயம் என்பதை மறந்து விடாதீர்கள்.

பெங்களூரிலிருந்து எங்களுடன் வந்த காமேஷ்க்கு நடந்த ஒரு பயங்கர விஷயத்தை உங்களுக்குச் சொல்கிறேன்.

நண்பருக்கு நள்ளிரவில் வயிறு கடமுடா செய்திருக்கிறது. எல்லோரும் அசந்து தூங்கிக் கொண்டிருந்ததால் யாரையும் எழுப்ப வேண்டாம் என்று டார்ச் லைட்டுடன் மனிதர் கிளம்பி விட்டார். ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாக அவர் இருப்பதால் எதற்கும் அஞ்சவில்லை.

ஒதுக்குப்புறமாய் இடம் தேடியிருக்கிறார். நடுவில் பள்ளத்துடன் கிட்டத்தட்ட நம் ஊர் பாத்ரூம் போலவே ஓர் இடம் கிடைத்திருக்கிறது.

திடீரென்று டார்ச் கொஞ்சம் மங்கியிருக்கிறது. (அந்த ஊர் க்ளைமேட்டில் பேட்டரிகள் பல்லிளிப்பது சகஜம் என்பதால்தான் எக்ஸ்ட்ரா பேட்டரி எடுத்துக் கொள்ளச் சொல்கிறேன்.) சரி, வேலையை முடித்துவிட்டுப் போய்விடலாம் என்று நினைத்தபோதுதான் காதருகில் பெரிதாய் உறுமல் சப்தம் கேட்டிருக்கிறது. குட்டி யானை சைஸுக்கு ஒரு காட்டு நாய், கடும் வெறியுடன் பற்களை நீட்டியபடி நண்பர் மேல் பாய முயல, உயிர் முக்கியமா? மானம் முக்கியமா என்றெல்லாம் யோசிப்பதற்குக்கூட நண்பருக்கு நேரமில்லை. துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று அப்படியே எல்லாவற்றையும் போட்டுவிட்டு டெண்ட்டை நோக்கி ஓடி வந்து விட்டார்.

மறுநாள்தான் விஷயம் புரிந்தது. நண்பர் வசதியான இடம் என்று ஒரு பள்ளத்தில் ஒதுங்கினார் அல்லவா,



அந்த இடம் அந்த நாய், தான் ரெஸ்ட் எடுக்க வசதியாக உருவாக்கி வைத்துள்ள இடம் என்பது. அதன் இடத்தைப் போய் இவர் பிடித்தால்? துரத்தாமல் என்ன செய்யும்?

தெரியாத்தனமாய் காமேஷ் இந்த விஷயத்தை எங்களிடம் சொல்ல நாங்கள் அவரைக் கிண்டல், கேலி என்று காலி செய்துவிட்டோம். (பில்டிங் ஸ்ட்ராங்க், பேஸ்மென்ட்தான் கொஞ்சம் வீக்!)

இப்போது இதை வேடிக்கையாக நான் சொன்னாலும் அந்த நேரத்திய அவருடைய நிலையை நினைத்துப் பாருங்கள். தனியாகச் செல்லும் தைரியம் உங்களுக்கு வருமா என்ன?

நண்பர் அயனாவரம் சதீஷ், மானசரோவரில் நெகிழ்ச்சியாக ஒரு காரியம் செய்தார் என்று சொன்னேன் அல்லவா? அது என்ன தெரியுமா?

மானசரோவர் நீரில் தன் பையிலிருந்து ஏதோ ஒன்றை ரகசியமாக எடுத்து, நனைத்துவிட்டு உள்ளே வைத்துக் கொண்டார். நம் பத்திரிகையாளர் புத்தி சும்மா இருக்குமா என்ன? அது என்ன என்று தெரிந்து கொள்ளாவிட்டால் எப்படி?

சிங்கத்துக்குத் தப்பிப்பிறந்தவைபோல் காட்சி தரும் நாய்கள்!

சதீஷ் அதை எடுத்துக் காட்டினார். அது பகவான் ரமணரின் புகைப்படம்!

விஷயம் இதுதான். ரமண மகரிஷிக்கு ஓர் ஆசை இருந்தது. மானசரோவர் சென்று நீராட வேண்டும் என்பது தான் அது. மனித உருவில் இருக்கும் வரையில் அவரது விருப்பம் நிறைவேறவில்லை. அந்த ஆசையை இப்போதுதான் நிறைவேற்றியது போல் ஒரு சந்தோஷம் என்றார் சதீஷ்.

"இந்தக் காட்சியை பகவான் ரமணரும் நெகிழ்ச்சியாக இங்கே இருந்தபடியே பார்த்துக் கொண்டிருப்பார்" என்றேன்.

இரவு ஒரு மணிக்கே நாங்கள் சுமார் ஐம்பது பேர் தூக்கத்தைத் தூர எறிந்துவிட்டு மானசரோவர் நதிக்கரைக்கு சற்றுத் தள்ளி நின்று கொண்டோம். அங்கே என்னவோ நடக்கப்போகிறது என்பதில் ஆவலாக இருந்தோம்.

'அங்கே நிகழ்வது நமது அறிவுக்கு அப்பாற்பட்டது. வேறு கிரகத்திலிருந்து போக்குவரத்து அந்த நேரத்தில் அங்கே இருக்கிறது. அதனால் விடிகாலை இரண்டு மணி போல அங்கே நீர் அருகில் செல்லாதீர்கள். அது அவர்களுக்குப் பிடிக்காது. அவர்களைத் தொந்தரவு செய்யாதீர்கள். தள்ளி நின்று பாருங்கள். புகைப்படம் எடுத்தல், சப்தம் போட்டுப் பேசுதல் போன்ற செயல்களில் ஈடுபடாதீர்கள். என்ன நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.' என்றெல்லாம் சத்குரு ஏற்கனவே சொல்லியிருந்ததால் ஏகப் பட்ட எதிர்பார்ப்பு எனக்கு இருந்தது.

குளிர் பிடுங்கித் தின்றது. நாய்களின் ஓலங்கள் எதிரொலித்தன.

மணி 1. 30 ஆயிற்று. 2.00 ஆயிற்று. ஒன்றும் நிகழவில்லை. கால் கடுக்க நின்றிருந்தோம். அங்கே எதுவும் நடக்கலாம். நடக்காமல் போகலாம். அவர்கள் நமக்காக கண்காட்சி நடத்தவில்லை என்பதில் உறுதியாக இருந்தேன்.

சரியாய் 2.30 மணிக்கு அந்த அதிசயம் நிகழ்ந்தது. வானத்தில் அண்ணாந்து பார்த்தபோது உலகில் உள்ள அத்தனை நட்சத்திரங்களும் ஒன்று கூடி மானசரோவருக்கு மேலாக வந்தது போல் தோன்றின. ஆமாம். குவியல் குவியலாகக் கோடி நட்சத்திரங்கள்.

மின்னல் போல் ஒளி மானசரோவர் நீரில் பாய்ந்தது. இடி இடித்தது. நாய்களின் கூக்குரல்கள் காணாமல் போயிருந்தன. எரி நட்சத்திரம் போல சில சரேலென ஏரி நீரில் விழுந்தன. வெளிச்சம் அதிகரித்தது.

இது இயற்கை நிகழ்வா? அல்லது வேற்று கிரகத்தினர் வந்து போகிறார்களா? அல்லது சிவன், பார்வதி, பிரம்மா, விஷ்ணு, பிள்ளையார், முருகன், முப்பத்து முக்கோடி தேவர்கள் உலா வந்து மானசரோவர் நீரில் நீராடுகிறார்களா? அல்லது அத்தனையும் பிரமையா? தூக்கக் கலக்கமா? எது சரி போன்ற அறிவுபூர்வமான அல்லது அபத்தமான கேள்விகளை எல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு , அசந்து போய், திக்பிரமையுடன் அந்த தீபாவளிக் கொண்டாட்டத்தைக் கண்ணாரக் கண்டேன். உள்ளுக்குள் உருகினேன். நெஞ்சுக்குள் நெகிழ்ந்தேன். அடுத்து கயிலை நோக்கி!

25

கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை!

இன்னும் ஒரு மணிநேரம்தான், சொகுசான கார் பயணம். அதற்கு அப்புறம் நடை ராஜாதான். கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை!

இதுவரை நேபாளத்திலிருந்து மானசரோவர் வரை வந்த பாலைவனப் பாதையும், கடமுடா சாலையும் இங்கே இல்லை.

இலை போட்டுச் சாப்பிடலாம்போல வழவழ சாலை.

கைலாஷ் பயணத்தில் சீன அரசு பண்ணிய உருப்படியான ஒரே காரியம் இதுதான் என்று நினைத்துக் கொண்டேன்.

அடிவாரத்தில் எங்கள் கார்கள் எல்லாம் களைப்புடன் மூச்சு வாங்க நின்றன. சில தினங்களுக்கு அவற்றிற்கு ஓய்வு. இதற்கு மேல் அந்த ஜடப் பொருட்களுக்கு வர அனுமதி இல்லை!

வரிசை வரிசையாக அந்த லாண்ட்க்ரூஸர்கள் ஓரங்கட்டி நின்ற காட்சி, கைலாஷ் மலையை ஏக்கத்துடன் அவை பார்ப்பதுபோல் எனக்குத் தெரிந்தது.

இப்போது திபெத்திய சுமைதூக்கிகள் நம்மைச் சூழ்ந்து கொள்கிறார்கள். நம் ஊர்க் கணக்கில் கிட்டத்தட்ட 5000 ரூபாய் கூலி. ரொம்ப அதிகம் என்று தோன்றினாலும், நமது புண்ணிய(!) மூட்டைகளைத் தூக்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைப்பதே நல்லது.

காரணம் நம்மால் அந்த மலையில் மூட்டை முடிச்சுகளுடன் நகர்வது ரொம்ப கஷ்டம். அதுதவிர கைலாஷ் யாத்திரை முடித்து நாம் இந்த இடத்திற்கு மீண்டும் வரும் வரை அவர்கள் நம்முடனேயே இருப்பார்கள்.

சிரித்த முகத்துடன், ஒல்லி திபெத்தியர்கள், பத்து வயதிலிருந்து 45 வயது வரை ஆண்களும், பெண்களுமாகக் காத்திருக்கிறார்கள். நாம் நபருக்கு 5000 கொடுத்தாலும், அவர்களுக்கு ஆயிரம்தான் கிடைக்குமாம். **மீதியெல்லாம் கமிஷன், புரோக்கர்கள்!**

ஒல்லி உருவமாக இருந்தாலும் ஓர் இயந்திரம்போல் சுமை தூக்குகிறார்கள். களைப்பு அடைவதே இல்லை. நமக்கு முன்னால் விடுவிடுவென நடந்து, ஓர் இடத்தில் உட்கார்ந்துகொள்வார்கள். நாம் போய் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

அடிவாரத்தில் வாக்கிங் ஸ்டிக்குகள் விலைக்கோ, வாடகைக்கோ கிடைக்கும். ஒன்றுக்கு பதில் இரண்டாக வாங்கிக் கொள்ளுங்கள் நடப்பது சுலபம். (நடக்க முடியாதவர்கள்



மட்டக் குதிரையில் அல்லது காட்டெருமையில் செல்லலாம். அதற்கும் 5000 ரூபாய் ஆகும்.)

இதோ சத்குரு வந்துவிட்டார்.

சின்னதாய் ஜில்லென்று ஓடும் சிற்றாற்றின் தண்ணீரை எடுத்து ஒவ்வொருவர் தலையிலுமாக வைத்து, தடவி, பிரார்த்தித்து ஆனந்தக் கண்ணீருடன் வழியனுப்புகிறார். அவரது ஸ்பரிச உணர்வில், நெகிழ்ந்து சிலிர்க்கிறார்கள் பக்தர்கள்.

11 கி.மீ. நாங்கள் நடக்க ஆரம்பித்தோம். ஒவ்வொரு மலையாக ஏறி இறங்க வேண்டியதுதான். வழிநெடுகக் கண் கொள்ளாக் காட்சி. grand canyon பார்ப்பதுபோல் இருந்தது. எங்கும் பள்ளத்தாக்குகள், மலைகள், **விதவிதமான வண்ணங்கள். விதவிதமான வடிவங்கள். விதவிதமான எண்ணங்கள்!**

அருகில் நெருங்க நெருங்க மலைகள், அரண்மனை போலவும், ஆலயம் போலவும் பிரமாண்டமாக, நேர்த்தியாகக் காட்சி தருகின்றன. எதுவும் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை இல்லை. இயற்கை! காலம் காலமாகக் காற்றும், பனியும் இந்தக் கலைப்படைப்புகளை உருவாக்கி

யிருக்கின்றன. சிவன், தனக்குத் தானே உருவாக்கியதுபோல் தெரிகிறது!

14,300 அடியிலிருந்து 16,000 அடி உயரம் திராபூர் நோக்கி மெல்ல முன்னேற வேண்டும்.

கொஞ்சம் கொஞ்சமாக மூச்சு வாங்க ஆரம்பித்தது. நா வறண்டது. கால் கெஞ்சியது.

நான்கு நான்கு பேராக சேர்ந்து செல்ல, நாங்கள் பணிக்கப்பட்டோம். நான்கு பேருக்கு ஒரு ஆக்ஸிஜன் சிலிண்டர். மூச்சுத் திணறினால் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

அந்த உயரமும், சூழ்நிலையும், சிலிர்ப்பும் சிலரைப் பித்துப் பிடித்ததுபோல் ஆக்கும். சப்தம் போடத் தோன்றும். எதையும் பொருட்படுத்தாமல் மெதுவாக நட. அனுபவித்து நகர் என்று சத்குரு கூறியது நினைவுக்கு வந்தது.

கைலாஷ் யாத்திரை முடித்துவிட்டு எதிரில் வருபவர்கள் தங்கள் மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொண்டார்கள். (உணவு, ஹெல்த் டிரிங்ஸ் போன்றவற்றையும்!)



திராபுக் ஆசிரமத்திலிருந்து கைலாஷ் தரிசனம்



இயற்கை அல்லது இறைவன்!

நான்கு கி.மீ. நடந்ததும் வழவழப்பான, சறுக்கலான மலைமுகடு குறுக்கிடுகிறது. தவறி விழுந்தால் (நிரந்தர) கைலாயம்தான்! கையில் வைத்திருக்கும் வாக்கிங் ஸ்டிக் கூட, நடனம் ஆடுகிறது. நெஞ்சுக்குள் பய ஆர்.ஆர்!

அந்த நேரத்தில் சுமைதூக்கி, நமக்கு உதவுகிறார். ஒரு குழந்தை போல லாகவமாக ஒவ்வொருவரையும் கைப்பிடித்து பத்திரமாக அழைத்துச் சென்றுவிடுகிறார். (5000 ரூபாய் கொடுக்கலாம்யா என்று இப்போது மட்டும் தோன்றியது!)

நடராஜா. மேடு, பள்ளம், பள்ளம், மேடு.

ஆறாவது கி.மீட்டரில் சிறிய சமவெளிப் பகுதியில் இரண்டு டீக்கடைகள் இருக்கின்றன. காப்பி, டீ கிடைக்கிறது. சர்க்கரை கிடையாது. பால் கிடையாது.

காப்பி அல்லது டீ தண்ணீரில் கொஞ்சம் வெண்ணெயும், உப்பும் போட்டுத் தருகிறார்கள்.

முதல் வாய் வைக்க வயிற்றைப் புரட்டினாலும், அந்த குளிருக்கும், உயரத்திற்கும் இதமாகத்தான் இருக்கிறது.

தணல் அடுப்பில், சுட வைக்கிறார் பெண்மணி. நாம் அடுப்பில் கரி போடுவது போல, கூடை நிறைய வைத்துள்ள காப்பிக் கொட்டை மாதிரி ஏதோ ஒன்றை தணலில் வீசுகிறார். 'என்ன அது?' என்று ஆவலாய் அருகில் சென்று பார்த்தேன். காய வைத்த ஆட்டுப் புழுக்கைகள்! உவ்வே!



எங்கள் சுமைதூக்கி

அந்த 11 கி.மீ. தூரத்தை இயற்கையின் பேரெழிலைக் கண்டபடி, எத்தனை மகான்களும், தெய்வங்களும் இந்தப் பாதையில் நடந்து வந்திருப்பார்கள் என்று பரவசமாய் நினைத்தபடியே, ஐந்து மணிநேரம் நடந்து, திராபூர் (dirapur) நெருங்கினோம்.

யோகா எல்லாம் ஒழுங்காகச் செய்யாதபோதும் நல்லவேளை எனக்கு ஆக்ஸிஜன் சிலிண்டர் தேவைப்படவில்லை. ஹையா! என் நுரையீரல் நன்றாக இருக்கிறது!

கை, கால் வலியுடன், இடையில் உள்ள சிற்றாற்றைக் கடந்து திராபூர் ஆசிரமத்தை நெருங்கியபோது, வலதுபுறம் திரும்பிப் பார்த்தால் எதிரில்... தொட்டுவிடும் தூரத்தில் வெள்ளி நிறத்தில், விபூதி போர்த்திய மாதிரி பிரமாண்டமாக, புனிதமாக, அற்புதமாக, அட்டகாசமாக, அருமையாக, அசத்தலாக பிரமிப்பாக என்னைப் பார்த்து கயிலாய மலை (சி)வா, (சி)வா! என்றது.

26

சௌந்தர்ய லஹரி!

கால் வலி, கை வலி எல்லாம் அந்தக் கைலாய மலையைப் பார்க்கும்போது காணாமல் போய்விட்டது.

இதற்குத்தானே ஆசைப்பட்டாய்! பார்! நன்றாகப் பார்! என்னைப் புரிந்துகொள்ள முடிந்த அளவுக்குப் பார் என்று அந்த சிவபெருமானே கருணையுடன் காட்சி தருவதுபோல் எனக்குத் தெரிந்தது.

வெள்ளி நிறத்தில் பனிக்கட்டிகள் கைலாஷ் மீது படர்ந்து, பரவிக் கிடப்பது, ஈசன் உடல் முழுவதும் விபூதி பூசிக்கொண்டிருப்பதுபோல் இருந்தது.





16000 அடி உயரம், பற்களை நடனமாட வைக்கும் குளிர், பெரும்பாலும் வாயால் மூச்சுவிட வேண்டிய அளவுக்கு ஒரு சிரமம், லேசாகத் தலை கனக்கும் உணர்வு, சாப்பிடப் பிடிக்காத நாக்கு, படுக்கச் சொல்லும் அலுப்பு என்று சங்கடமான சூழ்நிலை இருந்தாலும் எதிரில் கைலாஷ் இருப்பதால், எந்தச் சிரமமும் தெரியவில்லை. பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

கைக்கு எட்டும் தூரத்தில் கைலாஷ். அப்போது இரவு மணி 10 என்றாலும், சூரிய வெளிச்சம் முழுமையாக இருந்தது. திபெத்தில் இது தினசரி செயல்தான் என்றாலும், கயிலாயத்தை ரொம்ப நேரம் தரிசிக்கவேண்டும் என்ற ஆசையால், சூரியபகவான் அந்த இடத்திலேயே இருக்கிறார் என்று எனக்குத் தோன்றிற்று!

விடிய விடிய அந்தக் கைலாயத்தைப் பார்க்க எனக்கு ஆசைதான். ஆனால், மறுநாள் அதிகாலை செங்குத்தான மலையில் ஏறி, கைலாஷை ரொம்ப அருகில் பார்க்கப் போகும் சாகசமான பயணம் இருப்பதால், ஓய்வெடுக்கச் சொன்னார்கள்.

அந்த இடத்தின் பெயர் திராபூர் என்பதால் அது ஓர் ஊர் என்று நினைத்துவிடவேண்டாம். அந்த இடத்தில் ஒரே ஒரு ஆஸ்ரமம் இருக்கிறது. 200 பேர் வரை தங்குவதற்கு அறைகள் இருக்கின்றன. அவ்வளவுதான். அதுதவிர வேறு எந்த வீடோ, மனிதர்களோ எதுவும் கிடையாது.

முன்பெல்லாம் இந்த இடத்தில் டென்ட் அடித்துத்தான் தங்குவார்கள். சமீபகாலத்தில்தான் இந்த ஆஸ்ரமம் கட்டப்பட்டிருக்கிறது. அறைக்கு நால்வராகத் தங்கிக் கொண்டோம்.

எங்களுடன் வந்த சாகச சமையல்காரர்களான ஷெர்ப்பாஸ், எங்களுக்காக தக்காளி சூப், ப்ரெட், பட்டர்ஜாம், பூரி, சென்னா, விஜிடபிள் ரைஸ், அப்பளம், காபி, டீ என்று வழக்கம்போல் விதவிதமாகச் சமைத்து பஃபே பரப்பினார்கள்.

ஒளிரும் கைலாஷ் மலையைப் பார்த்தபடியே சாப்பிட எத்தனை கொடுத்து வைத்திருக்கவேண்டும் என்று தோன்றிற்று!

எவரெஸ்ட் சிகரம் ஏறுபவர்களின் சுமைகளையும் தூக்கிக்கொண்டு, அவர்களுக்கு முன்னால் சிகரம் தொடும் அசகாய உழைப்பாளிகளான ஷெர்ப்பாஸ் சமையல் கலைஞர்கள், இத்தனை நாள் பயணத்தில் களைப்படையவே இல்லை என்பது கவனத்திற்கு வந்தது.

அன்றைய தினம், படுக்கப்போன பிறகு, வெளியில் ஏதோ பாடல் சப்தம் கேட்டது.

ஆச்சரியத்துடன் எட்டிப் பார்த்தால், வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு அத்தனை ஷெர்ப்பாஸும், ஆசிரம வாசலில் கைலாஷைப் பார்த்தபடி நின்றுகொண்டு நடனமாடியபடியே உற்சாகமாகப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

நாங்கள் அனைவரும் சந்தோஷமாக வெளியில் வந்து, அவர்களைச் சூழ்ந்துகொண்டோம்.

அர்த்தம் தெரியாத நேபாள நாட்டுப்புறப்பாடல் தான்

பயணக் குழுவினர்

என்றாலும், அதன் இனிமையும், ஒன்றிணைந்த அவர்களின் குரலும், அதில் இருந்த சந்தோஷமும், கூட்டு முயற்சியும், உற்சாகமும், கொள்ளை கொள்ள வைத்தது.

நாங்கள் கைதட்டிக் கொண்டே இருந்தோம். அந்த ஏழை வெகுளி மனிதர்களும் அதைப் பெருமையாக அங்கீகரித்தார்கள்.

எங்களை கைலாஷ் மட்டும் கம்பீரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது.

பணம், புகழ், இளமை எல்லாவற்றையும்விட உற்சாகமும், ஒத்துழைப்பும், கூட்டு முயற்சியும்தான் வாழ்க்கைக்கு முக்கியம் என்ற மாபெரும் தத்துவத்தை கைலாஷ் மலை போதிப்பதுபோல் நான் உணர்ந்தேன்.

ஷெர்ப்பாக்களின் ஆட்டம் நள்ளிரவு வரையும் கொண்டாட்டமாகத் தொடர்ந்தது. கடைசியில் அவர்களின் நேபாள மொழியிலேயே சிவனைப் பற்றிய ஒரு பாடலையும் பாடினார்கள். பக்திப் பாடலுக்கு அர்த்தம் புரியவேண்டுமா என்ன?

உணர்வு அலை, உள்ளத்தை உரசியது. கைலாயத்தில் ஜகத்குரு ஆதிசங்கரர் பாடிய பாடல் என் நினைவுக்கு வந்தது.

அந்த அற்புத விஷயத்தை உங்களுக்குச் சொல்லவா?

ஆதிசங்கரர் பாரதத்தின் முக்கியமான சிவாலயங்களை எல்லாம் தரிசனம் செய்துகொண்டே கயிலையை அடைந்தார்.

அங்கே அவருக்கு பார்வதியும், பரமேஸ்வரனும் காட்சி தந்தார்கள்.

சிவபெருமான், அவரிடம் ஐந்து ஸ்படிக லிங்கங்களையும், ஓர் ஓலைச்சுவடிக் கட்டினையும் கொடுத்தார்.

அந்த பஞ்ச (ஐந்து) லிங்கங்களையும் ஆதிசங்கரர் இறைசக்திமிக்க ஐந்து ஊர்களில் ஸ்தாபித்தார்.

அவை எங்கெங்கே இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?

1. **யோகலிங்கம்.** காஞ்சி சங்கர மடத்தில் உள்ள சந்திர மௌலீஸ்வரர்.
2. **முக்திலிங்கம்** - கேதார்நாத்
3. **வரலிங்கம்** - நேபாள் நீலகண்ட க்ஷேத்திரம்.
4. **போகலிங்கம்** - சிருங்கேரி
5. **மோட்சலிங்கம்** - சிதம்பரம்

அந்த ஓலைச் சுவடி?

பார்வதிதேவியைப் பற்றி, வர்ணித்து சிவ பெருமான் பாடிய 100 பாடல்கள் அந்த ஓலைச்சுவடியில் இருந்தன!

அதைத்தான் ஆதிசங்கரரிடம் கொடுத்தார் சிவன். இருவரும் ஒருவர் தானே!

பஞ்ச லிங்கங்களையும் பாடல் சுவடிகளையும் எடுத்துக் கொண்டு கைலாஷிலிருந்து புறப்பட்டார் ஆதிசங்கரர்.

வாசலில் இருந்த நந்தி சும்மா இருக்குமா? வெறும் கையுடன் வந்த சங்கரர், ஏதோ எடுத்துக்கொண்டு செல்கிறாரே என்று பிடுங்கிப் பார்த்தது.

ஆமாம். ஓலைச்சுவடியைப் பிடித்து இழுத்து, தின்ன ஆரம்பித்துவிட்டது நந்தி.



சுவடிக்கட்டின் பின் பகுதியை நந்தி பகவான் சாப்பிட்டுவிட்டார்!

சரியாகச் சொன்னால் 100 பாடல்களில் 59 பாடல்கள் அவுட்!

சங்கரர் கையில் முதல் 41 பாடல்கள் மட்டுமே இருந்தன.

பதறிப்போனார் ஆதிசங்கரர்!

அப்போது பார்வதிதேவி அங்கே வந்தாள். எல்லாம் அந்தப் பராசக்தியின் லீலைதானே!

நந்தியிடம் பறிகொடுத்த 59 பாடல்களையும் பூர்த்தி செய்யுமாறு சங்கரரிடம் அன்புக் கட்டளையிட்டாள் தேவி.

ஆதிசங்கரர் கடல்மடை திறந்ததுபோல் தேவியின் தலைமுதல் பாதம் வரை வர்ணித்துப் பாடி முடித்தார்.

இறைவன் எழுதிய 41 பாடல்களுக்கு ஆனந்த லஹரி என்று பெயர்.

ஜகத்குரு ஆதிசங்கரர் பூர்த்தி செய்த 59 ஸ்லோகங்கள்தான் சௌந்தர்ய லஹரி!

27

அந்த இரண்டு பேர்?

நாங்கள் 150 பேர் கைலாஷ் சென்று, அத்தனை பேரும் மிக பத்திரமாகத் திரும்பி வந்தோம் என்றாலும் இரண்டே இரண்டு பேரால் மட்டும் கைலாஷின் மிக அருகில், தொட்டுவிடும் தூரத்தில் நாங்கள் சென்றதுபோல் செல்ல முடியவில்லை.

நூற்றில் ஒருவருக்கு, அல்லது நூற்று ஐம்பதில் இருவருக்கு இதைப் போன்ற நிலை வரலாம். மனநிலையைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதால் தான் அதைப் பற்றி இப்போது சொல்கிறேன்.



கோவையிலிருந்து வந்திருந்த சுசீலா ஓய்வு பெற்ற அரசு ஊழியை. வயது அறுபது இருக்கும். சிறிய உருவம். அனைவரிடமும் மிக அன்புடன் இருந்தார். தனியாக வந்திருந்தார்.

அவரால் மானசரோவர் வரைதான் வர முடிந்தது. மானசரோவர் ஏரிக்கரையில் நின்றபடி, அங்கிருந்து தெரியும் கைலாஷைக் கண்ணாரக் கண்டார். உருகி, உருகி வழிபட்டார்.



தியாகராசன்

சுசீலா

அதற்குமேல் பயணம் செல்ல அவரது உடல்நிலை ஒப்புக்கொள்ளவில்லை. எங்களுடன் வந்த சிறந்த மருத்துவர்களின் குழு, அவரை நன்கு பரிசோதித்து, மேலும் பயணிக்க வேண்டாம் என்றது.

அந்த அம்மையார், மானசரோவர் கூடாரத்திலேயே தங்கியிருக்கவேண்டும் என்றும், நாங்கள் கைலாஷ் சென்றுவிட்டு வரும்போது, எங்களுடன் சேர்ந்து கொள்ளலாம் என்றும் கூறப்பட்டது.

கொஞ்சம்கூட முகம் சுளிக்காமல் ஒப்புக்கொண்டார் அவர். "நான் இங்கிருந்தே கைலாஷைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் சந்தோஷமாகச் சென்று வாருங்கள். அருகில் சென்று நீங்கள் கயிலாய தரிசனம் செய்யும்போது என்னையும் நினைத்துக் கொள்ளுங்கள் ப்ளீஸ்!" என்றார் மெல்லிய புன்னகையுடன்.

நாங்கள் உருகிப்போனோம். சத்குருகூடத்தான். அவர், உடல் நலிவுற்றிருந்த அந்த அம்மையாரை நெருங்கி வந்து, மெல்ல அன்புடன் அணைத்துக்கொண்டார்.

அம்மையாரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. "சத்குரு மூலம், நான் கைலாஷை ரொம்ப அருகில் இங்கேயே தரிசித்துவிட்டேன்" என்று பரவசத்துடன் கூறினார்.

அடுத்தவர் சென்னையைச் சேர்ந்த பெரியவர் தியாகராஜன். 70 வயதுக்குமேல் இருக்கும். உயரமான உருவம். இருமல், தும்மல், ஜலதோஷம், ஜுரம் என்று சென்னையிலிருந்து வரும்போதே எவ்வளவு முடியுமோ

அத்தனையையும் அள்ளிக்கொண்டு வந்தார்! (விமானத்தில் அவர் என் பக்கத்து சீட் என்பதால் எங்கே எனக்கும் வாரி வழங்கிவிடுவாரோ என்ற பயம் இருந்துகொண்டே யிருந்தது!)

அவரையும் டாக்டர் குழு பரிசோதித்து, "மானசரோவ ரிலேயே இருந்துவிடுங்கள்" என்று சொன்னபோது பெரிய குரலில் மறுத்தார்.

"என்னால் முடியும். நீங்கள் எல்லாம் போகும்போது என்னால் மட்டும் முடியாதா? வருவேன்'' என்று குழந்தைபோல் அடம்பிடித்தார்.

உடல்நலம்தான் குறைவே தவிர மனவளம் அதிகம் என்று புரிந்தது.

கடைசியில் பிடிவாதத்துடன் அவர், குதிரை மீது பவனி வந்து இதோ இப்போது நாங்கள் இருக்கும் திராபுக் ஆசிரமம் வரை வந்தேவிட்டார்.

ஆசிரமத்தில் அவருக்கு உடல்நிலை ஒப்புக்கொள்ள வில்லை. டாக்டர் குழு அவர் அருகிலேயே இருந்தனர்.

அபாயகரமான, செங்குத்தான சாலையில் நாங்கள் கைலாயத்தின் அருகில் செல்லப் போகிறோம் என்பது தெரிந்தவுடன், அந்த உடல் நிலையிலும் தானும் வரப்போகிறேன் என்று பிடிவாதமாக இருந்தார்.

"வேண்டாம். ஏதாவது ஆகிவிட்டால்?" என்றேன். "ஒன்றும் ஆகாது. அப்படியே ஆனாலும் சிவனின் காலடியில் ஆனால் சொர்க்கம்தான்" கறாராக இருந்தார் அவர்.

''உங்களுக்கு மோட்சம். ஆனால் கூட இருக்கும் 149 பேருக்கும் நரகமாகிவிடக்கூடாது அல்லவா?'' என்றேன். அப்புறம்தான் கொஞ்சம் யோசித்து, "சரி, நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் செல்வதைப் பார்த்துக் கொண்டேயிருப்பேன்" என்றது அந்த வயதான குழந்தை!

இத்தனை ஆசைப்பட்டு வந்தும் சிலருக்கு மட்டும் இப்படி நடப்பது ஏன்?

சத்குருவிடமே அந்தக் கேள்வியைக் கேட்டேன். அவரது பதில் இதுதான்.

"ஒண்ணு புரிஞ்சிக்கணும். உடம்புக்கு எல்லை உண்டு. அந்த எல்லைகளை நீங்க துறந்துட்டா, எதுவுமே எல்லை கிடையாது.

ஒருத்தருக்குக் கைலாஷ் மலைமேல் ஏற முடியல. ஒருத்த ராள மானசரோவர் வரைக்கும்தான் வரமுடியுது. ஏன்? அது அவங்கவங்க உடல்நிலையைப் பொறுத்தது.

எல்லாரும் இன்னொரு விஷயத்தையும் புரிஞ்சுக்கணும். எல்லோருக்குமே ஏதோ ஒண்ணு சரியா நடக்காம போயிட்டுதான் இருக்கு.

இந்த 150 பேரில், அவங்க ரெண்டு பேர் மட்டும் கைலாஷ் போய்ட்டு, மத்த 148 பேர் போக முடியலேன்னா சரியா இருந்திருக்குமா?

அப்படித்தான் நடந்திருக்கும், நாம அத்தனை பேரும் கைலாஷ் வராம, மௌண்ட் எவரெஸ்ட் போயிருந்தா!"

யாராவது ரெண்டு பேர் தவிர அத்தனை பேரும், மூச்சுவிட முடியாம பைக்குள்ள அடைபட்டிருப்போம். அதுதான் உடல்களின் எல்லை. அதைவிட்டு வெளியில் வரணும்.

altitude (உயரம்)ங்கறது ஒரு விஷயம். Attitude (மனோபாவம்)ங்கறது வேறு ஒரு விஷயம். Attitudeஐ நாம் ஒழுங்காகக் கையாண்டால் altitude ஒரு பிரச்னையே இல்லை.

எல்லாரும் சுய கருத்துகளைக் குவிச்சு வச்சிருக்காங்க. அதை ஓரம்கட்ட விரும்பறதே இல்ல. இவ்வளவு தூரம் வந்துட்டு கைலாஷ்கிட்ட போகமுடியாட்டா பரவாயில்லை. இவ்வளவு தூரம் வந்ததே பெரிசு. ஒரு அடி எடுத்து வச்சதே பெரிய விஷயம். சிவனோட முகத்தை நோக்கி, ஒரு அடி எடுத்து வைத்திருக்கிறார்கள். அதுவே போதும்.

உடல் என்பது நாம் யார் என்பதன் வெளிப்புற அடையாளம். உள்ளே இருக்கும் சில விவரங்களின் தொகுப்புதான் அது.





உங்களைச் சுற்றி நடக்கும் எல்லாமே, சூரியன், சந்திரன், நட்சத்திரம் ஏன் கைலாஷ், உங்களைச் சுற்றியிருக்கும் மக்கள் எல்லாமே உங்களுக்குள் நிகழ்பவை. உங்களுக்குள் நடக்கும் அவற்றை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்தாலே எல்லாவற்றையும் நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம்!" என்றார் கம்பீரமாக.

கடந்த 30 வருடமாக, தினம் தினம் கைலாஷிற்கு நடந்து சென்று தரிசிக்கும் ஒருவரைப் பற்றி அவரது புகைப்படத்துடன் அடுத்த அத்தியாயத்தில் சொல்கிறேன். அவருக்கு, நான்கு கால்கள்!

28

தலையால் நடந்த தமிழன்னை!

முப்பது வருடங்களாக, சீஸன் நேரத்தில் தினந்தோறும், ஒரு வாய்கூடச் சாப்பிடாமல் நான்கு கால்களால் கைலாஷுக்கு நடந்து சென்று ஒருவர் தரிசனம் செய்கிறார் என்று மரியாதையுடன் சொன்னேனே, அது யார் தெரியுமா?

ஒரு நாய்!

சின்ன உருவம்தான். மஞ்சளும் கருப்பும் கலந்த நிறம். மற்ற திபெத்திய நாய்கள் போல பாதி சிங்கமுகம்தான் என்றாலும் கொஞ்சம் கூட கொடூரமில்லாத சாந்த முகம்.



அந்த நாயைப் பற்றி நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன். சில வருடங்களுக்கு முன்பு சுவாமி கமலாத்மானந்தர், கைலாயம் சென்று வந்தபோது அந்த நாயைக் கண்டதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.



குட்டியாய், துறுதுறுவென இருந்தது அது. நாங்கள் அடிவாரத்தில் ஆளுக்கொரு ஊன்றுகோல் வாங்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்த போது அதுவும் வந்து எங்களுடன் ஒட்டிக் கொண்டது. சின்னச் சின்ன பாதங்களால் குடுகுடுவென்று எங்களுக்கு முன்னால் ஓட ஆரம்பித்தது. நாங்கள் நடந்த ஒற்றையடிப் பாதையில் செல்லாமல் அதற்கு மேலேயிருந்த சரிவான மலைப்பகுதியின் விளிம்பில், எங்கே விழுந்து விடுமோ என்று பயப்படும்படியாக ஓடியது அது.

சரி, ஏதோ ஒரு நாய், கொஞ்சம் தூரம் ஓடிவிட்டு, காணாமல் போய்விடும் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் நடந்தது வேறு. அது பத்து கிலோமீட்டர் ஓடிவந்து நாங்கள் தங்கிய திராபுக் ஆசிரமம் வரை வந்துவிட்டது. அது மட்டுமல்ல, மறுநாள் நாங்கள் செங்குத்தான மலைமீது ஏறி, கைலாஷின் பக்கத்தில் சென்றபோது எங்களுக்கு முன்னதாகச் சென்ற அது அங்கே என்ன செய்தது தெரியுமா? அதை அப்புறம் சொல்கிறேன்.

அதற்கு முன்னால் திருவாளர் நாயைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்ல வேண்டியிருக்கிறது. அதன் பெயர் டிஷ்பு. (குஷ்பு அல்ல) நாங்கள் ஓரங்கட்டி சாப்பிடும்போதெல்லாம்

அதற்கும் கொஞ்சம் கொடுத்துப் பார்த்தோம். அது முகர்ந்துகூடபார்க்கவில்லை. விரதமோ? ஓர் இடத்தில் கூட ஓய்வும் எடுக்கவில்லை. வைராக்கியமோ?

ஓர் ஆரோக்கியமான நாயின் ஆயுட் காலமே 15 வருடங்கள்தானே?

இது எப்படி 30 வருடங்களாக வரும் என்று எங்கள் சமையல்காரரிடம் கேட்டேன். அவர் காவிப் பற்களுடன் சிரித்தார். "அது எனக்கும் தெரியும். ஒரு நாய்தான் இப்படி கைலாஷுக்குத் தினமும் வருகிறது. ஒரு வயதாகி, தளர்ந்தவுடன், அல்லது இறந்தவுடன் அதனுடைய குட்டி பயணம் வர ஆரம்பிக்கிறது. இப்படி பல வருடங்களாக, தலைமுறை, தலைமுறையாக இந்த டிஷ்பு குடும்பத்தின் தலைச்சன் நாய் இங்கே வருகிறது. தினமும் வருகிறது. நாங்கள் கவனித்தது 30 வருடங்களாகத்தான். அதற்கு முன்னால் கூட இது தொடர்ந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

நான் அந்த நாயையே வியப்புடன் பார்த்தேன். புகைப் படம் எடுத்தேன். அது கொஞ்சம்கூட கண்டுகொள்ளாமல் போய்க் கொண்டேயிருந்தது. நாமெல்லாம் கைலாஷ் செல்ல லட்சக் கணக்கில் செலவு செய்ய வேண்டியிருந்தது.



ஒரு பைசாகூட செலவில்லாமல் தினமும் கைலாஷ் வரும் டிஷ்பு!

ஒரு பைசா செல வில்லாமல் தினந் தோறும் தரிசனம் செய்யும் அந்த நாயாரை நினைத்தால் எனக்குக் கொஞ்சம் பொறாமை யாகக் கூட இருந்தது.

"யாரும் டிஷ்புவை எந்தத் தொந்தரவும் செய்ய மாட்டார்கள். இது கூட வரும்போது

பயணம் செய்தால் நமக்கு எந்தப் பிரச்னையும் இல்லாமல், நிம்மதியாக கைலாஷ் தரிசனம் செய்துவிட்டுத் திரும் பலாம் என்ற நம்பிக்கை உண்டு. கைலாஷ் வரை செல்ல முடியாதவர்கள் அடிவாரத்திலேயே இந்த நாயின் கழுத்தில் மாலையைப் போட்டு அனுப்புகிறார்கள். தங்கள் சார்பாக இது கயிலை செல்வதாகவும், இந்த நாயைப் பார்த்தாலே தங்களுக்கு மறுபிறவி இல்லை என்றும் நம்புகிறார்கள்" என்றார் குக்.

எனக்கு காரைக்கால் அம்மையாரின் கதை நினைவுக்கு வந்தது. மறுபிறவி வேண்டாம் என்று அந்த சிவனிடமே நேருக்கு நேராகக் கேட்டவர் அல்லவா நம் அந்தத் தமிழ் அன்னை?

காரைக்கால் அம்மையாருக்கு கைலாஷில் நடந்த கதையை இப்போது பார்க்கலாமா?

அந்த மாம்பழ விஷயம் உங்களுக்குத் தெரியும்தானே?

சிறந்த சிவ பக்தையான புனிதவதிக்கு தக்க பருவத்தில் திருமணம் நடந்தது. வணிகனான அவளது கணவர், ஒரு நாள் இரண்டு மாங்கனிகளை, மதிய உணவின்போது சாப்பிடுவதற்காக வீட்டுக்குக் கொடுத்தனுப்பினான்.

அந்த நேரத்தில் சிவனடியார் ஒருவர் வீட்டுக்கு வரவே, அவருக்கு உணவுடன் ஒரு மாங்கனியும் கொடுத்து உபசரித்தாள் புனிதவதி.

கணவன் வந்தான். உணவு உண்டான். மாங்கனியையும் தின்றான். "இன்னொன்றையும் கொண்டு வா. நன்றாக இருக்கிறது" என்றான்.

புனிதவதி பதறிப் போனாள். ஆசையுடன் கணவன் கேட்கும்போது அதை தானம் தந்துவிட்டேனென்று சொல்வது நன்றாகவா இருக்கும்? உடனே பூஜையறைக்கு ஓடினாள். இறைவனை வேண்டினாள்.

அடுத்த நிமிடம் அவள் கையில் ஒரு மாங்கனி வந்து விழுந்தது. கடவுள் கனி!



அதை உண்ட கணவன் அதன் தெய்வீகச் சுவையில் மெய்மறந்தான். அப்படி ஒன்றை அவன் வாழ்நாளிலேயே உண்டதில்லை. ''இது நான் தந்தது இல்லையே?'' என்றான். புனிதவதி உண்மை சொன்னாள்.

அவனால் நம்ப முடியவில்லை. 'என்ன, சிவன் கொடுத்தாரா? என்னடி கதைவிடுறியா? அப்படியானால் இறைவனிடம் இன்னொரு பழம் கேள்".

அவள் கேட்டாள். சிவன் தந்தான்.

அவ்வளவுதான், அதிர்ந்துபோய் மனைவியின் கால்களில் விழுந்தான் கணவன். 'கடவுளுடன் பேசும் வல்லமை கொண்ட உனக்கு தகுதியானவன் நான் இல்லை. நீ தெய்வப் பெண்.'' அவன் அச்சத்துடன் ஓடோடிப் போனான்.

புனிதவதி மீண்டும் இறைவனை வேண்டினாள். 'பெண்ணாக இருந்ததால்தானே கல்யாணம், கணவன் என்றெல்லாம் வந்தது. புருஷனே என்னைவிட்டுப் போன பிறகு எனக்கு எதற்குப் பெண் உருவம்? வேண்டாம். நான் பேயாக மாற அருள் புரிவாயாக' என்று வேண்டினாள். பேயாக மாறினாள் திலகவதி.

ஒவ்வோர் ஆலயமாகச் சென்று இறைவனை வழிபட்டாள். கடைசியில் கயிலாயம் வந்தாள். அதுவும் எப்படி வந்தாள் தெரியுமா? கயிலையே சிவனின் வடிவமாக இருப்பதால், மலையில் தன் கால் படக்கூடாது என்பதற்காகத் தலையாலேயே நகர்ந்து வந்தாள்!

அதனைப் பார்த்தாள் பார்வதி தேவி. "யார் அந்த பக்தை?" என்றாள்.

அதற்கு சிவன் என்ன பதில் சொன்னார் தெரியுமா? "அவள் என் அம்மா" என்றார். ஆதியும் அந்தமும் இல்லாத சிவன், அம்மா என்று அழைத்தது ஒரு தமிழச்சியை!

அருகில் வந்த புனிதவதியை "அம்மையே வருக" என்று வரவேற்றார் சிவன். "அப்பா" என்று ஓடி உருகி இறைவன் பாதத்தில் விழுந்து வணங்கினாள் புனிதவதி என்னும் காரைக்கால் அம்மையார்.

"அம்மையே, உமக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார் சிவன்.

"அய்யா, மீண்டும் நான் பிறவாமை வேண்டும். அப்படிப் பிறந்தாலும் உம்மை மறவாமை வேண்டும்" என்றார் அம்மையார்.

"உன் விருப்பப்படியே ஆகட்டும்!" என்றார் இறைவன்.

காரைக்கால் அம்மையார் கயிலாயத்தின் வடக்கு முக தரிசனத்தில்தான் இறைவனை தரிசனம் செய்தார். இறைவனுடன் பேசினார். இறைவனுடன் கலந்தார். அத்தனை பெருமைமிக்க, புண்ணியம்மிக்க அந்த வடக்கு முக தரிசனத்தை நாம் காணப்போகிறோம்.

29

கழுதைக்குத் தெரியுமா, கைலாஷ் வாசனை?

கைலாய தரிசனங்களிலேயே சிறப்பானதாகக் கருதப்படும் வடக்கு முக தரிசனத்தை மிக அருகில் இருந்து காண நாங்கள் 149 பேர், சுவாமி உல்லாசா தலைமையில் புறப்பட்டோம்.

பார்க்க பக்கம் போல் இருந்தாலும் செங்குத்தான மலை ஆரம்பத்திலேயே கொஞ்சம் போக்குக் காட்டியது.

கூர்மையான சரளைக் கற்களுடன் பாதை படுத்தியது! நுழைவாயில் அருகில் ஆள் இல்லாமல் ஒரு பழைய



கட்டடம் இருந்தது. பௌத்த துறவிகளின் மடமாக இருக்குமோ என்று கொஞ்சம் ஆவலுடன் எட்டிப் பார்த்த நான் நொந்து போனேன். அங்கே குவியல் குவியலாய் காலி மது பாட்டில்கள்! விதவிதமான வெளிநாட்டுச் சரக்குகளின் காலி புட்டிகள் ஆயிரக்கணக்கில் கிடந்தன.

எங்கள் திபெத்திய கைடு, அவரது பாஷையில் சொன்னது புரியாவிட்டாலும், கடைசியில் தலையில் அடித்துக் கொண்டது விஷயத்தைத் தெளிவாக உணர்த்தியது.

ஆமாம். எல்லாம் சப்பை மூக்கு சைனாக்காரர்களின் வேலை. நம் ஊட்டி, கொடைக்கானல் போல சீனர்களுக்கு கைலாஷ் ஒரு குளிர்ச்சியான மலைப் பிரதேசம். அவ்வளவுதான். கழுதை அறியுமா கைலாஷ் வாசனை?

அதுவும் திபெத், சீனாவின் கட்டுப்பாட்டில் இருப்பதால் சீனர்கள் கும்பல் கும்பலாக பிக்னிக் ஸ்பாட் போல வந்து, தங்கமயமாக ஜொலிக்கும் கைலாஷை குழந்தை வெறிக்கும் குடை ராட்டினம் போல் வேடிக்கை பார்த்து குஷாலாகக் கொண்டாடி, குடித்துக் கும்மாளமிட்டுவிட்டுப் போகிறார்கள். அவை அத்தனையையும் வடக்குநாதன், கயிலைநாதன் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்!

இப்படி அருமை புரியாத சீனாக்காரர்களின் ஆக்கிரமிப்பில் திபெத் இருப்பதற்குப் பதிலாக இந்தியாவின் கீழ் இந்த இனிய தேசம் வர அருள்புரியுமாறு அந்த ஈசனை வேண்டுவதைத் தவிர என்னால் வேறு என்ன செய்ய முடியும்?

பத்து நிமிடம் மலை ஏறுவதற்குள்ளேயே எனக்கு மூச்சு வாங்கியது. செய்த தவறுகளும், செய்யாத உடற் பயிற்சிகளும் நினைவுக்கு வந்தன!

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் செங்குத்தாக மலையேற வேண்டும். ஒரே ஆறுதல் அல்லது சந்தோஷம் என்ன தெரியுமா? நாம் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் கைலாஷை தரிசிக்க முடியும். கிட்டே நெருங்க நெருங்க அது பெரிதாவது போல் காண முடியும். நாம் ஓர் அடி எடுத்து வைக்கும்போது, நம் மேல் இருக்கும் அன்பால் அந்த மலையும் ஓர் அடி நம்மை நோக்கி முன்னால் நகர்ந்து வருவது போல் உணரமுடியும்.

21,778 அடி உயரம், குலை நடுக்கும் குளிர், மூச்சுத் திணறல் என்று எல்லாருக்கும் எல்லாம் பொதுவாக இருந்தாலும் இந்த இடத்தில் **ஓர் அதிசயத்தைப் பார்த்தேன். வயதானவர்கள், பெண்கள் எல்லாம் இந்த செங்குத்து மலையில் விரைவாக ஏறிக்கொண்டிருந்தார்கள். இளைஞர்கள் எல்லாம் மெதுவாகத்தான் ஏற முடிந்தது.** என்ன காரணம் என்று யோசித்துப் பார்த்தேன். ஏழை, பணக்காரன், பலசாலி, பலவீனன், இளைஞன், முதியவர் என்று எந்தப் பருப்பும் அங்கே வேகாது. அனைவருக்கும் மூச்சுக் குழல் ஒரே மாதிரிதான் என்று சத்குரு சொன்னது நினைவுக்கு வந்தது.

'காலி' புட்டிகள்

எனக்குத் தோன்றிய காரணம் என்ன தெரியுமா? பெரியவர்களுக்கும் பெண்களுக்கும் கைலாஷ் கைக்கெட்டும் தூரத்தில் இருப்பதால் அதை முதலில் தரிசனம் செய்து விடவேண்டும், பனி மூடுவதற்குள் சீக்கிரம் வணங்கிவிட வேண்டும் என்று ஏற்பட்ட ஆர்வம், பரவசம், உற்சாகம்தான் காரணமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன்.

நடராஜனைக் காண நட ராஜா!

பாதையில் ஏற்பட்ட ஒரு கசமுசாவைச் சொல்லியாக வேண்டும். என்னுடன் வந்த ஒருவர், தனியாக சுமைதூக்கி வைத்துக் கொள்ளவில்லை. அவரே கொஞ்சம் சிரமத்துடன் தன் பையைத் தூக்கி வந்துவிட்டார். ஆனால் இந்த வடக்கு தரிசனத்தில் அதெல்லாம் நடக்காது. செங்குத்தான பாதை என்பதால் கையில் எதையும் தூக்கிக் கொண்டு வர வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். அதனால் நண்பர், அவரது வாட்டர் பாட்டிலை மட்டும் என் பையில் வைத்துவிட்டார். நானும் நல்ல பிள்ளையாகப் பையை, சுமை தூக்கி ரிமோஜ்ஜிடம் கொடுத்துவிட்டேன்.

பாதி தூரம் வந்ததும் நண்பருக்குத் தாகம். ஜாடையில் தண்ணீர் கேட்டார். நான் நம் ஆளிடம் வாட்டர் பாட்டிலை வாங்கி நண்பரிடம் கொடுத்ததுதான் தாமதம், ரிமோஜ் செமை டென்ஷனாகிவிட்டார். வாட்டர் பாட்டிலைப் பிடுங்கி, 'டங்'கென்று தரையில் வைத்தார். என்னுடைய பையையும் கழற்றிப் போட்டுவிட்டு மனிதர் கோபத்துடன் ஜிங்ஜிங்கென்று கீழே இறங்க ஆரம்பித்துவிட்டார்.

விஷயம் என்ன தெரியுமா? அவர்கள் ஒருவருடைய சுமையை மட்டும்தான் தூக்குவார்கள். மற்றவரின் பொருள் ஏதாவது ஒன்றை வைத்தாலும் நாம் ஏமாற்றுவதாக நினைத்துக் கொள்வார்கள். அப்படியே போட்டுவிட்டுப் போயே போய்விடுவார்கள்.

அப்புறம் நான்கைந்து பேர் அவரைச் சமாதானப்படுத்தி, 100 யுவான் (ஒரு பாட்டில் தண்ணீர் சுமக்க 750 ரூபாய் சாமீய்!) தருவதாக தாஜா செய்து அழைத்து வந்தார்கள்.

கைலாஷ் செல்பவர்கள் சுமைதூக்கி செலவை ஷேர் செய்துகொள்ள நினைத்தால் கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சம்பவத்தைச் சொல்கிறேன்.



நடக்க, நடக்க கைலாஷ் கம்பீரமாகக் காட்சியளித்தது. ஈஷா டிரிப்பைப் பொறுத்த வரை கயிலாயத்தின் வடக்கு முக தரிசனத்தோடு எங்கள் யாத்திரை முடிவுக்கு வருகிறது. **பரிக்கிரமா என்னும் மலையைச் சுற்றி வரும் பயணத்தை சத்குரு ஆதரிப்பதில்லை.** அது ஏன் என்று சத்குருவிடம் நான் கேட்டபோது அவர் சொன்ன பதிலை அப்புறம் உங்களுக்குச் சொல்கிறேன்.

இப்போது நான் தரிசனம் செய்யப் போய்க் கொண்டிருக்கும் வடக்கு முகத்தைத்தான் திபெத்திலிருந்து பெயர்த்துக் கொண்டு தன் நாட்டுக்குக் கொண்டு செல்ல முயற்சித்தான் ஒரு தமிழ் மன்னன்.

ஆமாம். ராவணன்தான்! அத்தனை சிறப்பு! அத்தனை அழகு!

அவன் மட்டும் அன்று இதைப் பெயர்த்துக்கொண்டு இலங்கையில் வைத்திருந்தால், இலங்கை அமைதிப் பூங்காவாக இருந்திருக்குமோ? என்னவோ?

ம். ஈசன் நினைப்பதை யார் அறிவார்? தன் கால் பெருவிரலை இறைவன் அழுத்த, ராவணன் அடியில் மாட்டிக் கொண்டு கதறினான். பின் நாரதரின் யோசனைப் படி தன் ஒரு தலையையே கிள்ளி, அதை யாழாகப் பயன்படுத்தி சாமகானம் பாடினான் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

அத்தனை சிறப்பு மிகுந்தது இந்த தரிசனம். அது மட்டுமல்ல, இங்கே சென்று வணங்கினால் செல்வம் சேரும் என்பது நம்பிக்கை. ஏனென்றால் வடக்கு, குபேரனின் திசை!

இந்த இடத்தில் குபேரனுக்கு நடந்தது 'வயிறு குலுங்க வைக்கும்' ஒரு சம்பவம்!

30

உங்களுக்கு சிவன் சொல்லும் 3 வெற்றி ரகசியம்!

‘தேரழு உலகிலும் நம்பர் ஒன் பணக்காரனும் இந்த பூவுலகில் நம்பர் ஒன் செல்வந்தரான திருப்பதி பெருமாளுக்கே கடன் கொடுத்தவனுமான குபேரன், தங்கநகரமான தன்னுடைய அழகாபுரியிலிருந்து கிளம்பி, இறைவனைக் காண கைலாஷ் வந்தான்.

இதோ நாங்கள் 149 பேர் நடந்து கொண்டிருக்கும் இதே திராபுக் பாதையில் அவனும் கம்பீரமாக நடந்து வந்தான்!

வடக்கு திசையின் அதிபதியான குபேரன், இந்த வடக்குப் பாதையில் வராமல் வேறு எந்த திசையிலாவது சென்றால் அவன் கௌரவம் என்னாவது?

தனது செல்வத்தின் காரணமாக இயல்பிலேயே செருக்குடன் காணப்பட்ட அவன், சிவனைச் சந்தித்து ஒரு ‘ஹலோ’ சொன்னான்.

‘வாடா வா’ என்று நினைத்துக்கொண்டார் இறைவன்.

“சிவபெருமானே, நீங்கள் சகல வசதிகளும் நிறைந்த என்னுடைய அழகாபுரிக்கு வருகை தரவேண்டும். இதுவரை **நீங்கள் சாப்பிட்டேயிராத**



ஐம்பத்தோரு சுவை விருந்தை உங்களுக்குப் படைக்க விரும்புகிறேன். வாருங்கள்” என்றான்.

அதாவது கைலாஷில் வசதிகளே இல்லையாம். அடப்பாவி குபேரா, இந்தக் கல்லும் முள்ளும் தானேடா அவருக்குப் பஞ்சு மெத்தை! அதைக்காணத்தானே லட்சக்கணக்கானோர் செலவு செய்து வருகிறோம். அப்புறம், இதுவரை சிவனே சாப்பிடாத உணவு வகையாம்! தினமும் உலகம் முழுக்கப் பாலாபிஷேகமும், பஞ்சாமிர்த அபிஷேகமும், தேனாபிஷேகமும், தயிராபிஷேகமும் காண்பவர் பார்க்காத உணவா? மவனே நீ காலி!

சிவன் சிரித்தார். பார்வதி முறைத்தாள்!

“குபேரா, சாப்பாட்டு விஷயத்தில் எனக்குப் பெரிதாக ஆர்வமில்லை என்பது உனக்குத் தெரியாதா? என் ஒட்டிய வயிறைப் பார்த்தாலே அது உனக்குப் புரியாதா? ஆனாலும், நீ விரும்பி அழைப்பதால் சாப்பாட்டுப் பிரியனான என் மகன் கணேசனை அனுப்புகிறேன். அவனும் ரொம்ப சந்தோஷப்படுவான்” என்று கூறினார் சிவபெருமான்.

குட்டிப் பிள்ளையார் குஷியாக கிளம்பினார். குபேரனின் பக்கத்தில் அமர்ந்தபடி, அவனது புஷ்பக விமானத்திலேயே வேடிக்கை பார்த்தபடி அழகாபுரிக்குச் சென்றார்.

அரண்மனையில் விருந்து தடபுடலாகத் தயாராகிக்கொண்டி ருந்தது. அத்தனை உலகங்களிலிருந்தும் ஏராளமான வி.ஐ.பிகளையும் அந்த விருந்துக்கு பந்தாவாக அழைத்திருந்தான் குபேரன்.

குழந்தையாயிற்றே, சமையல் வாசனை மூக்கை... ஸாரி தும்பிக்கையைத் துளைத்தது! தன் பருத்த வயிற்றைத் தடவியபடி 'பசிக்குது' என்று சிணுங்க ஆரம்பித்தார் கணபதி.

'சரி, குட்டிப்பையன் முதலில் சாப்பிடட்டும்' என்று விருந்து மண்டபத்துக்கு அழைத்துச் சென்றான் குபேரன்.

அங்கே குவியல் குவியலாய் நூற்றுக்கணக்கான வகை உணவுகள். ஓர் ஊரே உட்கார்ந்து சமைத்துக் கொண்டிருந்தது.

சுடச்சுடப் பரிமாறினார்கள்.

தொந்தி கணபதி சாப்பிட ஆரம்பித்தார்ர்ர்ர்ர்ர்ர்ர்.

சாப்பிட்டுக்கொண்டே இருந்தார்.

பசி மேலும் அதிகரிக்கவே, அத்தனை உணவையும், ஆயிரம் பேருக்குச் சமைத்து வைத்திருந்த எல்லா உணவையும், **தட்டுத்தட்டாகச் சாப்பிட்டார். கடைசியில் தட்டையும் சாப்பிட்டார்!** சாப்பாட்டுக்குத் தட்டுப்பாடு!

குழந்தை மேலும் பசிப்பதாக அழ ஆரம்பித்தது. குபேரன் மிரண்டான்.

மீண்டும் சமையல் ஆரம்பித்தது.

அடுப்பில் வெந்து கொண்டிருந்ததை, வேகாமலே சாப்பிட்டு முடித்தார் பிள்ளையார்.

பசி... பசி...!

அரண்மனை பண்டகசாலைக்குள் நுழைந்தது யானைக் குட்டி! சேமித்து வைக்கப்பட்டிருந்த எல்லா பண்டமும், பணால்!

மேலும் பசி.

அரண்மனையில் இருந்த அலங்கார நாற்காலிகள், டேபிள்கள், அழகு சாதனங்கள் என்று கண்ணில்பட்டதை யெல்லாம் சாப்பிட ஆரம்பித்து, குபேரன் சேமித்து வைத்திருந்த பொன், பொருட்களையெல்லாம் விழுங்க ஆரம்பித்தார்.



கதறினான் குபேரன்.

பசி மயக்கத்தில் அதெல்லாம் கணபதிக்குக் காதில் விழுந்தால் தானே? கடைசியில் அரண்மனையிலேயே (தும்பிக்)கை வைத்து, அந்த அழகான கட்டடத்தையே கபளீகரம் பண்ண ஆரம்பித்தார்.

பசி... பசி...!

வேறு வழியில்லாமல் குபேரன் ஹை ஸ்பீடில் கைலாயத்துக்கு விரைந்தான். இறைவனிடம் கெஞ்சினான். "ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள்" என்று பதறினான்.

சிவன் சிரித்தார். வறுத்த அரிசியைக் கைப்பிடி அளவு அள்ளி, குபேரனிடம் தந்தார்.

''இதைப் பிள்ளையாரிடம் கொடு. அவன் பசி நீங்கிவிடும்."

'என்னை வச்சு, காமெடி கீமெடி பண்ணலியே?' என்பது மாதிரி பார்த்த குபேரன், 'இந்தக் கைப்பிடி அளவு அரிசி போதுமா?' என்றான்.

"போதும். இதைக் கொடு. ஆனால் அன்பாகக் கொடு. பணிவாகக் கொடு. அகந்தையில்லாமல் கொடு. பசி போய்விடும்" என்றார்.

குபேரன் ஓடினான். அழகாபுரியைக் காணவில்லை. ஆமாம். அதற்குள் **உலகின் மிக அழகான நகரமான அழகாபுரியையே நம் அண்ணன், தின்று தீர்த்திருந்தார்.**

காலில் விழுந்தான் குபேரன். கைப்பிடி வறுத்த அரிசியைத் தந்தான். தும்பிக்கை நீண்டது. அதையும் தின்று முடித்து பெரிதாய் ஏப்பம் விட்டது!

பசி போயே போயிந்தி!

திபெத்தியர்கள் புனிதமாகக் கருதும் சிவஸ்தல்

பரிக்கிரமாவில் 'திராபுக்' பகுதியைத் தாண்டி வரும் பகுதி சிவஸ்தல். சிவன், மயானத்தில் குடிகொள்பவர் என்று படித்திருக்கிறோமே, அந்த மயானம்தான் இது. ஆனால் இங்கே இறந்த உடல்களை தகனம் செய்வதோ, புகைப்பதோ கிடையாது. இந்த இடத்தில் திபெத்தியர்கள் மட்டும் தங்கள் ஆடை, தொப்பி, செருப்பு, ஷூ என்று தாங்கள் உபயோகப்படுத்திய பொருட்களுள் ஏதாவதை விட்டுவிட்டுச் செல்வார்கள். மேலும் தங்களின் தலைமுடியையும் கொஞ்சம் வெட்டி, இங்கே போடுகிறார்கள். சிலர், கத்தியால் தங்கள் உடலைக் கீறி, சில ரத்தத் துளிகளையும் இங்கே சிந்துகிறார்கள்.

இதெல்லாம் எதற்காக?

இப்படிச் செய்தால் தாங்கள் நீண்ட நாள் வாழ்வோம் என்பதும், மறுபிறவி இல்லை என்பதும் திபெத்தியர்களின் எண்ணம். சிவன் நடனமாடும் மயானம் இது என்பதால் தங்களுக்கும் இந்த இடத்திற்கும் ஓர் ஆன்மிகத் தொடர்பு ஏற்படும் என்றும் மரணமடைந்தபிறகு, இறைவன், தங்களைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வார் என்றும் திபெத்தியர்கள் நம்புகிறார்கள்.

"மீண்டும் விருந்து வைக்கிறதா இருந்தா சொல்லியனுப்பு" என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினார் பிள்ளையார்.

காமெடிக் கதைபோல் இது தோன்றலாம். ஆனால் கைலாஷ் செல்லும் ஒவ்வொருவருக்கும், அல்லது இதைப் படிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் நம்பர்1 மனிதராகும் ரகசியத்தைச் சிவன் சொல்லியிருக்கிறார் என்பதை கவனத்தில் வைத்திருங்கள்.

இதுதான் அந்த ரகசியம்.

அன்பாக இரு!

பணிவாக இரு!

அகந்தையில்லாமல் இரு!

31

சிவன் சுவாசக் காற்றே...

வடக்கு முகப் பாதை, போகப் போக ஆச்சர்யமும், திகிலும் தரத்தக்கதாக இருந்தது. பெரிய பாறை ஒன்று இடையில் இருந்தது. அதற்கு 'ராவணன் தடி' என்று பெயர். மன்னன் ராவணன், தன் கைத்தடியை ஊன்றிய இடம் இதுதான்.

மேலும் நடந்தோம். சரளைக் கற்கள் நிறைந்த சரிவுப் பாதை மறைந்து, காற்றின் வேகம் கட்டுப்பட்டு, குறுகிய பாதை துவங்கிற்று.





இரண்டு பக்கமும் துவார பாலக மலைகள் அரண் கட்டி நிற்க, எதிரில் கதாநாயகன்போல் கைலாயம். பனி மூடிய பர்வதம்.

குறுகலான பாதையின் மையமாக நதி ஒன்று ஓடிவந்து கொண்டிருந்தது. 'சலசல சத்தம்', 'சிவசிவ'வென கேட்டது. கைலாஷ் மலையிலிருந்து மட்டும் உருகி வரும் பனியின் நீரோட்டம் அது.

மேலே நடக்க நடக்க, நீரின் சத்தம் காணாமல் போனது. ஆமாம். நதி, மேற்புறம் முழுக்கப் பனிக்கட்டியாக உறைந்து போயிருந்தது. அதன் மேல் காலை வைத்தால் அவ்வளவு தான். ஜல ச... வேண்டாம். இந்தப் புனிதமான இடத்தில் அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பிரயோகிப்பதே பாவம்.

கும்பலாக நடந்து வந்த நாங்கள், மரியாதையாக ஒருவர் பின் ஒருவராக வரிசையாக, மலை முகட்டின் இடது ஓரமாக நடக்க ஆரம்பித்தோம். கையிலிருந்த குச்சியால், அழுந்தத் தட்டியபடியே, பாதுகாப்பாக மெல்ல நடந்தோம்.

பனி நதி இப்போது பரந்து, முழு இடமும் தனக்கே என்பதுபோல உரிமை கொண்டாடியது. ஓர் ஓரம் தவிர மீதியெல்லாம் நதி, ஸ்வீகரித்துக்கொண்டது. பனிச்சறுக்கு நடத்தலாம் போன்று இருந்தது. அபாயகரமான சறுக்கு.

அந்த இடம், ஆனந்தமான அமைதியைத் தந்தாலும், கைலாய மலையிலிருந்து ஓர் மெல்லிய ஓசை வருவதுபோல்

உணர்ந்தேன். சிவனின் சுவாசக்காற்றாக அது எனக்குத் தோன்றிற்று!

இதோ கைலாஷை நாங்கள் கிட்டத்தட்ட நெருங்கி விட்டோம். ஓர் அதீத ஆர்வத்தால் நானும் நண்பர் சுப்ரமணியும் அனைவரையும் முந்திக்கொண்டு, முன்னால் சென்றோம். தொட்டுவிடும் ஆசை!

பயங்கரமான வழுக்குப் பாதைதான் என்றாலும், 'அச்சப் படாமல் வா' என்று கம்பீரமாய்ச் சொல்வதுபோல் அருகில் கைலாஷ் இருக்கும்போது யாருக்கு வரும் கவலை?

எங்கள் திபெத்திய வழிகாட்டிக்கு மட்டும் கவலை வந்துவிட்டது. **'மேலே போகாதே' என்று சைகை செய்து கைதட்டினார்.** கத்தினார். விரைந்து வந்தார். (நாம்தான் தடுமாறித் தடுமாறி நடக்கிறோமே தவிர அவர்கள் பிறந்த மண் என்பதால் கண்ணை மூடிக் கொண்டு நடக்கிறார்கள்!)

அந்த இடத்தைப் பார்க்கச் சொன்னார். சிவப்புக் கொடி ஒன்று பறந்து கொண்டிருந்தது. திபெத்திய மொழியில் ஏதோ எழுதப்பட்டிருந்தது.

ஆமாம். அதற்கு மேல் பயணிக்க, வெளிநாட்டவர்களுக்கு அனுமதியில்லை! திபெத்தியர் மட்டுமே போகலாம்!

அபாயகரமான சரிவும் கண்ணை ஏமாற்றும் புதைகுழியும் அந்தப் பகுதியில் இருப்பதால் அப்படி ஓர் எச்சரிக்கை. **அந்த இடத்தைத் தாண்டினால் உயிருக்கு உத்தரவாதம் கிடையாது.**

ஆனாலும் நானும், நண்பரும் இன்னும் கொஞ்சதூரம் நடந்து கைடின் எரிச்சலை சம்பாதித்தோம். அந்த இடம் அப்படித்தான். எத்தனை அபாயம் இருந்தாலும், கைலாஷின் முழு தரிசனம் கிடைப்பதால் தானாக ஒரு தைரியம் வந்துவிடும்.

இப்போது நினைத்துப் பார்த்தால், எப்படி அப்படித் துணிச்சலாக நடந்தோம் என்று அடிவயிற்றில் ஒரு பயம் கவ்வினாலும், அந்த நேரத்தில் ஒரு துணிச்சலை, அல்லது அசட்டுத்துணிச்சலைத் தந்தது யாராக இருக்கும்? அவரைத் தவிர!

சுவாமி உல்லாசா அந்த இடத்தில் மேடாக இருந்த ஓர் இடத்தில் அனைவரையும் அமரச் சொன்னார். நேபாளத்தில் சத்குரு எங்களுக்கெல்லாம் 'அபயசூத்ரா' என்னும் மஞ்சள் நூலைக் கட்டிவிட்டார் என்று சொன்னேனே, நினைவிருக்கிறதா? அந்த நூலில், இந்தக் கைலாஷிலிருந்து உருகி வரும்



புனிதநீரை நனைக்கச் செய்தார். அதாவது அபயசூத்ரா, எங்களை அபாயத்திலிருந்து காப்பாற்றுவதாக அர்த்தம்.

அனைவரும் அமைதியாக கைலாஷைப் பார்த்தபடி அமர்ந்தோம்.

வலது பக்கம், இன்னும் மேலே, மனிதர்கள் நடக்கமுடியாத அந்தப் பனிக்கட்டி நதியில், நான் அந்தக் காட்சியைக் கண்டேன்.

டிஷ்பு நாய், அங்கே நின்று கொண்டிருந்தது! கைலாஷையும், எங்களையும் மாறிமாறிப் பார்த்தது.

எங்கள் யார் கண்ணிலும் படாமல், எங்களைத் தாண்டி அது எப்படி அவ்வளவு உயரத்திற்குச் சென்றது? அதுவும் எதிர்ப்பக்கம் உள்ள உறைந்த நதியின் மேலேயே நடந்தபடி? எல்லாம் சரி, அங்கே அது என்ன செய்தது தெரியுமா?

பனிக்கட்டிப் பாதையில் நின்றபடியே கைலாய மலையை நிமிர்ந்து பார்த்தது. ஒருமுறை குரைத்தது. எங்கள் கூட்டத்தைப் பார்த்தது. ஒரு முறை குரைத்தது. அதன் வால் படபடவென அடித்துக்கொண்டது.

மறக்காமல் என் காமிராவில் வீடியோ மோடை இயக்கி அந்த நாய் செய்வதையெல்லாம் பதிவு செய்தேன்.





சுவாமி உல்லாசா

அந்தப் பனிக்கட்டிப் பாதையில் சில முறை படுத்து உருண்டது. பிரதட்சணமாய்ச் சுற்றியது. அந்த பனிக்கட்டியை அப்படியே நக்கிச் சுவைத்தது! மீண்டும் கைலாஷைப் பார்த்துக் குரைத்தது.

சடசடவென அந்தத் திகிலான பாதையில் திரும்பி, கீழே ஓடிவர ஆரம்பித்தது.

அது என்ன செய்கிறது? ஏன் அப்படி தினமும் வருகிறது? அந்த நாய் யார்? ஒருவேளை பைரவரோ? என்றெல்லாம் நான் நினைத்துக் கொண்டேன்.

இந்த டிஷ்பு நாய் 30 வருடங்களாகத் தினமும் கைலாஷ் வருவதாக எழுதியிருந்தேன் அல்லவா?

அதைப் படித்துவிட்டு, ஒருவர் பரவசத்துடன் என்னிடம் பேசினார். அவர், சிறந்த எழுத்தாளரும், ஆன்மிக வாதியுமான திரு.ஜ.ரா.சுந்தரேசன் (பாக்கியம் ராமசாமி) அவர்கள்தான்.

என் கையைப் பிடித்துக்கொண்டு அப்படியே உருகினார். 'ஆஹா, ஆஹா' என்று பரவசப்பட்டார்.

"முப்பது வருடமாக அந்த நாய் கைலாஷ் வருவதாக எழுதியிருந்தாயே, **மகாபாரதக் காலத்திலிருந்தே அந்த நாய் வருகிறது. அது சாதாரண நாயல்ல, அது யார் தெரியுமா?**" என்று கேட்டார்.

"சொல்லுங்கள் சார்?"

திரு ஜ.ரா.சு. அவர்கள் நெகிழ்வுடனும், பரவசத்துடனும் சந்தோஷத்துடனும் சொன்ன அந்த மகாபாரதக் கதையை அடுத்த அத்தியாயத்தில் உங்களுக்குச் சொல்கிறேன்.

பார்வதி பாறை

'திராபுக்'கிலிருந்து கைலாஷ் பரிக்ரமா செய்யும் இரண்டாவது தினத்தில் வரும் டோல்மா பாஸ் ஒரு முக்கியமான இடம். டோல்மா பாஸில் செல்லும் ஒவ் வொரு மனிதனின் உடலும், தேவசரீரமாக மாறுவதாக நம்பிக்கை.

இங்கே ஒரு பெரிய பாறை இருக்கிறது. 8 அடி உயரம், 12 அடி நீளம், 5 அடி அகலம் கொண்ட இந்தப் பாறையை பார்வதிதேவியாக பக்தர்கள் வழிபடுகிறார்கள்.

இந்த பார்வதி பாறையில் பக்தர்கள் தங்கள் தலையை வைத்து வணங்குகிறார்கள். வலமும் வருகிறார்கள். திபெத்தியர்களின் முக்கியமான புனித இடம் இது.

32

நீயா? நாயா?

பகவான் கிருஷ்ணர், பூவுலகில் தன் அவதாரத்தை முடித்துக் கொண்டு பரமபதம் சென்றுவிட்ட காலம் அது!

கிருஷ்ணரே சென்றுவிட்ட பிறகு பஞ்ச பாண்டவர்களுக்கும் திரௌபதிக்கும் மட்டும் இங்கே என்ன வேலை?

அவர்கள் அறுவரும், இந்த உலகைவிட்டுக் கிளம்ப முடிவெடுத்தார்கள்.

சொர்க்கம் செல்ல ஒரே வழி கைலாஷ்தானே?

அதனால் சகாதேவன், நகுலன், பீமன், அர்ஜுனன், தர்மன் ஆகிய பஞ்சபாண்ட வர்களும், பத்தினி திரௌபதியுடன் கைலாஷ் கிளம்பினார்கள்.



நடந்தார்கள். நடந்தார்கள். அவர்கள் 6 பேரையும் இன்னொரு வர் தொடர்ந்து வந்தார். அது ஒரு நாய்! (டிஷ்புவின் கொள்ளுத் தாத்தாவின் எள்ளுத் தாத்தா?)

கைலாஷை நெருங்க, நெருங்க, முதலில் திரௌபதி தரையில் விழுந்து உடலை நீத்தாள்.



தர்மராஜா

அடுத்ததாய் பஞ்சபாண்டவர்கள் ஒவ்வொருவராய் மடிய ஆரம்பித்தார்கள். அந்த நாய் தொடர்ந்துகொண்டே வந்தது.

கடைசியில் மிஞ்சியது தர்மன் மட்டும்தான். கூடவே அந்த நாயும்!

தர்மனும் சோர்வடைந்தான். திணறினான்.

அப்போது தேவேந்திரன் அங்கே விமானத்தில் வந்தான். தர்மனைப் பார்த்தான்.

"வா, தர்மா, வந்து ஏறிக்கொள். உன் சகோதரர்களும் பத்தினியும் உடலை இங்கே நீத்துவிட்டு சொர்க்கம் சென்று விட்டார்கள். ஆனால், நான் உன் உடலுடனேயே உன்னை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறேன். வா...! வா....!" என்றான்!

தர்மன், தங்கள் கூடவே வந்த நாயைப் பார்த்தான்.

"தேவேந்திரனே, இந்த நாய் பாவம். அதுவும் எங்களை நம்பி இத்தனை தூரம் வந்துவிட்டது. அதனால் இந்த நாயையும் அழைத்துக்கொண்டு வருகிறேன். அனுமதிப்பாயா" என்றான்.

இந்திரன் சினந்தான். **"என்னது சொர்க்கத்திற்கு நாயை அழைத்துச் செல்வதா? அதுவும் என் புஷ்பக விமானத்திலா? முடியாது!"**

"அப்படியானால் நானும் வரவில்லை."

இந்திரன் யோசித்தான். விளையாட்டு காட்டினான்.

"தர்மனே, என்னுடன் ஒருவர்தான் சொர்க்கத்திற்கு வரலாம். அது நீயா? நாயா? என்று முடிவு செய்துகொள்."

பிரார்த்திக்கும் நாய்



தர்மன் அந்த நாயைப் பார்த்தான். அதன் முதுகைத் தடவிக் கொடுத்தான். அதைத் தூக்கி, தேவேந்திரனின் விமானத்தில் வைத்தான். **"இந்த அன்புள்ள நான்கு கால் பிராணியையே நீ சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்"** என்று சொல்லிவிட்டு கைலாஷ் நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

"நில் தர்மனே! வாரும் சொர்க்கத்திற்குச் செல்லலாம். உன் தர்ம குணத்திற்கு ஈடு இணையே கிடையாது" என்று அந்த நாய் பேசிற்று!

திரும்பினான் தர்மன்!

நாய், தேவ உருவில் மாறிற்று.

நாய் உருவில் வந்தவர் யார் தெரியுமா?

தர்மத்தின் தலைவன்! ஆமாம் எமதர்மன்!

என் மதிப்பிற்குரிய எழுத்தாளர் ஜ.ரா.சுந்தரேசன் (பாக்கியம் ராமசாமி), இந்த மகாபாரதக் கதையைச் சொல்லி முடித்ததும் என் கண்கள் பனித்தன.

நாமெல்லாம் அறியாமல், எத்தனையோ பெரிய விஷயங்கள், காலம் காலமாக நடந்து வருகின்றன. அதற்கான காரணமோ, காரியமோ நமக்கு அப்பாற்பட்டது.

வேகவேகமாக தினமும் நடந்து... ஓடி கைலாஷை தரிசிக்கும் டிஷ்டு நாயை நான் பைரவரின் வடிவமாகத்தான் எண்ணியிருந்தேன்.

சிவனின், உக்ர வடிவமான பைரவர், பக்தர்களைப்

பாதுகாப்பாக கைலாஷ் வரை கொணர்ந்து சேர்க்கும் பணியை எடுத்துக் கொண்டிருக்கிறாரோ என்று நான் எண்ணியிருந்தேன்.

ஜே.ஆர்.எஸ். சார், எமதர்மனே, நாயின் வடிவில் வந்ததாகக் கூறுகிறார்.

என்னுடன் பயணித்த நண்பர் சதீஷ், "இந்த நாய் முன் ஜென்மத்தில் ஒரு முனிவராக இருந்திருக்கக்கூடும். பூர்வ ஜன்ம வாசனையால் இங்கே தினம் வருகிறதோ என்னவோ?" என்றார்.

"ஏதோ தவறு பண்ணி நாயாகப் பிறந்த மகாராஜாவாக இருக்கக்கூடும். பிராயச்சித்தமாக இங்கே வந்து போகிறது" என்றார் ஒருவர்.

"அதெல்லாம் கிடையாது. சாதாரணமாகவே நாய்கள் இலக்கில்லாமல் மூச்சிரைக்கச் சுற்றும். அதுபோல்தான் இதுவும்" என்றார், மற்றவர்.

பைரவரோ, எமதர்மனோ, முனிவரோ, மன்னவனோ



அல்லது சாதாரண தெரு நாயோ... என் சிற்றறிவுக்கு எட்ட வில்லை. அந்த டிஷ்பு நாய் எங்களையெல்லாம் ஒருமுறை பார்த்துவிட்டு, விடுவிடுவென்று கீழிறங்கி, ஓடிற்று.

நாங்கள் அனைவரும் கைலாயத்தின் இந்த வடக்கு முகம் அருகில் உள்ள முகட்டில் அமர்ந்து, கைலாஷைப் பார்த்த படியே தியானம் செய்தோம்.

அத்தனை அருகில் சிவன்!

அந்தப் புனித மலையின் மேல் பனி உருகி வழிவது பற்பல உருவங்களைக் காண்பித்தது. பிள்ளையார்போல, முருகன் போல, சிவன் போல, தமிழ்மன்னன் ராவணன் போல், ஏன் டிஷ்பு நாய்போல் கூட ஓர் உருவம் தெரிந்தது.

மனம்போல் மார்க்கம்!

''எந்த உருவத்தையும் அங்கே உருவகித்துப் பார்க்காதீர்கள். பேசாமல் உள்வாங்குங்கள்'' என்று சத்குரு சொல்லியிருந்தாலும், அப்படியெல்லாம் **இறை உருவங்களைக் காண்பது ஆலயமோ, சிற்பங்களோ இல்லாமல் இருக்கும் அந்த அந்தகாரமான இடத்தில் நன்றாகத்தான் இருக்கிறது!**

பார்த்தேன். பார்த்தேன். ஆசை தீரும்வரை பார்த்தேன். மீண்டும் இப்படி ஒரு திவ்ய தரிசனம் நமக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ என்று ஆவலாக, பக்தியாக, புனிதமாக, நெகிழ்ச்சியாக, வருத்தமாக, சந்தோஷமாக, பரவசமாக, த்ரில் லாக, பெருமையாக என்று எல்லா உணர்வுகளும் கலந்து பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

கைலாயத்தின் உச்சியிலிருந்து பனி உருகி, ஐஸ்கட்டியாக ஓடி, உருகி பெருகுகிறதே, அந்தப் புனித நீரை என்னால், முடிந்த அளவு சேகரித்துக்கொண்டேன். சுமை தூக்கிக்கும் அந்தப் புண்ணியத்தைக் கொடுத்தேன்! (துட்டு தரணும்!)

குமுதம் பக்தி ஸ்பெஷல் தீபாவளி இதழுடன் இணைப்பாக புண்ணிய கங்கை நீருடன் நான் கொணர்ந்த கைலாஷ் நீரையும் கலந்து புனித கைலாஷ் நீர் மற்றும்



புண்ணிய கங்கை நீர் என 2in1 ஆக வாசகர்களுக்குத் தந்ததை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

மேலே ஏறுவது எப்படி இருந்ததோ அதைவிடச் சிரமமாக இருந்தது கீழிறங்குவது. சறுக்கிவிட்டால் அதோ கதிதான். பார்த்துப் பார்த்து இறங்கினோம். சிரமமான இடங்களில் சுமைதூக்கி, நமக்குக் கை கொடுக்கிறார்.

இரண்டு மணி நேரமாயிற்று திராபுக் ஆசிரமத்திற்கு மீண்டும் வர.

மூச்சிரைக்க ஆசிரமத்திற்குள் நுழைந்து, வடக்குப் பக்கம் ஆசை ஆசையாய் திரும்பிப் பார்த்தால்...

கைலாஷைக் காணவில்லை!

33

பரிக்ரமா!

மூச்சிரைக்க திராபுக் ஆசிரமத்திற்குள் நுழைந்து ஆசை ஆசையாய் வடக்குப் பக்கம் திரும்பிப் பார்த்தால்...

கைலாஷைக் காணவில்லை!

யாரோ கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். ஆமாம். கடத்தியவர் வாயு பகவான். மேகம், பனி மூட்டத்தை அடர்த்தியாகக் கலந்து மூடியதில் கைலாஷ் துளிக்கூடத் தெரியவில்லை.

இது அடிக்கடி நடக்கும் சம்பவம். பனி மூட்டம், சமயத்தில் மூன்று நான்கு நாட்கள்கூட இருக்கும். ஆசை ஆசையாய் கைலாஷ் வந்த பலர், இந்தப் பனி மூட்டம் காரணமாகக் காத்திருந்து சூழல் ஒப்புக்கொள்ளாததால், கைலாஷைக் காணாமலே திரும்பிப் போன கதையும் உண்டு.

கைலாஷ் வரை பக்தனை அழைத்துவிட்டு, தரிசனம் தராமல் திருப்பி அனுப்பும் விளையாட்டை அந்த சிவபெருமான் ஏன் செய்கிறார் என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும்.



நல்லவேளை, எங்களுக்கு அப்படி ஒரு சம்பவம் நிகழவில்லை. கடவுளின் கருணைக்கு நன்றி.

இந்த திராபுக்கிலிருந்து இரண்டு தினங்கள் நடந்தால் 'பரிக்ரமா' எனப்படும் கயிலையைச் சுற்றி வெளி வலம் வரலாம்.

அது தவிர 'இன்னர் பரிக்ரமா' எனப்படும் உள்வலமும் உண்டு. இந்த உள்வலம் வருதல் மிகக் கடினமானது. பனிச்சரிவும், புதைகுழியும், காற்றுக்குறைவும் இருக்கும் பகுதி அது. பெரும்பாலும் யோகிகளும், அனுபவப்பட்ட திபெத்தியர்களும் மட்டுமே உள் பரிக்ரமா செல்வார்கள். இந்த உள்வலம் வருவது, சிவலிங்கத்தின் மேலேயே கால் வைப்பதற்குச் சமம் என்று கருதுவதால் நம்மைப் போன்றவர்கள் உள்பரிக்ரமா செய்வதில்லை. ஈஷா கைலாஷ யாத்திரையைப் பொறுத்தவரை இந்த திராபுக் வடக்கு முக தரிசனத்துடன் கயிலைப் பயணத்தை நிறைவு செய்துவிடுகிறார்கள்.

சத்குரு, பரிக்ரமா என்னும் கைலாஷ் மலை வலம் வருவதை ஆதரிப்பதேயில்லை.

ஏன்?

கடுமையான பயணம் என்பதாலா? அழைத்துவரும் பயணக் குழுவினரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால்,

நிறுவனத்தின் பெயர் கெட்டுவிடும் என்பதாலா? துணிச்சலாக சத்குருவிடம் இந்தக் கேள்வியைக் கேட்டும் விட்டேன்.

கடகடவென பெரிதாய்ச் சிரித்தார் சத்குரு.

"எனக்கு எங்கே சென்றாலும் நேர்மையாக, நேராகப் போகவேண்டும் என்றுதான் ஆர்வம். சுற்றிச் சுற்றிப் போகவேண்டும் என்று ஆர்வம் இல்லை (சிரிக்கிறார்).

கைலாஷ் என்பது ஓர் அற்புதமான நூலகம் மாதிரி. நான் கைலாஷிற்கு மக்களை ஏன் கூட்டிச் செல்கிறேன் என்றால், அந்த நூலகத்தின் ஒரு கதவையாவது திறந்து, மக்களை உணர வைப்பதற்காகத்தான்.

பரிக்ரமா என்னும் மலையைச் சுற்ற ஆரம்பித்தால், வலம் முடியும்வரை கைலாஷ் மலையே கண்ணில் தெரியாது. சும்மா நடந்துபோவது, மனதுக்கு ஒரு சந்தோஷம். அவ்வளவுதான். நானும் போய் சுற்றி வந்துவிட்டேன் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்.

ஒரு விழாவில்...

என் நோக்கம் அது அல்ல. கைலாஷ் கூடவே நாம் இருக்க வேண்டும். அதை உணரவேண்டும். அந்த நூலகத்தின் சக்தியை கிரகித்துக் கொள்ள வேண்டும்.

நூலகம் சென்றால் எது உங்களுக்குப் பிடித்த சப்ஜெக்டோ, அந்த இடத்துக்கு மட்டும் போகிறீர்கள் அல்லவா? அது மாதிரி இந்த திராபுக் வடக்கு முகம், அடிப்படையான ஆன்மிகத்திற்கு, உடல் நன்மைக்கு மிகவும் உபயோகமான ஓர் இடம்.

வெளிப் பரிக்ரமா என்பது நூலகத்தின் வெளியில் ஒரு சுற்று சுற்றி வருவது. அங்கே எந்தப் புத்தகத்தையும், நீங்கள் காணமுடியாது.

அதனால் இந்த வடக்கு முகத்திற்கு மட்டும் பக்தர்களை அழைத்து வந்து, உணர வைத்து, திருப்பிக் கொண்டு வந்து விடுகிறேன்.

திபெத்-சிறுமிகள்

இதுவே போதும். இதற்கு மேலே ஆர்வம் உள்ளவர்கள் உள் பரிக்ரமா செய்யலாம். அது, நூலகத்தின் உள்ளே சென்று எல்லாத் துறைகளையும் பார்ப்பது போன்றது.

ஆனால், அதற்கு உங்களுக்கு அட்மிஷன் இல்லை. அங்கே போவது சிரமம் என்பதால் அப்படிச் சொல்கிறேன்.

இப்படியிருக்கையில் வெளிப்புறம் சுற்றி வந்தால் என்ன பிரயோஜனம்?

ஒன்றுமே கிடையாது. அதனால் பரிக்ரமா செய்வது வெறும் மனதிருப்திக்காக மட்டும்தான். அல்லது உங்கள் உடல் சக்தியாக இருக்கிறதா, இல்லையா என்பதை டெஸ்ட் செய்வதற்காக சும்மா சுற்றிவிட்டு வரலாம்.

ஆனால் உணர வேண்டும் என்றால் நாம் கைலாயத்திற்கு நெருக்கமாகப் போய் உட்கார்ந்துகொள்ள வேண்டும். தேவையான சாதனாக்களைச் செய்யவேண்டும். விஞ் ஞானபூர்வமாக உணர வைக்கவேண்டும் என்று நான் விரும்புவதால், எனக்கு மலையைச் சுற்றி வரவேண்டும் என்கிற ஆசை வரவேயில்லை."

மிக நீண்ட உரைபோல் என்னிடம் பதில் தந்தார் சத்குரு.

"வேறு ஏதாவது கேள்வி இருக்கிறதா குமுதம் வாசகர்களுக்கு?" என்றார்.

என்னிடம் மீதம் இருந்த இரண்டு கேள்விகளில் ஒன்றைக் கேட்டேன்.

உடனே சத்குரு என்னை உற்றுப் பார்த்தார். அவரது கண்கள் சிவந்தன. கோபம் கொப்பளித்தது. உட்கார்ந் திருந்தவர் 'சடக்'கென எழுந்துவிட்டார்.

சினத்துடன் என்னை முறைத்தார். பேச ஆரம்பித்தார்.

நான் விதிர்விதிர்த்துப் போனேன்.

கைலாஷ் ஸ்பாட்: தீர்த்தபுரி

வெந்நீர் ஊற்று உள்ள இடம்.

குளிர்ச்சியான இந்த இடத்தில் எப்படி வந்தது வெந்நீர் ஊற்று?

பஸ்மாசுரன் எரிந்த இடம் இது.

அவனின் கதை உங்களுக்குத் தெரியுமா?

யார் தலையில் கை வைத்தாலும், அவர்கள் அழிந்துவிடவேண்டும் என்ற பயங்கர வரத்தை சிவனிடம் பெற்றான் பஸ்மாசுரன்.

கடைசியில் அந்த ஈசன் தலையிலேயே கை வைக்க முயற்சித்தான்!

அப்புறம் என்ன?

மகாவிஷ்ணு, மோகினி அவதாரம் எடுத்து, அசுரன் முன்பு வந்து நின்றார். ஆடிப்பாடி அவனை மயக்கினார்.

"நன்கு தலை தேய்த்து நீராடி வந்தால் உன்னைக் கூடுவேன்" என்றாள் மோகினி.

மோக மயக்கத்தில் அவன் நீராடும்போது தன் தலையிலேயே கை வைக்க...

அவனது மண்டை டமால்!

அவனது மண்டை வெடித்துச் சிதறிய இடத்தில் அமைந்திருப்பதுதான் தீர்த்தபுரி வெந்நீர் ஊற்று!

34

ஹரி ஓம்!

சாந்தமாகவே எப்போதும் இருக்கும் சத்குருவையே கோபப்பட வைத்த அந்தக் கேள்வி என்ன தெரியுமா?

இதோ இதுதான்.

"சத்குரு, கைலாஷின் உச்சிக்கு மலையேறிச் செல்ல நார்வே குழு ஒன்று முயற்சி செய்ததாக ஒரு செய்தி படித்தேன். அப்படிச் செய்வது சரியா?"

அவ்வளவுதான். சத்குருவின் முகமே மாறிவிட்டது. கண்கள் சிவந்தன. கை நடுங்கியது போல் உணர்ந்தேன். சடக்கென எழுந்தவர் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்.



நான் அப்படியே விதிர்விதிர்த்து பேசாமல் நின்றேன்.

ஐந்து நிமிடம் கழித்துத்தான் சத்குரு சகஜ நிலைமைக்கு வந்தார். என் கேள்விக்கு பதிலைச் சொல்ல ஆரம்பித்தார்.

"இந்த மனிதர்களுக்கு ஒரு பைத்தியம். எதைப் பார்த்தாலும் அதன் மேல் ஏறி உட்கார வேண்டும் என்கிற பைத்தியம். அதன் மேல் போய் உட்கார்ந்து, தன்னுடைய காலடியை அங்கே வைத்துவிட்டு வந்தால் , அவனுடைய அகங்காரத்திற்கு ஒரு திருப்தி.

கோடிக்கணக்கான மக்கள் தெய்வீகமானது என்பதை உணர்ந்து , பெரிய மரியாதையுடன், தீராத பக்தியுடன் வணங்கும் ஓர் இடத்தின் மேலே போய் நான் காலை வைக்கப் போகிறேன் என்று சொல்பவர்களை என்னவென்று சொல்வது?

புனிதமான நம் நாட்டில் நமக்கு என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்? ஒரு சாதாரண புத்தகத்தைத் தெரியாமல் மிதித்துவிட்டால் கூட நாம் தொட்டுக் கும்பிடுகிறோம். சிறு வயதிலிருந்தே நமக்கு இப்படிச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அப்படி என்றால் புத்தகத்தில் கடவுள் இருக்கிறாரா? அப்படியில்லை. நம்முடைய முன்னேற்றத்திற்கு எவையெல்லாம் முக்கியமான காரணமாக இருக்கிறதோ, அதையெல்லாம் நாம் மரியாதையாகப் பார்க்க வேண்டும் என்று ஒரு கலாசாரமாக நமக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கைலாஷ் நம்முடைய முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய கருவி. அதன் மேல் போய் காலை வைப்பது என்று நினைப்பதே முட்டாள்தனமானது. அதனால் கயிலாயம் ஒன்றும் கெட்டுப்போகாது. இப்படிச் செய்ய நினைப்பதுதான் முட்டாள்தனம்.

உலகத்தில் எவ்வளவோ மலைகள் இருக்கின்றனவே. அங்கெல்லாம் போய் ஏற வேண்டியதுதானே? மனிதனின் அகங்காரம் இது. யாராவது ஒருவர், திறமையிலோ,



கல்வியிலோ, சாமர்த்தியத்திலோ சிறப்பாக இருக்கிறார் என்றால் அவரை மட்டம் தட்டி, அவர் தலையில் கால் வைக்கவேண்டும் என்று சிலருக்கு ஆசை. இது ஒன்றும் சாதனை கிடையாது. போய் எவரெஸ்ட் ஏற வேண்டியதுதானே? மக்கள் புனிதமான தன்மையை உணர்ந்து, வழிபடும் கைலாஷ் மேல் ஏற முயற்சிப்பது முட்டாள்தனம். அடிமுட்டாள்தனம், அவ்வளவுதான்." கொஞ்சம் டென்ஷனுடனேயே சத்குரு பதில் சொன்னதை நான் உணர்ந்தேன்.

சத்குருவுக்கு மிகவும் பிடித்த மௌனத்தைக் கொஞ்ச நேரம் கடைப்பிடித்தேன். அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"இன்னும் ஒரு கேள்வி இருப்பதாகச் சொன்னீர்களே, அதைக் கேளுங்கள்" என்று புன்னகைத்தார் சத்குரு. கடைசி அத்தியாயத்தின் கடைசிக் கேள்வியைக் கேட்டேன்.

"கைலாஷ் சென்று வந்தவர்கள் வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும்?"



"நல்ல கேள்வி" என்று சிரித்தவர், பேச ஆரம்பித்தார். கைலாஷ் யாத்திரை சென்று வருவது என்பது மட்டுமே ஒரு சாதனையில்லை. உங்களிடமுள்ள கோபம், வெறுப்பு, பொறாமை போன்ற தீய விஷயங்களில் குறைந்தபட்சமாவது இழக்க வேண்டும். கோபப்பட்டே பழகியவர்கள் அத்தனை சுலபமாகக் கோபத்தை விட முடியாதுதான். ஆனால் இனி **கோபம் வரும்போது கெட்ட வார்த்தைகளைப் பிரயோகிக்கக்கூடாது என்றாவது முடிவெடுக்கலாம். அல்லது வாயை மூடிக்கொண்டிருக்கலாம்.** *(சிரிக்கிறார்.)*

கைலாஷிலிருந்து திரும்பும்போது தண்ணீர், கூழாங்கற்கள் மட்டுமல்லாமல் கொஞ்சம் கைலாஷையும் உங்களுடன் எடுத்து வருவீர்கள் என்று நினைக்கிறேன். உங்கள் இதயத்திலும் மனதிலும் அதை உயிர்ப்போடு வைத்துக் கொண்டிருந்தாலே, உங்கள் வாழ்வில் அது பெரும் மாற்றங்களைக் கொண்டு வரும்.

எனக்குத் தெரிந்து சிலர், வாழ்வில் பயங்கர துன்பம் நேரும் சமயம், இந்தக் கைலாஷ் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒரு பயணம், அவர்களின் முயற்சி

அதிகம் இல்லாமலேயே அவர்களின் வாழ்வை மாற்றி மேம்படுத்தி உள்ளது. காரணம் அவர்கள் கைலாஷின் சின்ன ஒரு பகுதியை அதன் அதிர்வைத் தங்களுடன் எடுத்துச் சென்றதுதான். நீங்களும் அப்படிச் செய்தால், **அது உங்கள் வாழ்வில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். நீங்கள் பார்ப்பதையும், அறிந்து கொள்வதையும்விட அங்கே அதிக விஷயம் இருக்கிறது**" சொல்லி முடித்த சத்குரு, "குமுதம் வாசகர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவியுங்கள்" என்றார்.

தலை வணங்கி அந்த வாழ்த்துகளை ஏற்றுக் கொண்டேன்.

இதோ என் கைலாஷ் யாத்திரை இறுதிக் கட்டத்திற்கு வருகிறது. இந்த திராபுக் ஆசிரமத்திலிருந்து வந்த வழியே செல்ல வேண்டியதுதான். ஊருக்குச் செல்ல ஒரு வாரம் ஆகும்.

ஆமாம். நடந்து அடிவாரம் வரை சென்று, அங்கே எங்களுக்காகக் காத்திருந்த டயோட்டா லாண்ட்க்ரூஸர் காரில் ஏறி வந்த வழியே திபெத்திய பாலைவனம்




ஓம்கார தரிசனம்!

மலைச்சாரல், சோலைவனம் என்று எந்த ஊர்களில் எல்லாம் இரவு தங்கினோமோ அதே ஊர்களில் தங்கி, (பரயாங், சாகா, ஜாங்மூ) நேபாளம் வந்து சேர்ந்தோம். பத்திரமாய் எங்களை அழைத்துச் சென்ற திபெத்திய டிரைவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகப் பரிசுகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தோம். நேபாளத்தில் மேலும் சில ஆலயங்களை தரிசனம் செய்தோம். எங்கள் குழுவினரிலேயே உற்சாகமான பயணி யார்? டென்ஷன் பார்ட்டி யார்? ரஜினி ஸ்டைல் யார்? மிஸ்டர் கூல் யார்? மிஸ்டர் லொடலொட யார்? என்றெல்லாம் ஜாலியாய்ப் பரிசுகள் கொடுத்துக் கைதட்டி மகிழ்ந்தோம். பாடல் போட்டு அனைவரும் நடனமாடினோம்.

இன்னும் சொல்ல எத்தனையோ உண்டு.

விவேக் என்ற சக பயணி, யார் என்ன உதவி கேட்டாலும் கொஞ்சம் கூட அலுத்துக் கொள்ளாமல் ஓடி ஓடிச் செய்தார். எங்களுடன் வந்த லதா பாண்டித்துரை, விவேக்கின் கையைப் பிடித்துக் கொண்டு, நெகிழ்ந்து,

'சொந்தக்காரர்களுக்கே உதவ அனைவரும் தயங்கும்போது, யார் யாருக்கோ நீங்கள் செய்யும் தொண்டு மெய்சிலிர்க்க வைக்கிறது' என்று கண் கலங்கியதைச் சொல்லவா?

திபெத் சாப்பாடு எல்லாமே உப்புச் சப்பில்லாமல் இருக்கும் என்பதால், திருச்சி நீலக் குமார் ரகசியமாக காரமான ஊறுகாய்களைக் கொண்டு வந்து அனைவருக்கும் தந்துதவ, அதை சத்குரு கண்டுபிடித்து, "சிலர் ஊறுகாய் சாப்பிடுகிறீர்கள் போலிருக்கிறது. பாருங்கள். நம்மால் பத்து நாள் கூட நாக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. **என்னவோ நாமெல்லாம் புலனடக்கம் தெரிந்தவர்கள் என்று நினைத்திருந்த மாயை எல்லாம் உடைந்து சிதறுகிறது பாருங்கள்...**" என கிண்டல் அடிக்க, நீலக் குமார் அண்ட் கோ வெட்கத்துடன் ஊறுகாயைத் தூக்கியெறிந்ததைச் சொல்லவா?

கைலாஷின் நினைவாகப் பலரும் அங்கே கிடந்த கற்களைப் பொறுக்கிக்கொள்ள, "கைலாஷின் முன்னால் கற்களாகப் பிறக்க அவை எத்தனை தவம் செய்து இங்கே வந்ததோ? அவற்றை இங்கிருந்து பிரித்து நம் ஊருக்கு எடுத்துச் செல்வது சரியா?" என்று போகிறபோக்கில் சதீஷ் சொன்ன தத்துவத்தைச் சொல்லவா?

இதுபோல் நூறு சம்பவங்கள், நூறு நினைவு கள், அவற்றை யெல்லாம் ஆசையு டன் அசை போட்டபடியே காத்மண்டு விலிருந்து டெல்லி வந்து, அங்கிருந்து நம் சிங்காரச் சென்னை! (இட்லி வடை சாப்பிட்டு எத்தனை நாளாச்சு!)

நண்பர் சுப்ரமணியுடன் மயிலாப்பூர் வழியாக வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது, மயிலை கபாலீஸ்வரர், கோயில் கோபுரத்தில் நியான் விளக்குகளில் 'மயிலையே கயிலை. கயிலையே மயிலை' என்ற எழுத்துகள் மின்னியதைப் பார்த்தபோது மெல்லிய புன்னகை என்னுள் எழுந்தது.

அந்த கயிலாயக் கடவுள் அனைவரையும் காத்து ரட்சிக்க வேண்டும் என்று கை கூப்பித் தொழுதபடியே இந்த இனிய தொடரை நிறைவு செய்கிறேன்.

என்றென்றும் உற்சாகம் தொடரட்டும்.

சம்போ சிவ சம்போ!!

ஹரி ஓம்...!

தொடரை நிறைவு செய்கிறேன்.

“கைலாயம் அளவற்ற அருளை வழங்கவல்லது. நீங்கள் மிகவும் தளர்வடைவதற்கு முன்பு அல்லது ஓய்வடைவதற்கு முன்பு கைலாயம் சென்று அதன் சக்தியான அதிர்வுகளில் திளைத்திட வேண்டும். இது என் விருப்பம் மற்றும் ஆசை.”

Sadhguru



ப்ரியா கல்யாணராமன்